வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால்நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1995 ஆனி திங்கள் 15-ம் நாள் (28—6—1964) ஞாயிற்றுக்கிழமை ஸபர் 17 | இதழ் 5

# சிம்மாசனப் பிரசங்கத்தில் வரும் மொழி 'சலுகை'?

## திருமலைத் தீர்மானத்தின் எதிரொலியா?

தமிழரசாரின் திருமலைத் தீர்மானத்தையிட்டு ஆளும் கட்சி வட்டாரங்களில் பரபரப்பான நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இம் முறை சிம்மாசனப் பிரசங்கத்தில் சில அவசர மாற்றங்களைப் புகுத்திவிட ஆளும் கட்சியினர் சிலர் முயற்சித்துவருவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. மாவட்ட சபை மசோதாவையும் தமிழ் உபயோகம் சம்பந்தமான மசோதாவையும் இட்டு சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பீடு இருக்கும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. சிங்களத்தில் தேர்ச்சி பெறாத அரசாங்க ஊழியர்களை மாவட்டசபைகளில் கடமையாற்றும் பொருட்டு வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பவும் பிரசங்கம் வழிவகுக்கலாம் என்றும் வதந்தி அடிபடுகிறது.

தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையைக் கோரும் பொருட்டு தங்கள் பாராளுமன்ற ஸ்தானங்களைத் துறக்கத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தீர்மானித்ததைத் தொடர்ந்து ஆளும் கட்சிக்குள் பரபரப்பு ஏற்பட்டிருப்பதாக அறியக் கிடக்கிறது. இது அவர்களுக்கு ஒரு திடீர் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாம்.

சிம்மாசனப் பிரசங்கத்தைத் தயாரித்துவரும் குழுவினரிடமும் பலத்த வாதப் பிரதிவாதங்கள் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது. தமிழ்பேசும் மக்களின் தலைவர்களை ஓரளவாவது சாந்தப்படுத்த வேண்டும் என்றும் அதற்கான வழிவகைகளை பிரசங்கத்தில் சேர்த்துவிட வேண்டும் என்றும் ஒரு சாரார் கருத்து வெளியிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

மாவட்ட சபைகள் மசோதா சம்பந்தமாக இம்முறையும் குறிப்பிடப்படுமாம். வரவு-செலவு திட்டத்தின் பின்னர் முதல் மசோதாவாக மாவட்ட சபைமசோதாதான் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று பலர் வற்புறுத்தியுள்ளனர் என்று தெரிகிறது.

பொதுத் தேர்தல் அண்மிவிட்டமையினாலும், கூட்டரசு ஏற்பட்டமையினாலும் இம்முறை சிம்மாசனப் பிரசங்கம் ஓரளவு முக்கியத்துவம் பெற்றதாக விருக்குமாம் என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றனர். பொதுத்தேர்தலுக்கு இடையில் ஒரே ஒரு வருடம் இருப்பதனால், பிரசங்கத்தில் குறிப்பிடப்படும் விடயங்கள் ஓரளவாவது நிறைவேற்றப்படவேண்டும் என்பதனால் பிரசங்கம் தயாரிப்பதில் விசேட கவனமும்கண்காணிப்பும் இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

மாவட்ட சபைகள் மசோதாவின் மூலமும், சிங்களம் பயிலாத அரசாங்க ஊழியர்களை வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பி வைப்பதன் மூலமும் இப்போதுள்ள பிரச்சினைகளை ஓரளவு சுமுகமாகத் தீர்த்துவிட சிலர் கருதுகின்றனராம். ஆகவே சிம்மாசனப் பிரசங்கத்தில் மாவட்ட சபைகள் பற்றிய குறிப்பீடு நிச்சயம் இடம் பெறும் என்று விடயமறிந்த வட்டாரங்களில் வதந்தி அடிபடுகிறது.

தமிழ் உபயோகம் சம்பந்தமான மசோதா பற்றியும் சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்படலாம் என்றும் சொல்லப்படுகிறது.

கூட்டாட்சி ஒப்பந்தத்தில் தமிழ் உபயோகச் சட்டத்தை அமுல் நடத்துவதென்ற அம்சம் சேர்க்கப்பட்டிருப்பதால், அடுத்த ஒரு வருடகாலத்துள் அதனை அமுல் நடத்தி விட வேண்டுமென்று ஆளும் கட்சியில் சிலர் வற்புறுத்தி வருகின்றனரென்று அறியப்படுகிறது.

## தமிழ் மட்டும் படித்த ஊழியர்கட்கு இடமில்லை

## திறைசேரியின் கதவடைப்பு

சிங்களமோ, ஆங்கிலமோ படிக்காமல் தமிழ் மொழி மட்டும் படித்தவர்கள் அரசாங்க சேவைக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவதைத் தற்காலிகமாக நிறுத்தி விடுவதென அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

தமிழ் மட்டும் படித்தவர்களை அரசாங்க சேவைக்குச் சேர்த்துக் கொள்வதை நிறுத்துவதற்கு பொதுச் சேவைக் கமிஷன் கட்டளையிடவேண்டுமென திறைசேரி யோசனை கூறியிருக்கிறதாம்.

தமிழ் மட்டும் படித்து அரசாங்க சேவையில் சேருபவர்களுக்குச் சிங்களம் படிக்க மூன்று வருடங்கள் அவகாசம் கொடுக்கப்படுகிறது. இந்த மூன்றாண்டுகளிலும் அவர்கள் எந்த வேலையும் செய்ய முடியாதிருக்கின்றனராம். காரணம் அரசாங்க அலுவல்கள் எதுவும் தமிழில் நடத்தப்படாதிருப்பதே.

அண்மையில் ரயில்வே அதிபர் திரு. ரம்பாலா தமிழ் மூலம் கல்வி பயின்று அரசாங்க சேவையில் சேர்ந்த 26 எழுது வினைஞர்களுக்குத் தனது அலுவலகத்தில் வேலை கொடுக்க மறுத்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

திறைசேரியின் யோசனைக்கேற்ப பொதுச் சேவைக் கமிஷன் தமிழ் மட்டும் படித்தவர்களைப் பொதுச் சேவையில் சேர்த்துக் கொள்வது பற்றி புதிய கட்டளை பிறப்பிக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பெண்கள் கல்லூரிகளில் தமிழுக்கு மூடுவிழா நடைபெறுகிறது

### கல்வி இலாகாவின் புறக்கணிப்பு தீவிரமடைகிறது

கொழும்பிலுள்ள தமிழ் மாணவ, மாணவிகளின் கல்வி வசதிகளைக் குறைத்துவருவதில் கல்வி இலாகா முழுமுரமாக ஈடுபட்டு வருவதாக தெரியவருகிறது. கொழும்பு தெற்கிலுள்ள ஆறு பாடசாலைகளில் தமிழ்ப் பகுதிகள் மூடப்பட்டுள்ளன. இதனால் தமிழ் மாணவர்களும் பெற்றோர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு தெற்கிலுள்ள 6 பெண்கள் கல்லூரிகளில் தமிழுக்கு மூடுவிழாச் செய்யப்பட்டுள்ளது. இக்கல்லூரிகளில் கல்விகற்றுவந்த தமிழ் மாணவிகள் அனைவரும் வெள்ளவத்தையிலுள்ள சென்ற் கிளயார்ஸ் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளனர். இங்குள்ள தமிழ் மாணவிகளும் பல துறைகளிலும் கல்வி இலாகாவால் புறக்கணிக்கப்படுவதாகவும், சிங்கள மாணவிகளுக்குக் கிடைக்கும் பல சலுகைகள் மறுக்கப்படுவதாகவும் நம்பகமான செய்திகள் கிடைத்துள்ளன.

கொழும்பு தெற்கில் தமிழ்பேசும் மக்கள் கணிசமான தொகையினராகவுள்ளனர். தங்கள் குழந்தைகளுக்குப் போதுமான கல்வி வசதிகள் கிடைக்காமல் பெரிதும் துன்புறுகின்றனர்.

இப்பகுதியிலுள்ள 9 உயர்தரப் பெண் கல்வி நிலையங்களில் சிங்களம் போதிக்கப்படுகிறது. இதே பாடசாலைகளில் எட்டில் சிங்களமும், 6-ல் ஆங்கிலமும், ஒரே ஒரு பாடசாலையில்மட்டும் தமிழும் படிப்பிக்கப்படுகிறது.

சென்ற் கிளாயர்ஸ் கல்லூரியில் மூன்று மொழிகளிலும் கல்வி புகட்டப்படுகிறது. ஆனால் அங்குள்ள மாணவர் தொகையினையும், ஆசிரியர்களின் விகிதாசாரத்தையும் பார்க்குமிடத்து, கல்வி அமைச்சின் பாரபட்சம் நன்கு புலனாகும்.

மும்மொழி போதிக்கப்படும் சென்ற் கிளாயர்ஸ்

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள ஆசிரியர் வரவுக்கு கண்டனம்

வட கிழக்கு மாகாணங்களுக்கு 2000 சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்திருப்பதை எதிர்த்து பிரசாரக் கூட்டங்கள் நடாத்துவதென்று கடந்த வார இறுதியில் திருமலையில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சிச் செயற் குழு முடிவு செய்துள்ளது. பிரசாரக் கூட்டங்கள் யூலை மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகும். யூலை மாதம், 11-ம் திகதி யாழ்ப்பாணத்திலும், 12-ம் திகதி ஊர்காவற்றுறையிலும், 13-ம் திகதி மூல்லைத்தீவிலும், 18-ம் திகதி வட்டுக்கோட்டையிலும், 19-ம் திகதி பருத்தித்துறையிலும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறும் என்று தமிழரசுக் கட்சித் தலைமை நிலையம் தெரிவித்துள்ளது.

## தமிழரசுத் தந்தையே புதிய தலைவர்



தமிழரசுக் கட்சியின்புதிய தலைவராக தமிழரசுத் தந்தை திரு. சா. யே. வா. செல்வநாயகம் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கடந்தவார இறுதியில் திருகோணமலையில் கூடிய தமிழரசுக்கட்சிச் செயற்குழுக் கூட்டத்தில் இம்முடிவு ஏற்பட்டது.

1949-ல் தமிழரசுக்கட்சி ஆரம்பித்தகாலத்தில் திரு. செல்வநாயகமே தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். 1954-ம் ஆண்டில் அமரர் கு. வன்னியசிங்கம் தலைவர் பதவிக்குத் தெரிவானார். திரு. வன்னியசிங்கர் 1958-ம் ஆண்டுவரை தலைமைப் பதவியை அலங்கரித்தார்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# சுயமதிப்பீட்டின் வெற்றி என்னை எழுத்தாளனுக்கியது

ஆசிரியராகக் கடமையாற்றும் இவர் அமைதியே உருவான ஒருவர். வீண் சலசலப்புக்கு சற்றேனும் இடங் கொடாது, அவ்வப்போது தரமான சிறுகதைகளையும், மதசார்புக் கட்டுரைகளையும் ஆக்கி வருகிறார். இஸ்லாமியராக இருந்த போதும், சகல சூழ்நிலையையும் கருவூலமாகக் கொண்டு சிறுகதைகளை உருவாக்கியுள்ளார். 'வேலி' என்னும் சிறுகதை இவருக்கு எழுத்துலகில் நிலையான ஒரு இடத்தைக் கொடுத்துள்ளது. மருதமுனையில் வாழும் இவர் ஊர்ப் பெயரை முதற்கொண்ட புனைப் பெயருள் மறைந்துள்ளார்.



கட்டுரையாசிரியர்

எழுத்தாளன் சமூகத்தில் கணிப்பான பிரஜை. அறிந்தோ அறியாமலோ, போற்றுதல் தூற்றுதல் கைங்கரியத்தில் எதைப் புரியப் புகுந்தாலும் சமூகம் எழுத்தாளனுக்கு உயர்ந்த இடத்தை நல்கிவிடுகிறது. 'வீரனின் வாளைவிட எழுத்தாளனின் பேனமுனை வலிவுடையது' என்பதை விஷயமறிந்தோர் அறிவர். எனவே எழுத்தாளனும் உன்னதத்தையடைய ஆசையின் சிலந்தி வலைத் தளையோடு பிறந்த மனிதன் விரும்புவது இயல்பே.

ஆசையை ஆதார சுருதியாகப் பிணிப்பதிலேயே மனித முன்னேற்றந் தங்கியிருந்தாலும், ஆசையின் நிறைவேற்றத்தைச் சாத்தியப்படுத்திக்கொள்ளும் ஆற்றல் தமக்கிருக்கிறதா என்பதனைச் சிந்தனை பூர்வமாகத் திடப்படுத்திக் கொண்டுதான் ஒருவர் காரியத்திலிறங்கவேண்டும் என்பது மானத சார்பு.

### கொடை

இத்தகைய—சுய மதிப்பீட்டுத் தராசில் மிதக்குந் தட்டிற் குந்திக் கொண்டிருப்பவர்கள் உலகத்தை வெகுளியாக்கும் மனோரதியத்துடன், சாலாத காரியத்தைச் சாதிக்கக் கச்சை கட்டும் கோமாளித்தனத்தை இன்று காணமுடிகிறது. எழுத்தாளனுக்குச் சமூகத்திற் கிடைக்குங் கீர்த்தியைக் குறுக்கு வழியிலாவது அடைந்துவிடும் நப்பாசையின் பிடர்பிடிப்பு!

'அவருக்கும் எனக்கும் அங்க அமைதியில், தேர்ந்த வகுப்பில் பயிலுந் தொழிலில் எதுவித வித்தியாசமும் இல்லையே. அவரும் எழுதுகிறார் நாமும் எழுதுவோம்' என்ற தருக்க மதிப்பைப்பற்றிக்கொண்டு எழுத்துக் கடலில் நீந்த நான் புறப்பட்டவனல்லன். சிறப்பாற்றல் படிப்புக்கும், பட்டத்துக்கும், பணத்துக்கும், குலத்துக்கும், தரத்துக்கும் அப்பாற்பட்டது; இறைவனின் அருட்கொடை.

### ஒட்டு வேலை

இயாதி வைரிக்கு ஏகமாகிவிடாது, பாதியையாவது; முடிந்தால் முழுவதையுமே பராதீனப் படுத்திக்கொள்ளும் கரிப்பினால் முளைத்த களைகள்—

## மருதூர்க் கொத்தன்

சுயமதிப்பீட்டுக் கணக்கெடுப்பில், எழுத்துக்கும் உனக்கும் தோதுப்படாது, என்ற பிரக்ஞைத் தெளிவின் எச்சரிக்கையையும் மீறி களத்திலிறங்கிவிட்டதனால் பழைய பத்திரிகைக் கதைகளைப் பார்த்தெழுதுவோர்-

பல கதை நறுக்குகளைப் பரப்பி வைத்துக்கொண்டு, கருவை ஒன்றிலும், பாத்திரங்களை மற்றொன்றிலும், உவமை உருவகங்களை இன்னொன்றிலும், இப்படியே ஆரம்பம், திருப்பம், வளர்ச்சி, முடிவு...இத்தியாதி ஒட்டு வேலைக்காரர்கள்—

### காரணம்

மேற்போந்த விருத்தாந்தங்களை எனதாக்கிக்கொண்டு, நான் எழுத முன்வந்தவனல்லன்.

## எப்படி எழுத ஆரம்பித்தேன்

பள்ளி வாழ்க்கையின் போதே பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் படிக்கப் பழக்கப்பட்டதனால் பெற்ற விஷய ஞானம்—

வகுப்பு வியாசங்களையும், பள்ளிக்கூடச் சஞ்சிகையான 'குழந்தை'க்கு 'அண்ணல் நபி பற்றிய அவதூறு' என்ற தலைப்பில் எழுதிய சிறு கட்டுரையையும் பார்வையிட்ட, அப்போதைய பாடசாலைத் தலைமையாசிரியரான, அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன் வித்தியா தரிசகர் அவர்கள், எனது வளமான மொழி நடையையும், கட்டுரைக்கும் தன்மையையும் மெச்சி 'எதிர்காலத்தில் நீ எழுத்தாளனாக வரலாம்' என்று கூறிய ஆசி—

கவிஞர் நீலாவணன், ஆரையூர் ந தம்பிப்பிள்ளை ஆசிரியர், நண்பர்கள் எம். வை. எம். முஸ்லிம், நல்லூர் செ. வரதராசன் ஆகியரோடு

(13-ம் பக்கம் பார்க்க)

## மரபு வழி இலக்கியம்

"ஒவ்வொரு மொழிக்கும் இனத்திற்கும் தனி மரபும் பண்பும் உண்டு. இலக்கிய ஆசிரியன் இவற்றை மனதிற் கொண்டே தன் இலக்கியத்தைப் படைக்க வேண்டும். மரபு வழி ஆக்கப்பட்டவையே உயர்ந்த இலக்கியமாகும். இராமாயணத்தை வடமொழியிற் பாடினார் வான்மீகி முனிவர். கம்பன் அதையே தமிழிற் பாடினான். ஆனால் அவன் தமிழ் மரபை மறக்கவில்லை. தமிழனின் பண்பிற்கும் மரபிற்கும் ஏற்பவே கம்பன் தன் மகா காவியத்தைப் பாடினான். மரபு வழி வந்த இலக்கியமே காலம் கடந்து வாழும் சக்தி பெற்றது. பச்சைத் தமிழிலும் கொச்சைத் தமிழிலும் எழுதப்படும் நாவல்களும் சிறுகதைகளும் இன்று நூற்றுக் கணக்கில் வெளியாகின்றன. ஆனால் வெளி வந்து ஒருசில மணி நேரத்தில் அவை மறைந்து மடிந்துவிடுகின்றன. ஆனால் மரபு வழித் தோன்றிய கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்றவை இன்றும் எழிலுடனும் இளமையும் இனிமையும் குன்றாது எமக்கு மகிழ்வூட்டுகின்றன." இவ்வாறு யாழ்-செங்குந்த இந்துக் கல்லூரிப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணவர் மன்றத்தில் 'உயர்ந்த இலக்கியம் மரபின் வழியே ஆக்கப்பட வேண்டும்' என்ற [illegible] செல்வி ந. திரவியம் குறிப்பிட்டார்.

இவரை எதிர்த்துப் பேசிய செல்வன் க. பரராசசிங்கம் குறிப்பிட்டதாவது, "கம்பராமாயணம் மரபின் வழி ஆக்கப்பட்ட இலக்கியம் என்றால் சிலப்பதிகாரம் அந்த மரபுக்கு முரணாகவே இயற்றப்பட்டுள்ளதென்பதை எவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் கம்பராமாயணமும் உயர்ந்த இலக்கியந்தான். சிலப்பதிகாரமும் உயர்ந்த இலக்கியம் தான். மரபு காலத்திற்குக் காலம் மாறும் தன்மை வாய்ந்தது. காலத்தையும் சூழ்நிலையையும் அனுசரித்து மரபை மாற்றவோ மீறவோ இலக்கிய ஆசிரியனுக்குச் சுதந்திரம் உண்டு."

செல்வன் த. தங்கவேல் தலைமையில் நடைபெற்ற இச் சொற்போரில் கல்லூரி மாணவர்களான ந. திரவியம், நா. குழந்தைவேல், சி. குகதாசன் ஆகியோரும் இலங்கைப் பல்கலைக் கழக மாணவர்களான க. பரராசசிங்கம், இ. கோமளாதேவி, ந. கமலாதேவி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஈற்றில் ஆசிரியர்கள் திரு. பொ. இராமசாமி, சி. சரவணபவன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

## கவிதைப் பூங்கா

## 'உன்னைக் காப்பேன்'

—நாவலூர்க் கேசரி—

"இறவாத புகழ்படைத்தாய் எழிலேதமிழே!
என்னுதிரத்தொடு கலந்தாய், உயிரேவாழ்வே!
பிறவாத பலமொழிகள் பெற்றுவாழ்ந்தாய்,
பெருமையுடன் அதனழகைக் கண்டுநின்றாய்.
மறைவாகி விட்டனவே பலமொழிகள்
மாதேநீ "மறையவில்லை" ஒளியேதந்தாய்
திறமான சுவைபடைத்தாய் தேனைவெல்ல
திகைக்கின்றேன் உன்நிலைமை இப்போகண்டு.

வளமான கவிச்சுனைகள் பெற்றுவிட்டாய்
வரலாற்றுக் கெட்டாத "வாழ்வு"பெற்றாய்
தளராத நெஞ்சுடையாய் தனியேநின்று
தரணியிலே புகழ்படைத்தாய் தமிழர்வாழ
"அழகான" மொழியுடையாய் அம்மாநீயும்
அழியாத கலையுடையாய் ஐயோஇன்று
இளமான வாழ்வறியார் உலுத்தர்உன்னை
இழிக்கின்றார், இந்நிலையோ வந்ததம்மா.

தெள்ளுதமிழ் "வள்ளுவனை" ஈன்றுதந்தாய்
தேனொக்கும் "சிலம்பு"தனை அள்ளித்தந்தாய்
உள்ளமெலாம் உருகியிசை மூட்டவல்ல
உண்மையெனும் அன்புநெறி காட்டவல்ல
கள்ளதனை நிகர்க்குமந்த "கலித்தொகை"யாம்
காதலர்க்குப் பரிசாகத் தந்தாய்அம்மா,
எள்ளளவும் உனக்கழிவு இல்லையம்மா
இழிஞரைநான், சாடிடுவேன் உன்னைக்காப்பேன்.

—————— ⋮ ⋮ ⋮ ——————

## கொள்கை வேண்டும்

—சம்மாந்துறை யூ. செயின்—

நமக்கொரு கொள்கை வேண்டும்
நாட்களைக் கடத்து முன்னே
தமக்கென ஒன்று மட்டும்
தரணியில் தரித்தல் போதும்
சமத்துவம் காண நாட்டில்
சத்திய வழியில் நின்றே
நிமிர்ந்திட நெஞ்சு கொண்டு
நித்தமும் உழைக்க வேண்டும்.

'தொல்லைகள் பட்டு நெஞ்சம்
தூளாகிக் கரைந்த தூளும்
பொல்லாமை போக்கும்' எனறே
புலப்படும்! வீரம் கொண்டு
வல்லமை பெற்று இங்கே
வாழ்ந்திடும் மனிதர்க் கெல்லாம்
நல்லவை ஓதும், காலம்,
நாமிதை உணர வேண்டும்.

கண்களைத் தானம் செய்யும்
கஷ்டங்கள் வந்த போதும்
புண்களாய் மேனி எல்லாம்
புழுத்து மெய் அழியும் போதும்
மண்ணுடன் புதைக்க நம்மை
மமதையர் முயலும் போதும்
எண்ணமும் இலக்கும் ஒன்றாய்
இருந்திடக் கொள்கை வேண்டும்.

எத்தர்கள் வேட்டைக் கெல்லாம்
எதிர்க்கின்ற நெஞ்சு வேண்டும்
தத்தங்கள் செய்து வாழ்வில்
தர்மத்தைக் காக்க வேண்டும்
நத்தைபோல் ஊர்ந்து செல்லும்
நலிவினைப் போக்கி மக்கள்
மத்தியில் நிமிர்ந்து சொல்ல
மனத்திலே கொள்கை வேண்டும்.




# ரிஷி
## அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

குறிப்பு

அசல் R. S. பதிமருந்துகளும், திருச்சினாப்பள்ளி குரு மருந்துகளும் கேசவர்தனி எண்ணையும் மற்றும் ரிஷி மருந்துகள் முதலியவைகள் கிடைக்கும்.

விலை 1 ருத்தல் ரூபா 35/00

விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
ஞானசுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




சு. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி

கே: கூட்டாட்சியையிட்டுத் தமிழ் மக்கள் ஆறுதலா அல்லது ஆழ்ந்த கவலையா அடைந்துள்ளனர்?

ப: கூட்டாட்சி தமிழ் மக்களின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்திவிடவில்லை.

கே: நன்மை செய்பவனுக்கு வாழ்க்கையில் அடிக்கடி தோல்வியும், ஏமாற்றமும் ஏற்படக் காரணம்?

ப, அவை சோதனைகள்—அதற்கும் மனம் தளராது நன்மை செய்ய முடிந்தால் தான் அவன் உண்மையில் நன்மை செய்தவனுவான்.

ஃ

தே. மேரி திரேசா,
உருத்திரபுரம்

கே: எழுத்தாளர்கள் அரசியலில் கலந்து கொள்வது நல்லதா?

ப: எழுத்தாளராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி ஒவ்வொரு மனிதனும் கட்டாயமாக அரசியலில் கலந்துகொள்ள வேண்டுமென்பதே என் கருத்து.

கே: பெண்கள் விரும்பாதது எது?

ப: பஸ்ஸிலே ஆண்கள் அமர்ந்திருக்க, தலைக்கு மேலுள்ள கம்பியை ஒரு கையால் பிடித்துத் தொங்கி, முன்னும் பின்னும் இழுபட்டு "டான்ஸ்" செய்து கொண்டு போவதை எந்தப் பெண்ணும் விரும்புவதில்லை.

ஃ

...............
காரைநகர்

கே: என் மணமான நண்பனொருவனை ஒரு விதவை காதலிக்கிறுள். இதைத் தடுக்க என்ன செய்யலாம்?

ப: நண்பனும் மனைவியை இழந்தவராயின் இருவரின் காதல் கைகூட உங்களால் இயன்றதைச் செய்யுங்கள். இல்லையேல், நண்பனைத் திருத்துங்கள். பெண்ணைத் திருத்துவது கடினம்.

ஃ

தமிழ்ச் செல்வி,
பண்டத்தரிப்பு

கே: எனது ஊரில் உள்ள மகளிர் பாடசாலையில் ஆசிரியைகள் சிலரைத் தவிர மற்றவர்கள் மாலை நேரத்தில் சிங்களம் படிப்பதாக அறிந்தேன். இருண்ட எதிர்காலத்தை நோக்கிச் செல்லும் அச் சகோதரிகளை என்ன செய்து நல்வழிப் படுத்தலாம்?

விரைவில் பாடசாலைகளில் சிங்கள ஆசிரியர்களைப் பகிஷ்கரிக்கும் இயக்கம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அப்பொழுது உங்களூர் மாணவ, மாணவிகளால் பகிஷ்கரிக்கப்பட வேண்டியவர்களில் சிங்களம் படிக்கும் ஆசிரியைகளையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஃ

ஏ. எம். சரிப்,
வாழைச்சேனை

கே: பாடசாலை மாணவர்கள் சிலர் படிப்பில் ஊக்கமில்லாமல் காதலைப் பற்றியே சிந்தனை செய்கிருர்கள்—ஏன்?

ப: அதற்கு இரு காரணங்களுண்டு, ஒன்று அது அவர்களுக்குப் புதிய விஷயமாக இருப்பது. மற்றது, இதர பாடங்களைப் போலன்றி அதில் ஓர் இனிமை அடங்கியிருப்பது.

கே. கே. வி. ஆனந்த சர்மா,
வறக்காப்பொலை

கே: பொருளாதார பண்டிதர் என். எம். பெரேரா அரசாங்கத்தில் சேர்ந்துள்ளபடியால் தமிழர்களுக்கு எதிர்காலம் விமோசனம் அளிக்குமா?

ப: இன்று தமிழர்களின் முக்கிய பிரச்சினை உரிமைப் பிரச்சினையேயன்றி பொருளாதாரப் பிரச்னையல்ல. விருப்பம் உண்டானால், பொருளாதார அறிவு இல்லாவிட்டாலும் கூட உரிமைப் பிரச்சினையைத் தீர்க்கலாம்.

ஃ

மு. கந்தையா,
வடலியடைப்பு.

கே: ஆளுங் கட்சியினர் இது சோஷலிசம் என்றும் சர்வாதிகாரக் கட்சிக்கு இடம் கொடோம் என்றும் சொல்லுகிருர்களே, உண்மையில் நடப்பது சோஷலிசமா? அன்றி சர்வாதிகாரமா?

ப: சோஷலிசத்திலும் இருவகை உண்டு. ஒன்று ஜனநாயக சோஷலிசம், மற்றது சர்வாதிகாரச் சோஷலிசம். இப்பொழுது இங்கு இவ்விரண்டும் இணைந்துள்ளதால், இதற்கு 'சோஷலிசக் கலவை' என்று பெயர் சூட்டலாம்.

ஃ

தி. மதுரம்,
வெள்ளவத்தை

கே: டாக்டர் என். எம். பெரேராவை மொழிப் பிரச்சினையைத் திர்க்க விடாது வகுப்புவாதிகள் முட்டுக்கட்டையாக இருந்தால் அவரது சேவை நாட்டுக்குப் பயனளிக்காது என்பது எனது கருத்து!

ப: என் கருத்தும் அதுவே. பட்ஜட்டுக்கு முன்பு நிலைமையைத் தெளிவுபடக் கூறுவது கடினம்.

ஃ

மு. கருணுநிதி,
ஏழாலை மேற்கு

கே: நிதி மந்திரி என். எம். பெரேராவினதும் பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவினதும் தற்போதைய அரசாங்கம் இன்னும் எவ்வளவு காலத்துக்கு ஆட்சி புரியும்?

ப: அரசியற் சட்டப்படி ஒரு வருடம். அதற்குள் நிலைமை எப்படியெல்லாம் மாற்றப்படுமென இப்பொழுது கூற முடியாது.

ஃ

ச. கனகேஸ்வரி,
முகாங்கலை

கே: காசு மந்திரியும் அம்மையாரும் சேர்ந்து எம் மொழிப் பிரச்சினை பற்றி நல்ல தீர்வு காண்பார்களா? உங்கள் நம்பிக்கை எப்படி?

ப: நம்பிக்கை சிதைந்து வருகிறது. மொழிப் பிரச்சினை முழுவதையும் தீர்க்க அவகாசம் தேவைப்பட்டாலும் தமிழ் பேசும் மக்களுக்கெதிரான சில நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த முடியுமல்லவா? அதைச் செய்யவில்லையே!

ஃ

எஸ். செல்வநாதன்,
ஏருவூர்

கே: பணம், பதவிக்காக, கொண்ட கொள்கைகளை மாற்றிக் கொள்ளும் அரசியல்வாதிகளை எப்படி அழைப்பது?

ப: சந்தர்ப்பவாதிகள்! மிகச் சிறந்த தலைவர்கள் கூட இந்த வாதத்துக்கு பலியாவதுண்டு. ஓர் அரசியல்வாதி இந்த வாதத்திலிருந்து தப்ப வேண்டுமானுல் அசகாயத் துணிச்சலும், அசைக்க முடியாத கொள்கைப் பிடிப்பும் வேண்டும்.

ஃ

வி. நாதன்,
ஆரையம்பதி

கே: இலங்கையைப் பொறுத்தவரையில் 'வேலையில்லை, வேலையில்லை' என்பவர்கள், 'ஆளில்லை ஆளில்லை' என்னும் இடங்களுக்குச் சென்ருல் வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்து விடும் என்று கூறுகிறேன். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

ப: ஓரளவு குறையலாம். ஆனுல் பொருளாதார ஏற்றத் தாழ்வு மறைந்து நாடு தொழில் மயமாளுலன்றி (விவசாயமும் கூட ஒரு தொழிலாகிவிட வேண்டும்) வேலையின்மையை ஒழிக்க முடியாது.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் விஞக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

தில்லை நேசன்,
தெல்லிப்பழை

கே: நீர், வாழ்க்கையிலே என்றும் ஒரு மாணவர் என்றீரே. நீர் எந்தப் பாடசாலையில் கல்வி கற்கிறீர்?

ப: உலகம் என்னும் பாடசாலையில், ஒவ்வொரு நாளும் புதிய புதிய விஷயங்களைக் கற்றுக் கொண்டுதான் இருக்கிறேன்.

ஃ

ஏ. ஆர். என். வதூத்,
மருதானை.

கே: காதலில் தோல்வியுற்ற ஒருவனின் மனம் எப்படியிருக்கும்?

ப: கூட்டரசாங்கத்தில் பதவி கிடைக்காத இடதுசாரித் தலைவர்களின் மனம் போல் இருக்கும்.

ஃ

கா. நிஸாம்,இறத்தோட்டை

கே: ஒரு மணமகள் மணமகனுக்கு முதன் முதல் கொடுக்கும் பரிசு என்ன?

ப: ஆயிரமாயிரம் எண்ணங்களை அள்ளி வீசும் ஒரு கடைக்கண் பார்வை—அடுத்து ஒரு சின்னஞ் சிறிய புன்சிரிப்பு.

# கூற்றமே; என்னை வந்து கொள்

—இராஜபாரதி—

ஆதித் தலைவர்களும் அஞ்சொற் தமிழ்க்கவிதை
ஓதும் புலவர்களும் "நாதசுர—மேதைகளும்"
நேற்றிருந்தார் இன்றில்லை; நீணிலத்து வாழ்வெதற்கு?
கூற்றமே; என்னைவந்து கொள்.

வந்தான் வரத்தானின் வஞ்சனையை நான்பாடேன்,
'சொந்தம்' புரிகின்ற சூழ்ச்சிகளை—என்றன்வாய்
தூற்றிமறம் பாடத் தொடங்குமுன் என்அன்புக்
கூற்றமே; என்னைவந்து கொள்.

வாழ்ந்தால் தமிழோடு வாழ்வேன்; சவக்குழியில்
விழ்ந்தாலும் அந்த விதிதவறேன்,—சாய்ந்தாடுங்
காற்றடிக்குந் திக்கிற் கவிபாட நானறியேன்,
கூற்றமே; என்னைவந்து கொள்.

கூட்டாட்சி கூடிக் குழம்புமிவ் வீழமதின்
நாட்டாட்சி தானும் நலஞ்செய்யா;—பாட்டாட்சிப்
பேற்றை உடையமொழி பீடற் றழியமுதல்
கூற்றமே; என்னைவந்து கொள்.

ஓதுங் 'குறளும்' ஒலிக்குஞ் 'சிலம்பொலி'யும்
மாதணி'சிந் தாமணி'யும் மங்கிவிடின்—மீதமென்ன
மாற்ருன் ஒறுத்தெம் மரபிற்றுப் போவதன்முன்
கூற்றமே; என்னைவந்து கொள்.

**"மந்திர சக்தியை"**
நிருபிப்பதற்காக உங்கள் காரணம் எதுவானுலும் நிறைவேற்றித்தர முடியும். உங்கள் காரணத்தை விபரமாக எழுதி அனுப்பவும்.
கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்
**பி. எம். திசாநாயக்க**
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் தலைமை காரியாலயம்
கம்பளை.

# பூரணுதி லேகியம் அறிவித்தல்
# ரூ. 1000/- இனும்!

**எமது ரெஜிஸ்டர் 7761 நிர்.**

அசல் பூரணுதி லேகியம் லேபல்களைப்போல் கள்ளத்தனமாக போலி லேபல்கள் அச்சிட்டு, எங்கள் அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுமார்களின் பெயரில் பொய்யான சிட்டைகளையும் கொடுத்து பல வியாபாரிகளையும் பொது மக்களையும் ஏமாற்றி மோசடி வியாபாரம் செய்த திருட்டுக் கோஷ்டியினர் 11-6-64ல் போலிசாரால் தொகையான போலி சரக்குகளுடன் பிடிபட்டிருக்கிருர்கள். மேலும் இந்த மோசடி வேலைக்கு உடந்தையானவர்களையும் இலங்கை முழுவதிலும் துப்பறியும் C.I.D. போலிசார் தேடி வருகிருர்கள். இதன் மூலகர்த்தாக்களையும், உற்பத்தியாளரையும் கண்டு பிடிக்க உதவி செய்கிறவர்களுக்கு ரூ. 1000/- சன்மானம் தருவோம் என்பதையும் அறிவிக்கிருேம்.

எமது பூரணுதி லேகியம் தேவையுள்ளவர்கள் எங்களிடம் நேரிலும், மாகாணங்களில் எங்கள் அங்கீகாரம் பெற்ற ஏஜண்டுமார்களிடமும் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிருேம். போலி சரக்குகளினுல் ஏற்படும் எவ்வித வில்லங்கங்களுக்கும் நாங்களும் எங்கள் ஏஜண்டுமார்களும் பொறுப்பாளராகமாட்டோம்.

**பூரணுதி லேகியம் கம்பெனி,**
**நிர். 125, கண்டி ரேட்டு, கம்பளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசாரிடம் நேர்மையில்லை

"தமிழரசுக்கட்சி நேர்மைக்கும் நியாயத்துக்குமேற்ப செயல்படும் கட்சியல்ல. எந்த வழியைக் கையாண்டாவது இந்நாட்டுச் சிங்களவர்களைச் சிறுபான்மையோராக்கி, அவர்கள்மீது ஆதிபத்தியத்தை ஏற்படுத்துவதொன்றே தமிழரசுவாதிகளுக்குத் தேவைப்படுவது" என்று "லங்காதீப்ப" 20-6-64-ந் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தலையங்கத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

'கூட்டரசாங்கம் ஏற்பட்டதிலிருந்து தமிழ்மக்களுக்கு நியாயம் வழங்கும்படி புதிய நிதிமந்திரிக்கு ஏராளமான கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இக் கோரிக்கைகளை விடுத்தவர்களில் முன்னணியில் நிற்பது தமிழரசுக்கட்சியே. அக்கட்சியின் கோரிக்கைகளுக்கு முன்பு அனுதாபம் காட்டிய டாக்டர் என். எம்.பெரேரா பிரதமருக்கு அடுத்த ஸ்தானமான நிதிமந்திரிபதவியை ஏற்றுப்பதால், தமிழரசுவாதிகள், தங்களின் பழைய கோரிக்கைகளுக்குப் புதிய மெருகேற்றிக்கொண்டு அவரிடம் செல்வது வியப்பன்று.

ஆனால் வியப்பு என்னவெனில், சிங்களத் தலைவர்களென்போர் இந்த நியாயமற்ற தமிழர் கோரிக்கைகளுக்கு ஆக்கமளிக்க முன்வந்திருப்பதே.

திரு. வில்மட் பெரேரா டாக்டர் பெரேராவுக்குப் புத்திமதிகூறி யாழ்ப்பாணத்தில் பேசிய பேச்சு எரியும் நெருப்பில் எண்ணெயை வார்ப்பதாகும்.

டாக்டர் பெரேராவுக்கு நிதிமந்திரிபதவி கிடைத்துவிட்டால், அவருக்குத் தேவையானபடி எல்லாவற்றிலும் செயலாற்ற முடியாது. 14 அம்ச- ஒப்பந்தமொன்றின் அடிப்படையிலேயே சமசமாஜ- சுதந்திரக்கட்சி கூட்டு அரசாங்கம் ஏற்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின்படி சிங்களமட்டும் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவும் நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தை அமுல் நடத்தவும் சமசமாஜக்கட்சி கட்டுப்பட்டுள்ளது. இந்தியர் பிரச்சினையையும் பிரஜாவுரிமைச் சட்டத்திற்கிணங்கவே தீர்க்க முடியும். இந்த அம்சங்களுக்கேற்பவே டாக்டர் பெரேரா பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அதற்கு மாருகச் சென்ருல் பொது மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

இன்று தமிழ் பேசும் மக்களை அவர்களுக்குத் தெரியாத ஒரு மொழியில் அவர்களின் அலுவல்களைச் செய்யுமாறு யாரும் வற்புறுத்தவில்லை. சிங்களத்தை அரசகரும மொழியாக்கியதின் மூலம் சிங்கள மக்களுக்கு நன்மை கிடைத்திருப்பதைப் போலவே நியாயமான தமிழ் உபயோகச் சட்டத்தின் மூலம் தமிழர்களுக்கும் நன்மை கிடைக்கும். அதனை உணராமல் பேசுபவர்களும் இலங்கை வாழ் இந்தியர்கள் அனைவரையும் இலங்கைப் பிரஜையாக்கிவிட வேண்டுமென்று கூறுபவர்களும் தேசத் துரோகிகளே.

## சிங்கள இதழ்களில்...

டாக்டர் பெரேராவுக்கு நிதி மந்திரிப் பதவி கிடைத்துவிட்டது என்பதற்காக அவருக்கோ வேறு யாருக்கோ நமது இனத்தை அடகு வைக்க இடமளிக்க முடியாது.'

### சிங்கள ஆசிரியர்களுக்கு தமிழ் பயிற்சி

வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் 2000 சிங்கள ஆசிரியர்களுக்குத் தமிழ் மொழியில் ஓரளவு பயிற்சி அளிப்பதற்கு கல்வி இலாகா முடிவு செய்துள்ளதென்றும், அவர்கள் தமிழை ஓரளவு கற்றுக்கொண்டால், தமிழ் பேசும் பிள்ளைகளுடன் தமிழில் உரையாடி அவர்களுக்கு எளிதாகச் சிங்களம் போதிக்கலாமென்று கல்வி இலாகா கருதுகிறதென்றும் "தினமின" 22-6-64ந் திகதி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது. வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பாடசாலைகளில் தொடர்ந்து 3 ஆண்டுகள் பணியாற்றுவதாக அந்த ஆசிரியர்களிடம் ஒப்பந்தம் எழுதி வாங்கப்படும் என்றும் இச் செய்தி கூறுகிறது. அவர்கள் அடுத்த ஜனவரிக்கு முன்பு தமிழ்ப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுவார்களாம்.

## அது மிகவும் கூடாதாம்

ஒரு நிருபர்:- "இலங்கையில் சில அரசியற கட்சிகள் இந்தியர்கள் சிங்களவர்களுடன் தொடர்பு கொள்வதுக்கு பூட்டுக் கட்டை போடுகின்றன. அவர்கள் சிங்கள மொழியைப் படிப்பதையும் இக் கட்சிகள் தடை செய்கின்றன. இப்படி நான் குறிப்பிடுவது தமிழரசுக் கட்சியைத்தான்."

திருமதி லட்சுமி மேனன்:- "அது மிகவும் கூடாது. அம்மாதிரியான செயல்களை நான் ஆமோதிப்பதில்லை. இந்த நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் மொழியையும் அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

—தவஸ (23-6-64)

[இலங்கைக்கு வந்துள்ள இந்திய உதவி வெளிவிவகார மந்திரி திருமதி லட்சுமி மேனம் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டி.]

## சந்தியில்

புதிதாக நடைபெற்ற பாராளுமன்றகாரியதரிசி பதவி வினியோகத்தில் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பெரிய மனவருத்தம் அடைந்துள்ளதாக நமது மருமகன் ஒருவர் கூறுகிருர். பதவி வேட்டையில் முன்பும்பலமுறை இவர் வழுக்கி விழுந்தும் 'மீசையில் மண் ஒட்டவில்லை' என்று ஒருவாறு சமாளித்துத்திரிந்தாராம். காலம்வரும் காத்திருப்போம் என்றிருந்தும், காலம்கடந்துவிட்டதனுல் 'இலவுகாத்த கிளி'யாகியுள்ளார். தொடர்ந்து பலமுறை ஏமாற்றப்பட்ட இவர் வரிந்து கட்டிக்கொண்டு அரசாங்கக் கட்சியுடன் சமருக்குக் கிளம்பினுலும் ஆச்சரியப்படுவதிற்கில்லை.

★

கேட்பார் புத்திகேட்டு தன் நிலையில் தவறிவிட்ட ஒருவரைப் பற்றி பரிதாபத்துடன் சில வார்த்தைகள் கூறத்தான் வேண்டும்.

ஒரு பாடசாலைத் தலைமை ஆசிரியர் பலருடைய புத்திகளையும் செவிமடுத்துத் தாளம் போட்டமையினுல் இன்று நட்டாற்றில் நிற்கிருர். களவு கொடுத்தவன் பொருளைக் கண்டுபிடிக்கும் ஆசையில் மேலும் மேலும் செலவு செய்து பொருள் விரயம் செய்வானும். இதேபோல்நமது அனுதாபத்துக்குரிய இந்த ஆசிரியரும், தமது வருமானத்தில் பெரும் பகுதியை நண்பர்களின் பேச்சை நம்பிவிட்டு இன்றும் விருந்துகள் வைத்து வீண் விரயம் செய்கிருராம்.

'அதிபர் உத்தியோகம் வாங்கித் தருகிறேன்' என்று ஆசை காட்டி ஒரு கல்வி அதிகாரி இந்த மனிதருடைய உழைப்பை உறிஞ்சினுராம். 'பதவி வந்து வாசலில் காத்துக் கிடக்கிறது' என்று சொல்லி பல வழிகளிலும் நண்பர்கள் இவரை உறிஞ்சிவிட்டனராம். போதாக் குறைக்கு வேருெரு ஆசையைக் காண்பித்து கடந்தவாரம் சிலர் இவர்வீட்டில், இவர் செலவில் விருந்துவைத்து வேடிக்கை காட்டினுர்களாம். பெரிய குடும்பத்தவரான இவருக்கு இன்னும் புத்தி பிடிபடவில்லையே என்று நாம் அனுதாபப்படாமல் என்னதான் செய்யமுடியும்?

★


ஒரு பிரபல எழுத்தாளர் எழுதிய கதை கொழும்பில் நாடகமாக நடிக்கப்பட்டது. பேரும், புகழும், பணமும் கிடைத்தது. யாழ் நகரிலும் நாடகம் நடந்தது. கதாசிரியருக்கும் அழைப்புக் கிடைத்தது. தமது மனைவியுடன் நாடகம் பார்க்கச் சென்ருர், அழைப்பிதழுடன். ஆனுல் நாடகம் பார்க்காமல் இருவருமே வீடு திரும்ப வேண்டி ஏற்பட்டதாம். காரணம் அவர் மனைவியை நுழைவுச் சீட்டின்றி அனுமதிக்க சம்பந்தப்பட்டவர்கள் மறுத்துவிட்டனராம். நுழைவுச்சீட்டுகளும் ஏற்கனவே தீர்ந்துவிட்டன. அழைப்பிதழுடன் சென்ற கதாசிரியருக்கும், அவர் மனைவிக்குமே இந்தக்கதி ஏற்பட்டதென்ருல், ஏனையவற்றை நாம் விபரிக்கவேண்டாம்.


புதுவருடப் பண்டிகையில் பூவையர்க் கேற்ற

மினேர்வா

சிறப்பும் வனப்புமிக்க தையல் மெஷின்

இப்பொழுது வெகு சுலபமான மாதாந்த கட்டுப் பணத்திற்கு உங்களுக்குக் கிடைக்கும்



Minerva 126

நுண்ணிய தயாரிப்பு, நாசூக்காக எவ்வித தையலையும் சுலபமாகவும் அழகாகவும் தைத்துக் கொள்ளலாம்.

3 லாச்சிகள் கொண்ட கெபினட்
வழக்கமான விலை ரூபா 540/-

புதிய வரி விகிதத்தின் பின் எதுவித விலை உயர்வும் சுமத்தப்படவில்லை.

இப்பொழுது விற்கப்படும் விலை ரூபா 420/-

சோல் ஏஜெண்டுகள்:

சென்ற். அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

516, ஸ்கினர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 4261-2, 3.


# ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்ப யோசனை

"இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல விரும்பாத இந்தியர்களில் இந்நாட்டுக் குடியுரிமையைப் பெறத் தகுதியுள்ளவர்களுக்கு பிரஜாவுரிமையை வழங்க வேண்டும். எஞ்சிய இந்தியர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளத் தயாரில்லையேல், அவர்களைக் கொஞ்சம் கொஞ்சமாக வேறு நாடுகளுக்கு அனுப்புவதற்காவது ஏற்பாடுகள் செய்துகொள்ள வேண்டும். அவர்கள் பயிற்சிபெற்ற தொழிலாளர்களாதலின், தோட்டத் தொழிலைப் புதிதாகத் தொடங்கும் ஆபிரிக்க நாடுகளும், சில ஆசிய நாடுகளும் அவர்களில் கணிசமான தொகையினரை ஏற்றுக்கொள்ள விரும்பலாம். அரசாங்கம் இப்பொழுது இதில் கவனம் செலுத்த வேண்டும்"

இவ்வாறு "தினமின" 19-6-64-ந் திகதி தலையங்கம் தீட்டியுள்ளது.

இத் தலையங்கம் மேலும் கூறுவதாவது:—

மலை நாட்டுச் சிங்கள கிராம மக்களுக்குச் சொந்தமான நிலங்களே இன்று தோட்டங்களாக மாறியுள்ளன. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தொழில்கள்தான் இந்தியத் தொழிலாளர்களுக்கு கிடைத்துள்ளன. ஆகவே பிரச்சினையைத் தீர்க்கும் [illegible] பார்க்க வேண்டும்.

இங்கே சிங்களவர்களுக்குப் போதிய தொழில் வசதிகள் கிடையா. அவர்களுக்குப் போதிய காணி பூமிகளும் கிடையா. அவர்கள் வேறு எங்கும் செல்லவும் முடியாது. எனவே இங்கு வசிக்கும் ஒவ்வொரு இந்தியருக்கும் பிரஜாவுரிமை வழங்க முடியாது. பிரஜாவுரிமை கொடுக்காமல் அவர்களை இங்கு வைத்துக் கொள்ளவும் முடியாது.

### எஞ்சியவர்களை என்ன செய்வது?

அவர்களில் பெரும்பாலோர் சொந்த இஷ்டத்தின் மீது இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல விரும்புவார்கள். அவர்கள் இந்தியாவின் மீதுபற்றுக்கொண்டவர்கள். அவர்களைத் திரும்பிச் செல்லுமாறு தூண்ட வேண்டும். எஞ்சியவர்களை என்ன செய்வது என்பதை அடுத்தபடியாக முடிவு செய்ய வேண்டும்.

இதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெற முடியாது. இந்தியாவுக்கு இதில் சிரத்தை கிடையாது. எனவே இந்தியாவின் ஒத்துழைப்பை எதிர்ப்பார்க்காமல், இந்நாட்டிலுள்ள இந்தியர்களின் தலைவர்கள் பிரச்சினையைச் சிக்கலாக்க அனுமதிக்காமல், பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற உறுப்புரிமையைத் துறக்க தமிழரசார் முடிவு

## சுயநிர்ணய அடிப்படையில் சுதந்திரத் தீர்மானம்

## மக்களின் தீர்ப்பைப் பெற மத்திய செயற்குழு உறுதி

சிங்களத் திணிப்பும், தமிழ் பேசும் மக்களுக்கெதிராக எடுக்கப்படும் கடுமையான நடவடிக்கைகளும் சிங்கள, தமிழ் பேசும் மக்கள் உட்னிருந்து வாழ முடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளதால், சிம்மாசனப் பிரசங்கத்துக்குப் பின்னர், தமிழில் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் ஆசனங்களை ராஜினாமா செய்து, சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரம் பெறுவதற்காக தமிழ் பேசும் மக்களிடம் அதிகாரத் தீர்ப்பைப் பெற வேண்டு மென்றும், சுதந்திரப் போராட்டத்தில் எத்தகைய தியாகங்களையும் செய்ய மக்கள் தயாராக வேண்டு மென்றும் சென்றவார இறுதியில் திருமலையில் கூடிய தமிழரசுக் கட்சி செயற் குழு முடிவு செய்துள்ளது.

செயற்குழு ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானம் கூறுவதாவது:-

ஒரு சுதந்திர மக்கள் தம்மைத் தமது சொந்த மொழியிலேயே ஆளுவார்களென்பதும், அடிமைப்பட்ட மக்கள் தமது எஜமானர்களின் மொழியினால் ஆளப்படுவரென்பதும் உலகறிந்த உண்மையாகும்.

### அடக்கி ஆள முயற்சி

இந்நாட்டிலுள்ள தமிழ் பேசும் மக்களினதும், அவர் தம் மொழியினதும் சரித்திர நிலையையும், அந்தஸ்தையும் முழுதாக உதாசினம் செய்து, தனிச் சிங்களக் கொள்கையைத் தயவுதாட்சண்யமின்றித் திணிப்பதன் மூலம், தமிழ்பேசும் மக்களை அடக்கி ஆள இலங்கை அரசாங்கம் முயற்சிக்கிறது.

எங்களது ஒற்றுமையான எதிர்ப்பும், நீதியான வேண்டுகோளும், சகிப்பும் துன்பமும் எல்லாமே இந்த அரசாங்கத்தால் மனிதாபிமானமற்ற முறையில் அசட்டை செய்யப்பட்டுள்ளன.

அதற்குப் பதிலாக, அரசாங்கம் இப்பொழுது சிங்களத்தைப் பலாத்காரமாக எமது குழந்தைகளின் தொண்டைகளுள் திணிப்பதன் மூலம், அவர்களை அடிமைப்படுத்தத் துணிந்துள்ளது. இதற்காக 2,000 சிங்கள ஆசிரியர்களை வட, கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்புவதாகவும் தீர்மானித்துள்ளது.

### சிங்களம் எமக்கு போதனமொழியா?

தோட்டங்களில் வாழும் தமிழ்ப் பிள்ளைகள் தமது செல்வத் தாய்மொழியைக் கைவிடும் வண்ணம் அவர்களைக் கட்டாயப்படுத்த, தோட்டப் பாடசாலைகளின் போதனமொழியாகத் தமிழின் இடத்தில் சிங்களத்தை புகுத்தவும் துணிச்சலுடன் தீர்மானித்துள்ளது.

தமிழ்க் கல்வி நிலையங்களின்மீது சிங்கள நிர்வாகத்தையும், ஆதிக்கத்தையும் செலுத்தும் ஒரே நோக்கத்துக்காக, தமிழ் போதன மொழியாகவுள்ள பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்களையும் அதிபர்களையும் சிங்களத்தில் போதிய தேர்ச்சி பெற வேண்டுமென்று வற்புறுத்துகின்றது.

### கட்டாய ஓய்வு உத்தரவு

ஈற்றில், இப்பொழுது, இந்த அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கப் பொதுச்சேவையிலுள்ள பங்கினை அபகரிக்கும் நோக்கத்துடன், நீதி பரிபாலனத்துக்கு முற்றிலும் முரண்பட்ட, வெளிப்படையான பாரபட்ச நடவடிக்கையாகத் தமிழ் அரசாங்க ஊழியரைக் கட்டாயமாக வேலையினின்றும் ஓய்வு பெறச் செய்வதில் ஈடுபட்டுள்ளது.

இச் சர்வாதிகார நடவடிக்கைகள், அரசாங்கக் கொள்கையிலும் திட்டத்திலும் தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களும் இந் நாட்டில் உடனிருந்து வாழ இடமில்லை என்ற முடிவுக்கே எங்களை வரச் செய்துள்ளன.

ஆகவே, சமஷ்டிக் கட்சியின் மத்திய செயற் குழு, தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகளை ஜனப் பிரதிநிதிகள் சபையிலுள்ள தமது ஆசனங்களைத் துறக்க வேண்டுமெனவும், தமிழ் பேசும் மக்களினது சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டுவதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்க அவர்களின் அதிகாரத் தீர்ப்பைப் பெற வேண்டுமெனவும், இந்தப் போராட்டத்தில் எந்தத் தியாகத்தையும் துன்பத்தையும் பொருட்படுத்தாது, ஈடுபட வேண்டுமெனத் தமிழ் பேசும் மக்களையும் கேட்டுக் கொள்கிறது.'

# புதிய ஊழியர் பதவியை உறுதிப்படுத்துக

## அ. எழுது வினைஞர் மாநாடு அரசவையைக் கோரும்

அஞ்சல் எழுது வினைஞர் சங்கத்தின் மூன்றுவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 27ம் திகதி சனிக்கிழமை காலை 9-30 மணியளவில் கொழும்பு நாவலர் போதனமன்றமண்டபத்தில் நடைபெறுகிறது. திரு. வே. கனகசபை முதலி தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுமென்று தெரிகிறது.

தமிழ் மொழி மூலம் தெரிவு செய்யப்பட்ட அரச ஊழியர்களின் பதவியை உறுதிப்படுத்தும் படியும், அவர்களுக்கு தமிழ் மொழி மூலம் வேலை செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் படியும் அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் முக்கிய இடம் பெறும். மேலும் சங்கத்தின் ஆட்சிக் குழு முன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் தீர்மானங்கள் சிலவற்றின் விபரம் வருமாறு:

தமிழ் மக்கள் பெரும்பான்மையாய் வசிக்கும் பிரதேசங்களாகிய வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அலுவலகங்களுக்கு எவ்வித இடர்ப்பாடுமின்றி தாய் மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள வசதி யளிக்குமுகமாக தமிழில் கடமையாற்றும் தகுதி வாய்ந்த தமிழ் ஊழியரை அமர்த்தும் படியும்;

தலைநகராகிய கொழும்பிலேதான் பெரும்பான்மையாய் திணைக்களங்கள் இருப்பதனாலும், பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு தங்கள் கருமங்களைச் செய்விப்பதற்கான வசதிக் குறைவுகள் ஏற்படுவதனாலும் மாகாண ரீதியாய் எல்லாத் திணைக்களங்களையும் நிறுவி அவ்வவ் அலுவலகங்களுக்கேற்ப முரண்பாடின்றி ஊழியரை நியமித்தும், தற்பொழுது நிலவிவரும் துன்பங்களைத் தீர்க்கு முகமாக வேண்டிய நடவடிக்கை எடுக்கும் படியும்;

வடகிழக்கு மாகாணங்களிலுள்ள நான்கு மாவட்ட தந்திப் பரிசோதகர் அலுவலகங்களில் பெரும் பான்மையாய் தமிழ் பொது சேவைத் தொழிலாளர் கடமையாற்றுகின்ற காரணத்தினாலும், தமிழ் அஞ்சல் எழுது வினைஞர்களுக்கு மாற்றத்திற்கு வேறு இடங்கள் இல்லாததினாலும் அவ்வவ் அலுவலகங்களுக்கு, தமிழ் அஞ்சல் எழுது வினைஞர்களையே நியமிக்கும்படி தபால் தந்திச் சேவை மந்திரியைக் கோருவதெனவும்;

(9-ம் பக்கம் பார்க்க)

# கொட்டகலையில் வேலை நிறுத்தம்

## நிர்வாகத்தின் போக்கை எதிர்த்து இ. தொ. கழகம் தீவிர நடவடிக்கை

கொட்டகலை பெரிய மண்வெட்டித் தோட்டத்தில் சுமார் 475 தொழிலாளர்கள் கடந்த 12ந் திகதி முதல் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். தோட்ட நிர்வாகத்தின் பிடிவாதமும், தோட்ட முதலாளிமார் சம்மேளனத்தின் சமரச எதிர்ப்புப் போக்கும் வேலைநிறுத்தத்தை நீடிக்கச் செய்கின்றன. இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலைமை இது பற்றித் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.

பெரிய மண்வெட்டித் தோட்டத்தில் கொழுந்து பறிக்கும் 12 பெண் தொழிலாளர்களுக்குத் தோட்ட நிர்வாகம் வேலை கொடுக்க மறுத்ததின் விளைவாகவே தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.


இது பற்றித் தோட்டத் தலைவர் தோட்டத் துரையிடம் பேசியபோது, தலைவர் தன்னிடம் கடுமையாக நடந்துகொண்டாரென்று ஒரு காரணம் கூறி, அவரைத் தோட்டத் தலைவராக ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் தோட்டத்துரை.

இதற்கு முன்பும் இத் தோட்டத்துரை இதே உபாயத்தைக்கையாண்டுள்ளார்.

முன்பு இலங்கைத் தொழிலாளர் கழகம் வேறொருவரைத் தோட்டத் தலைவராக நியமித்திருந்தது. அப்பொழுதும் இத் தோட்டத்துரை சாக்குப் போக்குகளைக் கூறி அவரையும் அங்கீகரிக்க மறுத்தார். இப்பொழுதும் ஒரு காரணம் கூறி தற்போதைய தலைவரை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்.

### ஆத்திரத்தை ஏற்படுத்திய பிடிவாதம்

இத் தோட்டத்துரையின் பிடிவாதப் போக்கே தொழிலாளர் மத்தியில் ஆத்திரத்தைக் கிளறிவிட்டுள்ளது.




தோட்டத் தொழிலாளர்கள் இம் மாதம் 9-ம் திகதியும் 10-ந் திகதியும் வேலை நிறுத்தம் செய்தனர்.

அட்டன் தொழில் அதிகாரியின் காரியாலயத்தில் இத்தகராறு பற்றி ஒரு மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டதையொட்டி 11-ந் திகதி வேலை நிறுத்தம் வாபஸ் செய்யப்பட்டது.

ஆனால் அன்று நடைபெற்ற மகாநாட்டிலும் தோட்ட நிர்வாகத்தின் பிடிவாதப் போக்கால் தகராரைச் சுமுகமாகத் தீர்க்க முடியாமல் போயிற்று.

தோட்டத் தலைவர் தன்னிடம் கடுமையாக நடந்து கொண்டதற்காகத் தன்னிடம் அவர் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும் என்று தோட்டத்துரை பிடிவாதம் செய்தார்.

தொழில் அதிகாரி அந்த விஷயத்தை விசாரணை செய்து, உண்மையில் தோட்டத் தலைவர் கடுமையாகத்தான் நடந்து கொண்டார் என்று தீர்ப்பளித்தால், மன்னிப்பு கேட்டுக்கொள்ளத் தயார் என்று இ. தொ. கழகப் பிரதிநிதிகள் கூறினர். தோட்ட நிர்வாகம் தனது பிடிவாதத்தைத் தளர்த்திக்கொள்ளத் தயாராயில்லை. அதன் விளைவாகத் தொழிலாளர் 12-ந் திகதி மீண்டும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

தலைவர்கள் முயற்சி

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலைவர் டாக்டர்

(9-ம் பக்கம் பார்க்க)

உத்தரவாதம்

பின்வரும் தேர்வுகளுக்கு இக்கலாசாலை அளிக்கும் திறமை வாய்ந்த பாடங்களை அஞ்சற் கல்வி மூலம் பயில்வோர் சித்தி யெய்வது திண்ணம். அவ்வண்ணம் தவறும் மாணவர்களுக்குத் திரும்பவும் இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படும்.

நீங்களும் சித்தியெய்த விரும்பின் இன்றே சேருங்கள்.

- இலங்கைப் பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வும் ஜி. சி. ஈ. உயர்தரத் தேர்வும்— கலை, விஞ்ஞானம்.
- கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) தேர்வு— கலை, விஞ்ஞானம், வாணிபம்.
- அரசினர் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிப் புகுமுகத் தேர்வு— விஞ்ஞானம்.

யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ்,

நெல்லியடி — கரவெட்டி

கிளைகள்:

107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

13, முதலாவது சப்பல் ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-6.

தமிழ் பேசும் மக்கள் விரும்பிப் பாவிப்பது

மாய ஜோதி

ஊது பத்திகளே

- சுகந்த வாசனை
- நிலைத்து எரியும் தன்மை
- நியாயமான விலை
- நவீன முறையில் இறுக்கமாக அடைக்கப்பட்ட பாக்கெட்டுகளில் இப்பொழுது விற்பனையாகிறது.

உற்பத்தியாளர்கள்:-

ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு—7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'இன விடுதலைப் புரட்சியின் முன்னணியில் தமிழ் பேசும் பாட்டாளிகள்'

—கோடீசுவரன்

# துறைமுகத் தொழிலாளர்கள் கூட்டத்தில் தலைவர்கள் முழக்கம்

தொழிலாளர் புரட்சி பற்றிப் பேசியவர்கள் இன்று புரட்சி சாத்தியமில்லை யென்கிறார்கள். பதவியின் முன் அவர்களின் புரட்சி அடங்கியிருக்கலாம். ஆனல் இந்நாட்டில் ஒரு பெரும் புரட்சி நடைபெற்றே தீரும். அதுதான் தமிழ் பேசுமினம் தனது விடுதலைக்காக நடாத்த விருக்கும் புரட்சி. இப் புரட்சியின் முன்னணியில் தமிழ் பேசும் தொழிலாளர்கள் நிற்க வேண்டும். அப்பொழுதான் புரட்சியின் விளைவு நம்மைச்சாரும். இப் புரட்சிக்கு குந்தகம் விளைவிக்க நாட்டில் உள்ள சகல தியசக்திகளும் முயலுகின்றன. அத்தீயசக்திகளின் குரலுக்கு தமிழ் பேசும் தொழிலாளர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் செவிமடுக்கலாகாது.

கொழும்பு விவேகாநந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற துறைமுக நாவாய் இயக்குனர் கழக ஆண்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய அரசாங்க எழுது வினைஞர் சங்கத் தலைவரும், தமிழ் பேசும் தொழிற் சங்க கூட்டணிச் செயலாளருமான திரு. செ. கோடீசுவரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

துறைமுக நாவாய் இயக்குனர் கழகத் தலைவர் திரு. ஜி. ஏ. பர்ணாந்து தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### தீர்மானங்கள்

தீர்மானங்களின் விபரம் வருமாறு:

துறைமுக நாவாய் இயக்குனர் கழக உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை யாற்றுவதற்கு அரச கரும மொழி அறிவு தேவையற்ற தென்பதனுலும், அவர்கள் சேவை நிபந்தனைகளின்படி சிங்கள மொழி அறிவு தேவையற்ற தென்பதனுலும், தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் சிங்களத் தேர்ச்சி பெற வேண்டுமென்பது அவர்களை பாரபட்சமான முறையில் பாகுபாடு படுத்தி இடர்ப் படுத்துவதனுலும் எமது கழக உறுப்பினர்களிற் சிலர் சிங்களத் தேர்வில் சித்தியடைய வேண்டுமென்ற நிபந்தனையை உடனே திரும்பப் பெறுவதுடன் சிங்களத் தேர்ச்சி பெறுதவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சம்பள உயர்வை உடன் வழங்கி மேலும் இவ்வித அநீதியான நிர்வாகச் சட்டங்களை அரசாங்கம் இனிமேலும் அமுலுக்குக் கொண்டு வரக் கூடாதெனக் கேட்டுக் கொள்கிறது.

### தமிழில் தொடர்பு

கழக உறுப்பினர்கள் தமது தாய்மொழி அன்றி பிற மொழிப் பயிற்சி அற்றவர்களென்பதால் அவர்களுடன் அரசாங்கமோ அல்லது துறைமுக ஆணையாளரோ வைத்துக் கொள்ளும் சகல விதமான தொடர்புகளையும் அவர்கள் தாய்மொழியான தமிழிலேயே வைத்துக் கொள்வதுடன் அவர்களுக்கு வழங்கும் பிரயாணச் சீட்டு, நேரசூசி அட்டை, சம்பளப் பட்டியல் ஆகிய பிறவற்றையும் தமிழிலேயே வழங்குவதுடன், துறைமுக ஆணையாளர் வெளியிடும் அறிவித்தல்கள், சுற்றறிக்கைகள் இன்ன பிறவற்றையும் தமிழிலும் வெளியிடும்படி கேட்டுக்கொள்கிறது.

### செலவுப் படியை வழங்குக

இண்டஸ்றியல் பிரிவிலிருந்து ஒப்பரேஷனல் பிரிவுக்கு மாற்றப்பட்ட கொக்சன்மார்களின் இண்டஸ்றியல் பிரிவு சேவைக் காலத்திற்குரிய ஒய்வுப் பணத்துக்கு கணக்கெடுக்கப்படாத செலவுப்படியை அரசாங்கம் இதுவரை கொடுக்காததற்காக வருந்துவதுடன் சம்பந்தப்பட்ட கொக்சன்மாருக்கு உடனடியாக உரிய மேற்கூறப்பட்ட செலவுப் படியை வழங்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

### சம்பள உயர்வு

விஷம் போல ஏறிவரும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முற்ருகத் தவறிவிட்டாலும், பல ஆண்டுகளாக அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பளம் உயர்த்தப் படாததாலும் வாழ்க்கைச் செலவை ஒரளவு ஈடுசெய்யும் பொருட்டாவது எமது சம்பளத்தில் ஐம்பது விழுக்காடு கூட்டித் தரும்படியாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

### எல்லாம் தமிழியக்கம்

தமிழ் பேசும் மக்களின் உயிரான தமிழ் மொழி அரசாங்கத்தால் சீரழிக்கப் பட்டு வருவதாலும், தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை வளத்திற்கு ஆதாரமான தமிழ்மொழி அழியின் தமிழ் பேசும் இனம் அழியும் என்பதனுலும், தமிழ் பேசும் இனத்தின் பொதுச் சொத்தான தமிழ் மொழியை வளர்ப்பதும், வாழ வைப்பதும் தமிழ் பேசும் ஒவ்வொருவரினதும் கடமையென்பதனுலும், கழக உறுப்பினர்களும்—தமிழ் பேசும் மக்களும் எல்லாம் தமிழியக்கத்தை பேணும் ஊக்குவித்தும் பலப்படுத்தியும் தமிழ் மொழி வாழ உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறது.

### வழிகாட்டிகள்

இலங்கைத் தொழிலாளர் கழக இணைப் பொருளாளர்களில் ஒருவரான திரு. சு. சிவானந்த சுந்தரம் பேசுகையில் கூறியதாவது:

கூட்டு அரசாங்கம் நமக்கு நல்லதைச் செய்யும் என்று பலர் எதிர்பார்த்தனர். ஆனல் கூட்டரசாங்கம் பதவியேற்ற நாலு தினங்களுக்குள்ளே அவர்களின் நோக்கத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. இது வரை இந்நாட்டு ஆட்சி பீடத்தை அலங்கரித்த ஏனைய கட்சிகள் சிறுபான்மையினர் விடயத்தில் எதைச் செய்தனவோ, அதையே கூட்டரசாங்கமும் அமுல் செய்கிறது, அமுல் நடத்தப் போகிறது. எனவே தமிழ் பேசும் தொழிலாளர்கள் தமது உரிமைக்காகப் போராடும் அதே வேளையில் இனத்தின் விடுதலைக்குப் போராடத் தம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

தமிழ் பேசுமினத்தின் விடுதலைப் போராட்டம் பாட்டாளிகள் கையிலேயே உள்ளது. எந்த நாட்டிலும் விடுதலைப் போராட்டங்களின் முதுகெலும்பாகத் தொழிலாள விவசாயிகளே விளங்கி வந்துள்ளனர். இதைத் தமிழ் பேசும் தொழிலாளர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் மறந்துவிடக் கூடாது.

தமிழ் பேசும் முதலாளிகள் இனத்தின் விடுதலைக்காக உழைப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. முதலாளித்துவம் போராட்டம் நடாத்தியதாகவரலாறு கூறவில்லை. எனவே இனத்தின் வளமும் வாழ்வும் தமிழ் பேசும் தொழிலாளர் கையிலேயே உள்ளது. தொழிலாளர் வர்க்கம் இன விடுதலைப் போரின் வழி காட்டிகளாகத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும்.

### நல்ல எதிர்காலம்

திரு. ஆ. இராசரத்தினம் பேசுகையில் கூறியதாவது:- இடதுசாரிக் கட்சிகளையும் ஏனைய சிங்களக் கட்சிகளையும் தமிழ் பேசும் மக்கள் நம்பி ஏமாந்தது போதும். காலத்துக்குக் காலம் சிங்களக் கட்சிகளினுல் தமிழ் பேசும் தொழிலாளர்களும் மக்களும் ஏமாற்றப்பட்டே வந்திருக்கிறுர்கள். இந்த உண்மையை நாம் நீண்ட காலமாகக் கூறிவந்துள்ளோம். ஆனல் கடந்த நூறு ஆண்டுகளாக தமிழ் பேசும் தொழிலாளர் மத்தியில் தோன்றியுள்ள விழிப்பு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை அறிவுறுத்துகிறது.

### சிந்தனை வேண்டும்

அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. வ. மகாலிங்கம் பேசுகையில் கூறியதாவது:- அரசாங்கங்கள் பல மாறி விட்டன, ஆனல் நமது நிலையில் மாற்றம் ஏற்படவில்லை. நமது நிலையில் மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் நாமே முயற்சியெடுக்க வேண்டும். இந்த உண்மை இன்னும் சிலர் உணரவில்லை. சமூக இனரீதியாக நாம் சிந்திக்காத வரையில் நமக்கு விமோசனம் இல்லை.

### தேசியப் போர்வை

நல்லூர்ப் பிரதிநிதி டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பேசுகையில் கூறியதாது:- இன விடுதலைப் போராட்டத்தில் தமிழ்பேசும் தொழிலாளரின் பங்கு மகத்தானது. இதை தமிழ் பேசும் தொழிலாளர்கள் நன்ருக மனதில் பதிய வைக்கவேண்டும். இடதுசாரி இயக்கங்கள் தேசியம் என்ற போர்வையில் புகுந்து தமிழ் பேசும் மக்கள் மத்தியிலிருந்து தமிழ் பேசும் தொழிலாளரைப் பிரித்து எடுக்க முற்படலாம். இந்த சூழ்ச்சி வலையில் சிக்கினுல் இனப் போராட்டம் முழு வெற்றியைப் பெற முடியாது. இதைத் தமிழ் பேசும் தொழிலாளர்கள் நன்ருக உணர்ந்து கொள்ள வேண்டும்.

### சிந்தனைப் புரட்சி

திரு. செ. கோடீசுவரன் பேசுகையில் கூறியதாவது:- தமிழ் பேசும் மக்கள் ஏற்படுத்தக்கூடிய புரட்சி இன விடுதலையை அண்டியே இருக்கும். அந்தப் புரட்சி எண்ணப் புரட்சியாகவும் அமைய வேண்டும். அப் புரட்சியின் முன்னணியில் தமிழ் பேசும் தொழிலாளர்கள் அணி திரண்டு நிற்க வேண்டும். அப்பொழுது தான் புரட்சியின் நல்ல பயனை நாம் அடைய முடியும்.

திருவாளர்கள்: ஐ. தி. சம்பந்தன், வே. கனகசபை முதலி, வே. சுப்பையா, யேசுதாசன் ஆகியோரும் உரை நிகழ்த்தினுகள். திரு. செ. யோ. பிரிட்டோ நன்றி கூறினுர்.

துறைமுக நாவாய்இயக்குநர் கழகத்தின் நடப்பு வருடப் பதவியாளர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்:

தலைவர்: திரு. தொம்மை சிலுவை பர்ணாந்து, துணைத் தலைவர்: திரு. மரியான் பர்ணாந்து, செயலாளர்: திரு. ஆ. செல்லமாணிக்கம், துணைச் செயலாளர்: திரு. குசலவன், பொருளாளர்: திரு. க. அருணுசலம், துணைப் பொருளாளர்: திரு. அ. செபஸ்தியாம் பிள்ளை, ஆட்சிக்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள்: செ. ஜோ. பிரிட்டோ, அ. மரியநாயகம், போ. பர்ணாந்து, சண்முகம், இரா. அ. பர்ணாந்து, செ. சத்தியசீலன், ம. ரப்பியல், க. அந்தோனிப்பிள்ளை. கணக்காளர்: திரு. சு. பிரான்சிஸ் டிக்குறுஸ்.

---

## உய்வதென்றே?

—வாணிதாசன்—

எண்ணி இளைக்கின்றுர் ஏங்குகிறுர் நித்திரையில்
கண்ணிழந்தார் பட்ட துயரினைக் காக்கின்றுர்
பெண்கள் இரவு பகலாய் விசும்புகின்றுர்
திண்ணையிற் கூடி சிதைந்த உடைபொத்தி
என்றுதான் திருமிந்த இன்னலெனக் கண்துடைத்து
நின்ற கணைக்காலில் நீளரிவான் பட்டஇவர்
கண்துயிலா வாழ்க்கையை வேரறுத்(து) உய்ப்பார்யார்
விண்தெளித்த வல்லோனே விண்டுரை நெஞ்சாற
குன்றம் பெறுமவ் மழைநீரோ கோதையர்
குன்றியழும் திழுத்தோ கன்னெஞ்சர் ஊண்தமிழர்
நெஞ்சில் விளைந்த நெருப்பாறுட்டின் நீரோடையில்
வஞ்சனையில் வாடுவோர் செந்நீர் இனிப்பாமோ
நெஞ்சம் துடிக்கும் நிறைகருவில் சேய்தாயே
கொஞ்சவிட முன்னர் குறைதீர்ப்பேன் என்கிறது
செய்தான் பயிரைப் பயனையோ தின்றுது
கொய்து தளிரைக் குறைவுற்ற மென்மையுடன்
கல்லிடையே கீழ்களாய்க் காட்டிடையே அஃறிணையால்
நெல்லிடை செத்த பதர்போல் நலிகின்றுர்
கெல்லினுல் வேர்கூடக் கண்ணீரால் காதைசொல்லும்
உல்லிலே வீழ்ந்தாருய் வதென்றே?

---

## எம். ஜி. ஆர். நாடக மன்றம்

கொழும்பு, எம். ஜி. ஆர் நாடக மன்றச் செயற்குழுக் கூட்டம் மன்றத்தலைவர் திரு. ஈ. எஸ். முருகேசு தலைமையில் அண்மையில் நடைபெற்றது. மறைந்த பாரதப் பிரதமர் நேருஜியின் நினைவை யொட்டி இரு நிமிடநேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

மன்றத்தின் பொருளாளர் திரு. பி. என். அழகர்சாமி பாரத தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விட்டார். பொதுச் செயலாளர் திரு. வி. இ. எம். சுப்பையா இந்திய உதவித் தூதுவரான திரு. பி. ஆர். என். மணியைக் கண்டு, மன்றத்தின் சார்பில் அனுதாபம் தெரிவித்தார்.

---


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப் படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகைக்கு அணை கட்டுவதில் வல்லவர் யார்?

## சிவபெருமானா அல்லது பொறியியலாளரா?

சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்து வைகை நதிக்கு அணைகட்டினாராம். இப்பொழுது தமிழ் நாட்டு பொறியியலாளர் அணைகட்டி சிவபெருமானைப் பல படிகள் மிஞ்சி விட்டார்கள். இயற்கையும் செயற்கையும் இணைந்து விளையாடும் அந்த வைகை அணையில் வளைந்து வருகிறோம். இருப்பிடம் திரும்பியதும் வண்ணப் பதுமைகள் போல் பெங்களூர் மங்கையர் எம்மை வளைந்து வருகின்றனர். பெண்களுக்கு இருக்கிறதே ஒரு தொற்று வியாதி—பைத்தியம்! அந்தப் பைத்தியம் எங்கள் பிரயாணக் குழுவிலுள்ள பெண்களையும் தொற்றிக் கொண்டது. இந்த 'எலேட்' மோகம் இந்தியப் பெண்களுக்கு அலாதிதான்— நம்மவர்க்கோ............!

## பெங்களூர் பெண்களிடம் தொற்று வியாதி....!

இந்த வர்த்தக ஒலிபரபுப் மயில்வாகனம் இருக்கின்றாரே, இவர் ரொம்பவும் பொல்லாத பேர்வழிதான். தமிழ் நாட்டில் மதுரை குன்னத்தூர் சத்திரம் என்ன; தமிழ் நாட்டின் எல்லாப் பகுதிகளிலுமே மனுஷன் 'வணக்கம்' கூறி நம்மை வரவேற்றுக் கொண்டே இருக்கின்றார்!

விஷயம் என்ன என்கின்றீர்கள்? தமிழ் நாட்டு ரேடியோக்கள் அத்தனையும் நமது இலங்கை வர்த்தக ஒலிபரப்பு 'மீட்டரை'த் திருப்பி வைத்துக்கொண்டு சினிமாப் பாட்டுக்களை ஒலி பரப்பிக் கொண்டிருக்கின்றன. நமது மயில்வாகனத்தின் குரலும் தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது!

குன்னத்தூர் சத்திரத்தில் குடி வந்த நம்மிடம் விடைபெறுகின்றான் அந்தப் 'போட்டர்'.

'தம்பீ! நாளை வங்கியில் பணம் மாற்றியதும் உடனேயே உன் பணம் 100 ரூபாவையும் தந்து விடுகின்றோம்' என்கின்றோம் நாம்.

"அதற்கென்னங்க; சாவகாசமாகத் திருப்பித் தந்தால் போச்சு" என்று கூறிவிட்டு; விடை பெற்றுவிடுகின்றான் போட்டர்.

அவன் அப்படி நம்மிடம் பணத்தைத் தந்துவிட்டு அப்படி அலட்சியமாக இருந்ததன் காரணம் பிறகுதான் நமக்குத் தெரியவருகின்றது.

எது எப்படி இருந்தாலும், அன்றையச் செலவுக்கு நமக்குப் பணம் கிடைத்துவிட்டதால், மிகுந்த உற்சாகத்துடன், அந்தப் பொலீஸ்காரன் சிபார்சு பண்ணியிருந்த 'வைகை அணை'யைப் பார்க்கப் புறப்படுவோம்.

### மதுரை பஸ் ஸ்டாண்ட்


இதோ மதுரை பஸ் நிலையத்துக்கு வந்துவிட்டோம். 'வைகை டாம்' என்ற 'போர்ட்டோடு' கம்பீரமாக நிற்கும் 'டி. வி. எஸ்' பஸ்ஸிலும் ஏறிக்கொள்ளுகின்றோம்.

இந்த மதுரை பஸ் நிலையம் இருக்கின்றதே; 'எக்ஸலண்ட்!' தமிழ் நாட்டின் எந்தக் கோணத்துக்கும் பறந்து செல்லக் கூடிய அளவுக்கு, தனியார் துறை பஸ்களும், சர்க்கார் பஸ்களுமாக நிறைந்து வழிகின்றன. கறுப்பு, மஞ்சள், சிவப்பு என்று ஒவ்வொரு கம்பெனி பஸ்ஸும் ஒவ்வொரு நிறத்தில் காட்சியளிக்கின்றன. அவை ஒவ்வொன்றும் உறுமிக் கொண்டு பரந்துகிடக்கும் தமிழ் நாட்டின் ஒவ்வோர் ஊருக்கும் புறப்பட்டுக் கொண்டிருக்கும் 'சந்தடி' நம் காதுகளைத் துளைத்துக்கொண்டே இருக்கின்றன.

நியதி தப்பாமல், காலம் தவறாமல் நாம் குடியிருக்கும் இந்தப் பூவுலகம் சுழன்று கொண்டிருப்பதென்னவோ உண்மைதான். இந்தப் பூச்சுழலின் 'கதி' ஒருவேளை மாறலாம். ஆனால், மதுரையில் ஓடும் இந்த அதிசய பஸ்களின் 'கதி' இம்மிதானும் தவறாமல் குறிப்பிட்ட நேரத்தில் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது.

ஒவ்வொரு பஸ் கொம்பனிக்காரர்களும் பொதுமக்களின் நம்பிக்கையை எவ்வளவு தூரம் கவர முடியுமோ அவ்வளவு தூரம் கவர்கின்றார்கள்! சர்க்கார் நடத்தும் பஸ்களின் நிலையும் அதேதான். பஸ் வரும் நேரத்தைப் பார்த்தே நம் கடிகாரத்தைத் திருப்பலாம்! அத்தனை 'பங்சுவாலிட்டி!'

'இந்த நிலை நம் இலங்கையில் எப்போது வரப்போகின்றதோ?' என்று ஏங்கிக் கொண்டு நமது 'வைகை அணை'ப் பிரயாணத்தை மேற்கொள்ளுகின்றோம்.




### வைகை அணை

அந்தப் பொலீஸ்காரரின் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டியதுதான். 'இந்திரலோகம் போல் காட்சியளிக்கும் ஸார்' என்று அவர் கூறியது வைகை அணைக்கு நாம் சென்றதும் நிஜமாகிக் கொண்டிருந்தது.

முன்னொரு காலத்தில் சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்து, மதுரை மாறனால் பிரம்படி பட்டு வைகை நதியில் 'அணை கட்டினா'ராம்! அன்று கட்டப்பட்ட அணை என்ன ஆயிற்றோ தெரியாது; ஆனால், சுதந்திர இந்தியாவின் தமிழ் நாட்டு அரசாங்கத்தால் கட்டப்பட்டுள்ள இன்றைய வைகை அணையின் கம்பீரத்தை நேரில் பார்த்தால்தான் புரிந்து கொள்ளலாம்.

இந்த அணைக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில், பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் மிஞ்சிவிட்டதாம்! அந்த மீதிப் பணத்தைக் கொண்டு, அங்கு அவர்கள் சமைத்திருக்கும் நந்தவனத்தைப் பார்க்க எத்தனை கண்கள் இருந்தாலும் போதாதே!

மின்சாரத்தின் துணைகொண்டு என்னென்ன ஜாலவித்தைகளைச் செய்ய முடியுமோ; அத்தனை ஜாலவித்தைகளைச் செய்து தள்ளியிருக்கின்றார்கள். பலவண்ண மலர்களுக்குப் போட்டியாக மின்சார 'பல்ப்'புகள் வித விதமான ஒளிகளை உமிழ்ந்து ... ருக்கும் காட்சியைப் பார்த்

## (11)

பார்த்தாலோ ஒரு பக்கம் அணைக்குள் தேங்கி நிற்கும் வைகை நதி; எதிர்ப்பக்கம் சீறி அடித்துக் கொண்டு பெரும் சத்தத்தோடு பாயும் வைகை நதி! நதிக்குக் கூட இரண்டு குணங்கள் இருக்குமோ! ஒரு பக்கம் மௌனமும் சாந்தமும், மறு பக்கம் ஆவேசமும், ஆர்ப்பரிப்பும்!

இந்த வைகை அலையினால், தமிழ் நாட்டின் பஞ்சத்தில் கணிசமான ஒரு பகுதி நிவர்த்தி செய்யப்படும் உண்மை நமக்கு விளக்கிக் கூறப்படுகின்றது. 'பாரதம் முன்னேறுகின்றது' என்பதற்குக் கண் முன்னாலே ஒரு நிதர்சனம்!

வளமான இந்த வைகை அணையைப் பார்த்து விட்டுப் பஸ் மூலம் மதுரைக்கு மீள்கின்றோம். தமிழகத்தின் இந்த வளர்ச்சி கண்டு நம் மனமெல்லாம் நிறைந்திருக்கின்றது.

### நம்மைச் சூழ்ந்த இளம் பெண்கள்

சத்திரத்துக்கு வந்து சேர்ந்தால், அங்கே இன்னும் ஒரு 'டூர் கிளிக்' 'டேராப்' போட்டிருக்கின்றது! அத்தனை பேரும் இளம் பெண்கள். பெங்களூரிலிருந்து வந்திருக்கும் அந்த உல்லாசப் பிரயாணிகள் கோஷ்டியில் ஒருத்திக்காவது தமிழ் தெரியாது! அவர்கள் [illegible] தில் அவர்கள் அத்தனை

தவர்கள், வேறு காட்சிகளைப் பார்க்கப் பிரியப்படமாட்டார்கள். 'சல சல' என்று பாய்ந்தோடி வரும் நீருக்குள் நிற 'பல்ப்பு'களைப் புதைத்து, நிறமற்ற நீருக்கு வண்ணமுலாம் பூசியிருக்கும் அழகு ஒன்றே போதுமே! விஸ்தாரமான அந்த வைகைப் பூங்காவை உல்லாசமாக வலம் வருவ

**நவம்**

தற்கு 'ஷ்பெஷலாக' ஒரு விளையாட்டுப் புகைவண்டியையே ஓடவிட்டிருக்கின்றார்கள்! 10 நயா பைசாவைக் கொடுக்கவேண்டியது, 'ஜம்' மென்று ரயிலில் ஏறிக் குந்திக் கொள்ள வேண்டியது; ராஜா மாதிரி நந்தவனம் முழுவதையும் சுற்ற வேண்டியது!

பிரமாண்டமான வைகை அணைக்கட்டின் மீது ஏறிப் பேரும் 'மெடிக்கல் ஸ்டூடெண்டு'கள் என்பது புரிகின்றது. டாக்டருக்குப் படித்துக் கொண்டிருக்கும் அந்த இளம் பெண்கள், நாம் இலங்கையிலிருந்து வந்திருக்கின்றோம் என்பதை அறிந்ததும் நம்மைச்சூழ்ந்து கொள்ளுகின்றார்கள். நம் நாட்டுப் பெண் பிரதமர் பற்றியும், சிறுபான்மையினரான தமிழர்கள் அங்கு அல்லல்படுவது பற்றியும் ஒவ்வொருத்தியும் துளைத்து எடுக்கின்றார்கள். நம்மால் முடிந்தவரை அவர்களுக்கு இலங்கையில் நிலையை விளக்கி வைக்கின்றோம்.

அந்த வைத்திய மாணாக்கிகள் ஒவ்வொருத்தியும் கண்களைப் பறிக்கும் விலை உயர்ந்த பட்டுச் சேலைகளைக் கட்டிக்கொண்டு சிங்காரித்த தேர்போல் காட்சியளிப்பதைப் பார்த்த நம் பிரயாணக் கோஷ்டியிலுள்ள பெண் ஜீவன்கள் அவர்களின் சேலைகளைத் தொட்டுத் தடவிப் பார்த்துக் கொள்ளுகின்றார்கள்.

### 'லவ்லி எலேட்'

பதிலுக்கு அந்தப் பெங்களூர்ப் பதுமைகள், நம்மவர்கள் கட்டியிருந்த 'எலேட் ஜார்ஜட்' புடவைகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு, 'லவ்லி! லவ்லி!' என்று சப்புக் கொட்டுகின்றார்கள்!

புடவை விஷயத்தில் பெண்கள் என்றால் பெங்களூரும் ஒன்றுதான்; இலங்கையும் ஒன்றுதான் என்ற முடிவுக்கு நாம் வருகின்றோம்!

'உங்கள் பிரயாணத் திட்டத்தில், பெங்களூரும் இடம் பெறுவதானால், அவசியம் எங்கள் கல்லூரிக்கு வந்து சேருங்கள்; உங்களுக்குவேண்டிய சகல ஏற்பாடுகளையும் பெங்களூரில் செய்து தருகின்றோம்' என்று கூறி முகவரியும் தருகின்றார்கள் அந்தக் கன்னியர்கள்.


'வந்தால் வருகின்றோம்' என்று பிடி கொடுக்காமல் பதில் சொல்லிவிட்டுப் படுக்கையைவிரிக்கின்றோம் நாம்.

விடிகின்றது.

'பாஸ்போர்ட்' கட்டுகளையும், பணம் மாற்றுவதற்குரிய 'ட்ராப்ட்டு'களையும் எடுத்துக் கொண்டு மதுரை 'சென்றல் பாங்குக்கு'க்குப் படை எடுத்தநம்மை அங்கே ஓர் அதிர்ச்சி வரவேற்கின்றது!

'ஸார்! உங்கள் 'அட்வைஸ்' சிலோனிலிருந்து இன்னும் வந்து சேரவில்லை ஸார்! போயிட்டு நாளை வாங்க ஸார்!' என்று திருவாய் மலர்ந்தருளுகின்றார் 'பாங்க்' மனேஜர்!


அவர் எந்தச் சுப சகுனத்தில் அப்படிக் கூறினாரோ தெரியவில்லை; அடுத்த நாளும் 'அட்வைஸ்' வரவில்லை! அதற்கடுத்த நாளும், அதற்கு அடுத்த நாளும் 'அட்வைஸ்' வரவில்லை! ஏன் 9 நாட்களாகவே அந்தப் பாழாய்ப் போன 'அட்வைஸ்' வந்து சேரவில்லை!





## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.




நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3,00,

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1964 யூன் மாதம் 28-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் : 3411 த. பெ. 1183


# திருமலைத் தீர்மானம்

தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களின் பதவிகளைத் துறந்து, தமிழ் பேசும் மக்கள் பூரண சுதந்திரம் பெறுவதற்கான அதிகாரத் தீர்ப்பை மக்களிடமிருந்து பெற வேண்டும் என கடந்த வார இறுதியில் திருமலையில் கூடிய தமிழரசுக் கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளது. அத்துடன் நேரடி நடவடிக்கைக்குத் தயாராகும்படியும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது செயற்குழு.

சிங்கள மக்களுடன் தமிழ் பேசும் மக்கள் உடனிருந்து வாழ முடியாத நிலையை அரசாங்கத்தின் திட்டங்களும், கொள்கையும், நடவடிக்கைகளும் ஏற்படுத்தியிருப்பதாகச் செயற்குழு குற்றஞ்சாட்டியுள்ளது. இந்த நிலைமை ஏற்பட்ட பின்னர், சுயாதிபத்தியம் கோரிப் போராடுவதைத் தவிர தமிழ் பேசும் மக்களுக்கு வேறு வழி கிடையாது.

சிங்கள அமுலில் மாற்றங்கள் செய்ய ஆட்சியாளர் தயாரில்லை என்றே தெரிகிறது. அவர்கள் சிங்களத்தைத் தீவிரமாகத் திணித்து, தமிழ் மொழியையும், தமிழ் பேசும் இனத்தையும் அழிப்பதிலேயே ஆர்வம் கொண்டுள்ளனர்.

அதற்கான சதித் திட்டங்களிலொன்றுதான் 2000 சிங்கள ஆசிரியர்களைத் தமிழ்ப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கும் முயற்சி. அந்தப் பிரதேசங்களிலிருந்து தமிழ் மொழியை அகற்றிவிட்டு, அதற்குப் பதிலாகச் சிங்களத்தைத் திணிப்பதே இந்த முயற்சியின் நோக்கம்.

இது முதல் முயற்சி. பின்னர், சிங்களம் படிப்பிக்கப்படும் தமிழ்ப் பாடசாலைகளில் படிப் படியாகச் சிங்களத்தையே போதனாமொழி யாக்கிவிடுவார்கள். இது ஒரு நீண்டகாலத் திட்டம்.

மலையக மக்களின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பது இதைவிட மிக எளிது. தோட்டப் பாடசாலைகளில் நேரடியாகவே சிங்களத்தைப் போதனாமொழியாக்கத் திட்டம் தயாரித்திருக்கிறார்கள். கல்வி வெள்ளை அறிக்கை அதற்கு வழி வகுத்துள்ளது.

இச் சதித் திட்டம் நிறைவேற அனுமதித்தால் தமிழ் மொழி மட்டுமின்றி தமிழ் பேசும் இனமே நாளடைவில் அழிந்தொழிந்து மறைந்துவிடும்.

கட்டாய ஓய்வு உத்தரவு அரசாங்க சேவையிலிருந்தே தமிழ் பேசும் மக்களை விரட்டி அடிக்கும் பாரபட்சமான ஒரு கொடிய நடவடிக்கை என்பதைத் திருமலைத் தீர்மானம் தெளிவுபடுத்துகிறது.

இன்னும் பல்வேறு துறைகளில் தமிழ் பேசும் மக்கள் இன்று இம்சிக்கப்படுகிறார்கள். இழிவுபடுத்தப்படுகிறார்கள். சொந்த நாட்டிலேயே அடிமை வாழ்வு வாழ கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

ஓர் இனம் மற்றோர் இனத்தின் மொழியால் ஆளப்படும்போது அது அடிமை இனமாகிவிடுவது தவிர்க்க முடியாது. தமிழ் பேசும் இனம் அவர்களின் சொந்த மொழியால் ஆளப்பட வேண்டுமானால், அவர்கள் சுதந்திரம் பெற்றேயாக வேண்டும். அதற்குத்தான் சமஷ்டி அரசியல் அமைப்பு வழி காட்டுகிறது.

பிரதம மந்திரி எதிலும் தாமதம் செய்யும் தந்திரத்தைக் கையாண்டுவருபவர். அரசியற் கட்சிகளுடன் கலந்து பேசி மொழிப்பிரச்சினையையும் சிறுபான்மையோரின் இதர பிரச்சினைகளையும் தீர்க்கப்போவதாக உறுதியளித்தார். ஆனால் அந்த உறுதிமொழி செயல்படவில்லை.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க என்றும் தயாராயிருக்கும் தமிழரசுக்கட்சி உத்தேச நேரடி நடவடிக்கையையும் நிறுத்திவைத்தது.

பிரதமரோ அதனைப் பயன்படுத்தாமல் 'தாமதத் தந்திரத்தை'க் கையாளத் தொடங்கினார். இந்த இடைவேளையை உபயோகித்து, சிங்களத் திணிப்பு தீவிரப்படுத்தப்பட்டது. தமிழ் அரசாங்க ஊழியர்களை வெளியேற்றும் படலமும் ஆரம்பமாயிற்று.

இதன் விளைவு பிரதமரின் வாக்குறுதியின் மீது தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கையிழந்ததுதான். சமரசமாக பிரச்சினையைத் தீர்க்கும் எண்ணம் அரசாங்கத்திற்கிருந்தால், கட்டாய ஓய்வுக் கட்டளை, சிங்கள ஆசிரியர்களின் படையெடுப்புபோன்ற மூர்க்கத்தனமான நடவடிக்கைகளையேனும் நிறுத்தியிருப்பார்களல்லவா?

இந்த நிலையில் விடுதலைப் போராட்டத்தை தொடங்குவதைத் தவிர தமிழ்பேசும் மக்களுக்கு வேறு வழி கிடையாது. மக்களின் உள்ளுணர்வையே திருமலைத் தீர்மானம் பிரதிபலிக்கிறது.

சிறுபான்மை மக்களுக்கு நியாயம் வழங்க வேண்டும் என்ற ஆர்வமிருந்தால், அதற்கு மற்றொரு வாய்ப்பும் ஆட்சியாளருக்குக் கிடைத்துள்ளது. சிம்மாசனப் பிரசங்கத்துக்குப் பிறகே தமிழ் பேசும் மக்களின் நடவடிக்கைகள் ஆரம்பமாகும். எனவே அதற்கு முன்பு சிங்கள ஆசிரியர்களை அனுப்பும் திட்டத்தைக் கைவிட்டு, கட்டாய ஓய்வு உத்தரவுகளையும் வாபஸ் செய்து ஆட்சியாளர் முதலில் தங்களின் நல்லெண்ணத்தைக் காட்ட வேண்டும். சிம்மாசனப் பிரசங்கத்துக்குப் பின்னர் பிரச்சினையைத் தீர்க்கத் தேவையான நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுக்க வேண்டும். இதனைச் செய்ய அரசாங்கம் தயாரா?

தமிழ் பேசும் மக்கள் சுமுகச் சூழ்நிலையை ஏற்படுத்தியதோடு, ஆட்சியாளருக்குப் போதிய அவகாசமும் அளித்து விட்டனர். "தாமதத் தந்திரம்" அவர்[illegible] பலிக்காது என்பதை கூட்டரசாங்கத் தலைவர்கள் [illegible] வேண்டும்.

# வெளிநாட்டு இந்தியர் நட்டாற்றில்

## இலங்கை அரசுக்கு திருமதி மேனன் வக்காலத்து

கடந்த வாரம் இலங்கை வந்த இந்திய வெளிநாட்டிலாகாத் துணை அமைச்சர் திருமதி இலட்சுமி மேனன் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்துள்ள கருத்துக்கள் இந்நாட்டில் வாழும் சிறுபான்மையினரை மட்டுமல்ல—இந்தியா உட்பட உலக நாடுகள் அனைத்திலும் வதியும் சிறுபான்மையின மக்களையும் சிந்திக்க வைத்துள்ளது. மேலும் வெளிநாடுகளில் குடியேறியிருக்கும் இந்திய மக்களுக்கும் அவர் தெரிவித்த கருத்து கவலைதருவதாக உள்ளது. பெரிய நாட்டின் பொறுப்புள்ள பதவியை வகிக்கும் ஒருவர் பொறுப்பற்ற முறையில் பேசுவது அந்நாட்டின் மதிப்பிற்கே இழுக்காகும். நேருவின் மறைவு இந்திய வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றத்தை விளைவித்துள்ளதா என்ற கேள்வியும் அரசியல் வட்டாரங்களில் கேட்கப்படுகிறது. இந்திய அரசு எதிர்காலத்தில் இந்திய நாட்டிலுள்ள சிறுபான்மையினர் விடயத்தில் எப்படி நடந்துகொள்ளப் போகிறது என்பதற்கும், அவரின் பேச்சு முன்னறிவித்தலாக அமைந்துள்ளது என்றே அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

கடந்த வாரம் இலங்கைக்கு வருகைதந்த இந்திய வெளிநாட்டிலாகாத் துணை அமைச்சர் திருமதி இலட்சுமி மேனன் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசுகையில் இரண்டு முக்கியமான கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். ஒன்று, இந்நாட்டின் மலை பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் இனத்தைச் சேர்ந்த இலங்கை இந்திய மக்களின் எதிர்காலம் பற்றியது. இரண்டாவது. இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு பற்றியதாகும்.

மலை நாட்டில் வாழும் இலங்கை இந்தியர் பிரச்சினை இன்று நேற்று மட்டுமல்ல கடந்த பல ஆண்டுகளாக இரு நாடுகளுக்கும் மத்தியிலுள்ள ஒரு திரப் பிரச்சினையாகும். இப் பிரச்சினை பற்றி இந்நாட்டின் அரசு கட்டிலில் ஏறிய கட்சிகள் அனைத்தும் தீர்த்து வைப்பதாக கூறி வந்துள்ளன, அவ்வப்போது இரு நாடுகளின் அரசியல் அதிகாரிகள் முதல் அரசியல் முதல்வர்கள் வரை வட்டமேசை மாநாடுகள் கூட்டி இப் பிரச்சினை பற்றி வாதிட்டுள்ளார்கள். 1954-ம் ஆண்டு இந்நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த கொத்தலாவலைக்கும் இந்திய நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த அமரர் நேருவுக்குமிடையில் ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் பிரச்சினை இன்னும் உயிர்வாழ்ந்து கொண்டேயிருக்கிறது.

### மீண்டும் சந்திப்பு

அடுத்த திங்களில் லண்டன் மாநகரில் நடைபெறவிருக்கும் பொதுநல நாட்டுப் பிரதம மந்திரிகளின் மாநாட்டின் போதும் இப் பிரச்சினை பற்றி இரு நாட்டுப் பிரதமர்களும் கலந்துரையாட இருக்கிறார்கள். இந்த நிலையில் இந்திய வெளிநாட்டிலாகாத் துணை அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து, விசனிக்கத்தக்கதாகும்.

நேரு—கொத்தலாவலை ஒப்பந்தத்தின் ஒரு சரத்து 'இலங்கை இந்திய மக்கள் எப்பகுதியில் வாழ்கிறார்களோ அப்பகுதி மக்களின் மொழியை அவர்களின் மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்துகிறது. இந்த ஒப்பந்தம் முற்று முழுதாக ஏற்றுக்கொள்ளப்படவுமில்லை, அமுல் நடத்தப்படவுமில்லை. மேலும் நேரு—கொத்தலாவலை ஒப்பந்தம் உருவாகிய பொழுது இந்நாட்டின் அரசியல் [illegible] வேறு, இன்றைய [illegible] சூழல் வேறு. இவற்றையெல்லாம் திருமதி மேனன் தெரிந்திருக்க வேண்டும் அவர் வெளிநாட்டிலாகாத் துணை அமைச்சர் என்ற ரீதியில். திருமதி மேனன் தாம் வகிக்கும் பதவியை மறந்து ஒரு முக்கியமான பிரச்சினை பற்றிக் கருத்துத் தெரிவித்திருப்பது விசனிக்கத் தக்கதாகும்.

### சிங்கள நாடு அல்ல

தமது கருத்துக்கு ஆதாரமாக அமெரிக்க நாட்டின் வரலாற்றை துணைக்கு அழைத்திருக்கிறார் திருமதி மேனன். பல நாடுகளிலும் இருந்து சென்று அமெரிக்க நாட்டில் குடியேறியவர்கள்

சுதந்திரன் அரசியல் நிருபர்

தமது பழமையை மறந்து வாழ்வதாகக் கூறியுள்ளார். அதேபோன்று இலங்கையில் உள்ள இந்திய வம்சா வழியினரும் தமது பண்பாடு, கலாச்சாரம், மொழி, மதம் அனைத்தையும் துறந்து இந்நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய சிங்களவர்களுடன் இரண்டறக் கலக்க வேண்டுமாம்.

இந்த நாடு சிங்கள நாடுமல்ல சிங்களவருக்கு முற்று முழுதாக உரியதுமல்ல. இந்நாட்டின் இரு தேசிய இனங்களில் ஒன்றாக தமிழினம் வாழுகின்றது. மலை நாட்டில் வாழக் கூடிய இந்திய வம்சாவழி மக்கள் தமிழ் பேசுமினத்தை சேர்ந்தவர்கள். எனவே தமிழ் பேசுமினத்துடன் ஒன்றி இணைவதே நடைமுறைச் சாத்தியம். இதை விடுத்து இனவொழிப்பு நடவடிக்கைக்கு துணையாக பொறுப்பு வாய்ந்த பதவியிலுள்ள திருமதி மேனன் கூறுவது வேதனை தரும் நிகழ்ச்சியாகும்.

### முடிவு இதுவா?

இலங்கை இந்தியப் பிரச்சினையின் முடிவு இதுதானா என்ற கேள்வி இந்திய அரசை நோக்கி இலங்கையின் மலைமுகடுகளில் இருந்து கேட்கப்படுகிறது. பர்மாவை உதாரணம் காட்டுகிறார் திருமதி மேனன். பர்மாவிலுள்ள நிலை வேறு இலங்கையிலுள்ள நிலை வேறு. இந்த உண்மையை வெளிநாட்டிலாகத் துணை அமைச்சரால் புரிந்து கொள்ள முடியவில்லை என்கின்ற போது வெட்கமும் வேதனையும் தொண்டையை அடைக்கிறது.

இலங்கை இந்தியப் பிரச்சினைக்கு முடிவு இதுவென்றால் இத்தனை ஆண்டுகளாக இப் பிரச்சினைக்கு உயிர் கொடுத்திருக்க வேண்டிய அவசியமில்லை. இப் பிரச்சினையில் முடிவான கருத்தைக்கூற இந்திய அரசு ஏன் தயங்க வேண்டும்? இலங்கை இந்தியப் பிரச்சினையில் இந்திய அரசு கைவிரித்தாலும், நீதியான முடிவைப் பெற்றுக் கொடுக்க இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் தயாராக உள்ளனர் என்ற உண்மையை இந்திய அரசு உணர்ந்து கொள்ளட்டும்.

### தேசிய ஒருமைப்பாடு

இலங்கையின் தேசிய ஒருமைப்பாடுபற்றிக் குறிப்பிடுகையில், இந்தியா விடுதலையடைந்த பின்னர் அங்கு வேற்றுமைகளெல்லாம் மறைந்து தேசிய ஒருமைப்பாடு உருவாகி விட்டதாகவும், அதே போல் இலங்கையிலும் உருவாக வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசு பிரிவினைத் தடை மசோதாவை நிறைவேற்றி ஒரு ஆண்டு பூர்த்தியாகவில்லை. இந்தியாவில் உள்ள பெரிய எதிர்க்கட்சிகளில் ஒன்றான தி. மு. க. வின் தலைவர் சிறையிலிருந்து வெளியாகி ஒரு வாரம் நிறைவெய்தவில்லை' கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற சென்னை மாநகரசபைத் தேர்தலில் இந்தி எதிர்ப்புப் பிரச்சினையை முன் வைத்து மகத்தான வெற்றியைத் தி. மு. கழகம் பெற்றுள்ளது. இந்த நிலையில் பாரதத்தில் தேசிய ஒருமைப்பாடு வெற்றி பெற்றுள்ளதாகத் திருமதி மேனன் கூறுவது கண்டு அரசியல் வட்டாரம் அன்[illegible] எள்ளிநகையாடுகிறது.

### பொய்யுரை

மேலும் தேசிய ஒருமைப்பாட்டிற்குக் கலப்புத் திருமணத்தை உதாரணமாக எடுத்துக் காட்டியுள்ளார் திருமதி மேனன். வட நாட்டிலுள்ள மார்வாரிகள் தென்னாட்டிலுள்ள தமிழர்களை மணம் செய்துள்ளார்களாம். அதே போன்று சிங்கள—தமிழ் கலப்புத் திருமணம் நடைபெற வேண்டுமாம். இதுவரை பாரத நாட்டில் எத்தனை கலப்புத் திருமணம் நடைபெற்றிருக்கிறது என்று புள்ளி விபரத்துடன் காட்டவில்லை. நாம் அறிந்தவரையில் எங்கோ ஒன்று இரண்டு திருமணங்கள் சந்தர்ப்பவசத்தால் நடைபெற்றிருக்கலாம் என்று அறியப்படுகிறது. ஒரு பெரிய நாட்டின் பொறுப்பான பதவியை வகிப்பவர், பொறுப்பற்ற முறையில் பேசுவது விசனிக்கத் தக்கதாகும்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்கள் துன்புறுத்தப்பட்ட பொழுது, 'அது உள்நாட்டு விடயம்' என்று அமரர் நேரு மௌனியாகிவிட்டார். ஆனால் இன்று பொறுப்புள்ள பதவியை வகிக்கும் திருமதி மேனன் இலங்கையின் உள்நாட்டு விடயம் பற்றிப் பேசியுள்ளார். ஆகவே, இந்தியாவின் வெளிநாட்டு அரசியல் கொள்கையில் நேருவின் மறைவுக்குப் பின்னர் மாற்றம் ஏற்பட்டுள்ளதா என்ற

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியிருப்பு இடாப்பில் பெயர் பதிவு செய்யவும்

## திருமலையைக் காப்பாற்ற தமிழரசார் தரும் திட்டம்

### சிங்கள மயத் திட்டம் தீவிரமடைகிறது

திருகோணமலைப் பிரதேசத்தை சிங்கள மயமாக்கவும், சிங்களப் பிரதிநிதியை இனிமேல் வரும் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கக் கூடிய வகையில் வாக்காளர் இடாப்புக்களைத் தயாரிப்பதிலும் சிங்கள வெறியர்கள் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர் என்று தெரிய வருகிறது. இம் முயற்சிக்கு அரசாங்கத்தின் மறைமுக ஆதரவு கிடைப்பதாகவும் கூறப்படுகிறது.

திருகோணமலையில் குடியேறியுள்ள தமிழ் பேசுவோர் அனைவரும் குடியிருப்பாளர் இடாப்புகளிலும், வாக்காளர் இடாப்புகளிலும் தங்கள் பெயர்களை உடனடியாகப் பதிவு செய்ய வேண்டுமென்று தமிழரசுக்கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொழில் காரணமாக திருகோணமலை மாவட்டத்தில் குடியேறியுள்ள தமிழ்பேசும் மக்கள் பலர் குடியிருப்பாளர் இடாப்புகளில் கூட தங்கள் பெயர்களைப் பதிவு செய்யவில்லை. குடியிருப்பாளர்இடாப்புகளில் பெயர் பதியாத எவருக்கும் வாக்காளர் இடாப்பில் இடம் இருக்காது. ஆகவே இது வரை தங்கள் பெயர்களை குடியிருப்பாளர் இடாப்புகளில் பதிவுசெய்யத் தவறியவர்கள் தங்கள் பெயர்களை உடனடியாகப் பதியும்படியும், தொடர்ந்துவாக்காளர் இடாப்பில் பதிந்துகொள்ளும்படியும் தமிழரசுக்கட்சித் தலைமை நிலையம் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது.

திருகோணமலைத் தொகுதியை ஒரு சிங்களப்பிரதேசமாகவும், இனிமேல் வரும் தேர்தல்களில் ஒரு சிங்கள பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கவும் ஏற்றவகையில் சிங்கள வகுப்புவாதிகள் தீவிரமாக முயற்சித்து வருகின்றனர். திருமலை நகரைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் கள்ளத்தனமாக சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருவதை நாம் பலமுறை எடுத்துக் கூறியுள்ளோம். திருகோணமலைப் பிரதேசத்தில் சிங்கள வாக்காளர்களைப் பதியும் வேலைகள் தீவிரமடைந்து வருவதும் பலமுறைசுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இத்துறையில் அரசாங்கத்தின் மறைமுகமான ஒத்துழைப்பும் கிடைத்துவருவது கண்கூடு. இத்தகைய தீய சக்திகளை நசுக்குவதற்கு திருமலையில் சென்று குடியேறியுள்ள தமிழ்பேசும் மக்கள் அனைவரும் குடியிருப்பு இடாப்புகளிலும் வாக்காளர் இடாப்புகளிலும் தங்கள் பெயர்களை உடனடியாகப் பதிவு செய்வதே மேல்.



சிங்களவராய்ப் பிறந்து தமிழ் வளர்க்கும் வணக்கத்துக்குரிய சுவாமி குருகுல சூரிய யோண் எட்வின் பெர்னாண்டோ அவர்களின் உருவப் படம். 11-ம் பக்கத்தில் இவரைப் பற்றிய கட்டுரை இடம் பெறுகிறது.

## கோட்டகலையில் ...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகநாதனும், கழகத்தின் பொருளாளர் திரு. க. சிவானந்த சுந்தரமும் உதவித் தொழில் கமிஷனரைச் சந்தித்து தகராறை விளக்கிக் கூறி நிவாரணம் கோரினர்.

உதவிக்கமிஷனர்தோட்ட முதலாளிமார் சங்கத்துடன் உடனடியாகத் தொடர்பு கொண்டார். எந்தத் தகராறையும் சுமுகமாக இலகுவாகத் தீர்க்க விரும்பாத அந்தச் சங்கம் தொழில் இலாகா அதில் தலையிட வேண்டியதில்லையெனக்கூறி வழக்கம்போல உச்சாணிக் கொப்பில் ஏறிக்கொண்டதாம்.

தோட்ட முதாலாளிமார்களின் இத்தகைய போக்குதான் தோட்டங்களில் தகராறுகள் தேவையற்றமுறையில் நீடிப்பதற்கு அடிப்படைக் காரணம் என்று தெரிகிறது.

### மத்தியஸ்தம் அல்லது நீதிமன்றம்

தகராறைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்ப்பதற்கு தோட்ட நிர்வாகிகளின் போக்கும், முதலாளிமார் சங்கத்தின் 'தான் கூறுவதுதான் சட்டம்' என்ற மனப்போக்கும் தடையாக இருப்பதால், இ. தொ. கழகத் தலைவரும், பொருளாளரும் தகராறை மத்தியஸ்தத்துக்கு அல்லது தொழில் நீதிமன்றத்துக்கு விடும்படி தொழில் கமிஷனரைக் கேட்டுக்கொள்வார்களென்று அறியப்படுகிறது.

12-ந் திகதி ஆரம்பமான வேலைநிறுத்தம் இன்னும் தொடர்ந்து நடைபெறுகிறது.

### சைவ மகா சபை ஆண்டு விழா

பெரிய கல்லாற்றுச் சைவ மகா சபையின் 23வது ஆண்டு விழா 26, 27, 28ம் தேதிகளில் பிள்ளையார் கோவில் முன்றிலில் நடைபெறுகிறது.

விசேட பூசைகளும், கூட்டுப் பிரார்த்தனைகளும் மூன்று தினங்களிலும் நடைபெறுகின்றன. தென்னக் கும்பரை தெய்வீக ஜீவன சங்கத்தைச் சேர்ந்த யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தா அவர்கள் இவ் வைபவங்களில் கலந்துகொள்ள விருக்கிறார்.

திரு. இ. வடிவேல் அவர்களின் கதாப் பிரசங்கமும், திரு. ஜி. பாலசுப்பிரமணியம், திரு. இ. குழந்தைவேல் ஆகியோரின் பக்திப் பாடல்களும், நடனம், நாடகம் முதலியனவும் நடைபெறவுள்ளன.

## தமிழரசு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1958-ல் வவுனியாவில் கூடிய தமிழரசுக் கட்சி மாநாட்டில் திருமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. என். ஆர். இராசவரோதயம் தலைவரானார். 1961ம் ஆண்டுவரை தலைவராகத் திரு. இராசவரோதயம் இருந்தார். இதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் 1961ம் ஆண்டு நடைபெற்ற தேசிய மாநாட்டில், பட்டிருப்புத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. சி. மு. இராசமாணிக்கம் தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இப்பொழுது மீண்டும் தமிழரசுத் தந்தை செல்வநாயகமே தலைவர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார்.

## மத்திய வங்கி கவர்னருக்கு தமிழரசுத் தந்தை கடிதம்

நூறு ரூபா நோட்டுக்கள் செல்லாது என்று தலைநகரில் ஏற்பட்ட பரபரப்பு, நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பொது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் தலைநகர் தவிர்ந்த ஏனைய பகுதியில் வாழும் மக்கள் தங்கள் வசம் உள்ள ஒன்று இரண்டு நூறு ரூபா நோட்டுக்களைக் கூட மாற்ற முடியாது கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக வட கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்கள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். இது பற்றி மத்திய வங்கி கவர்னருக்குத் தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் எழுதியுள்ள கடிதம் ஒன்றில், 'கச்சேரிகள் உள்ள இடத்தில் பணம் மாற்றும் அலுவலகங்களை உடன் திறக்கும்படி' வேண்டியுள்ளார்.

## பெண்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியின் தற்போதைய மாணவ; ஆசிரிய விகிதாசாரம்:

**மாணவர்கள்**

தமிழ் — 411 மாணவிகள்
சிங்களம் — 280 ,,
ஆங்கிலம் — 121 ,,

**ஆசிரியர்கள்**

தமிழ் — 13 ஆசிரியர்கள்
சிங்களம் — 12 ,,
ஆங்கிலம் — 5 ,,

கல்வி இலாகாவின் கட்டளைப்படி 28 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் வீதம் இருந்தும் தமிழ் பிள்ளைகள் 32 பேருக்கு ஒருவர் வீதம்தான் ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அது மட்டுமல்லாமல், சகல மாணவிகளையும் சமமான முறையில் கணித்து வந்த செல்வி எல். சொலமன்ஸ் என்ற அதிபரைத் தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சாதகமானவர் என்று சில தீவிரவாதிகள் குற்றஞ்சாட்டி, கல்வி இலாகாவின் துணையுடன் ஒரே தினத்தில் தந்தி மூலம் மாற்றிவிட்டனர். பாரபட்சமற்ற முறையில் மாணவிகளை நடாத்திய ஒரே குற்றத்தைத் தவிர வேறோர் குற்றமும் அவர் புரிந்தவரல்லர்.

## சீன–ரஷ்ய எல்லையில் பீரங்கிச் சண்டை

### இருட்டடிக்கப்பட்ட செய்தி வெளியாகிவிட்டது

கஜாகிஸ்தான், சிங்கியாங் ஆகியவற்றின் எல்லைகளில் சீன–சோவியத் காவற்படையினரிடையே பீரங்கிச் சண்டை ஏற்பட்டதாகக் கிழக்குப் பெர்லினில் தகவல் அடிபடுகிறதாம். இலி ஆற்றின் மீதுள்ள குல்தஜா என்னுமிடத்துக்கு அருகில் இரு தரப்பினரும் பீரங்கியால் சுட்டுக் கொண்டனர் என்றும் கூறப்படுகிறது.

எல்லையில் வாழும் மக்களிடையே குருஷ்சேவுக்கு எதிரான பிரசார வெளியீடுகளை விநியோகிப்பதற்காகச் சோவியத் எல்லைக்குள் புகுந்த செஞ்சீனரை, இரஷ்யக் காவல்படையினர் எவ்வாறு துரத்திச் சென்றனர் என்பதைக் கிழக்கு பெர்லின் தகவல்கள் கூறுகின்றன.

அந்நிகழ்ச்சி பல வாரங்களுக்கு முன்னர் நடந்ததென்றும், இப்போதுதான் அது பற்றிய விவரங்கள் முதன் முறையாக வெளியாகியிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

## வெளிநாட்டு..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி எழுகிறது. இதற்குப் பதில் கூறுபவர் யார்?

### அங்கும் இனவொழிப்பா?

திருமதி மேனனின் பேச்சு இனவொழிப்பு நடவடிக்கையில் தீவிரமாகச் செயல்படும் இலங்கை அரசிற்கு ஒரு வரப்பிரசாதமாகும். இலங்கைஅரசு கடைப்பிடிக்கும் கொள்கையை சரியானதென வக்காலத்து வாங்க ஒருவர் அவசியமாகத் தேவைப்பட்டார். அப்பணியை திருமதி மேனன் குறைவின்றி நிறைவேற்றியுள்ளார். திருமதிமேனன் தனது பேச்சின் மூலம் இந்நாட்டு அரசின் நட்பை பெற்றுள்ளதாக எண்ணியிருக்கலாம்; ஆனால் திருமதிமேனன் எதிர்பார்த்தது இலங்கை அரசிடம் இருந்து கிடைக்கப் போவதில்லை.

திருமதி மேனனின் பேச்சை அரசியல் அவதானிகள் மிகவும் உன்னிப்பாக கணித்துள்ளனர். இந்தியாவில் உள்ள சிறுபான்மையினருக்கு புதிய காங்கிரஸ் தலைமை கொடுக்கவிருக்கும் அரசியல் அந்தஸ்த்துஎன்ன? இலங்கையில் இனவொழிப்பு இன்றுவரை இந்தியாவில் சிறுபான்மையினர் ஒதுக்கப் படுகிறார்கள். நாளை அங்கும் இனவொழிப்பு தலைதூக்குமா?

## பேசும் பதுமைகள்

ஒன்றுடன் ஒன்று பேசிக் கொள்ளும் இயந்திர 'மூளை'கள் அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ளன. மற்ற இயந்திரங்களுக்கு எப்படி டெலிபோன் செய்வது என்று இப்போது அந்த இயந்திரங்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. டெலிபோன் செய்யும் போது அந்த நம்பர் கிடைக்காவிட்டால் மறுபடி டெலிபோன் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

## புதிய ஊழியர்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வட கிழக்கு மாகாணங்களிலுள்ள இரு தபால் அத்தியட்சர் அலுவலகங்களில் தமிழ் பிரதேச அஞ்சல் நிலையங்கள் சம்பந்தப்பட்ட கருமங்களைப் பரிபாலனம் செய்வதனாலும், அங்கு வேலை செய்யும் பொது சேவைத் தொழிலாளர்கள் பெரும்பான்மையும் தமிழர்கள் ஆனமையினாலும் இவை சம்பந்தமான கடமைகள் அனைத்தும் எழுது வினைஞர்களுக்கே உரியதனாலும் அவ்விடங்களுக்கு அஞ்சல் எழுது வினைஞர்களையே நியமிக்கும்படி தபால் தந்திச் சேவை மந்திரியை வற்புறுத்துவதெனவும்;

அஞ்சல் எழுது வினைஞர் சங்கத்தின் வருடாந்த மாநாடு இவைபற்றி விவாதித்து தீர்மானம் எடுக்கும்.


'சுதந்திரன்' விற்பனையாளர்கள்

கண்டி
மா. கந்தையா,
110, மார்க்கட்,
கண்டி.

ஆலி-எல
திருக்குமார் ஸ்ரோஸ்,
33/1, பிரதான வீதி,
ஆலி-எல.

கந்தகெதர
எல். எஸ். சரவணம்,
84, கந்தகெதர,
அட்டன்.

அட்டன்
இம்பீரியல் அச்சகம்,
பிரதான வீதி,
அட்டன்.

அட்டன்
ராஜா ஸ்டோர்ஸ்,
பிரதான வீதி,
அட்டன்.

கம்பளை
எஸ். பி. செல்லமுத்துப் பிள்ளை,
25, அம்பகமுவ வீதி,
கம்பளை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

'எந்தப் பெண்? என்னைக் காத்து நிற்கிறாளா?' எனக்கு ஒரே வியப்பாய்ப் போய் விட்டது. என்னை யார் அப்படிக் காத்து நிற்கப் போகிறார்கள்? அதுவும் பெண்ணுமே! எனக்கு அறிமுகமான பெண் யாரும் இங்கிருப்பதாகப்படவில்லையே!

'ஏன் தம்பி; எனக்குத் தெரியாதென்று இந்த நடிப்பெல்லாம்' நண்பன் கிண்டிக் கிளறினான்.

'உண்ட தலையாணையடா கந்தசாமி, எனக்கு யாரென்றே தெரியல்ல'

'என்னிட்டயாடா பயறு விதைக்கிறாய்? இன்டெக்ஸ் நம்பர் ஏ 6972; உனக்குப் பக்கத்தில இருந்த மெல்லிய சிவத்தப் பெட்டை......... இப்ப தெரியுதா?' என் முதுகிலே தன் பரந்த கை முழுக்கப் பதித்துச் செவியை வேறு முறுக்கினான் கந்தசாமி.

'உம்; நான் நிண்டா உனக்கு ஒன்றுமே புரியாது தான். நான் போறன். நீ போய்... உம்......' அவன் சிரித்துக் கொண்டே நடந்து விட்டான். அரசினர் கல்லூரியை நோக்கி என் மிதி வண்டியின் சக்கரங்கள் சுழன்றன. 'உனக்குப் பக்கத்திலே யிருந்த மெல்லிய சிவத்தப் பெட்டை'. இந்த வார்த்தைகளும் எனக்குள்ளே சுழலவாரம்பித்தன.

சுமார் நான்கு மாதங்களுக்கு முதல் எங்கள் மன்றத்தின் சார்பாக எடுத்த பாரதி விழா இப்போது ஞாபகம் வருகிறது. அந்த விழாவிலே பாரதி பாடல்கள் பாடுதற்காக ஒரு மகளிர் பாடசாலையிலிருந்து சில மாணவிகளை வரவழைக்க ஏற்பாடாயிருந்தது. ஆனால் விழா தொடங்கிவிட்ட பிறகும்கூட அவர்களில் யாரும் வராமற் போகவே பெரிதும் அதிர்ந்து விட்டோம். கடைசியாக அந்த ஆசிரியை ஒரேயொரு மாணவியோடு வந்து சேர்ந்தாள்.

'என்ன செய்வது மற்றப் பிள்ளைகள் பாடசாலைக்கே வரவில்லை.' தனது வருத்தத்தைத் தெரிவித்தாள் ஆசிரியை.

'இந்த அளவிலேயாவது நீங்கள் வந்து சேர்ந்ததே பெரிது' எங்கள் செயலாளர் இப்படித் தணிந்து பேசினார். 'ஆமாம்; எப்படியோ நிகழ்ச்சி நடந்து விட்டால் சரி. நான் செயலாளருக்கு அனுசரணையாகக் குரல் கொடுத்தேன். அப்போது தான் அந்த மாணவி தன் கடைக் கண்களால் என்னை நோக்கினாள். அழகான செஞ்சாந்துத் திலகம், அவள் ஒளி பொருந்திய நெற்றியிலே பிரகாசித்தது. அலை போன்ற சுருள் சுருளான கேசத்தை ரம்மியமாக வகிர்ந்து பின்னலிட்டிருந்தாள். பாதம்வரை மிதந்து கிடந்த பாலைப் பழித்த பாவாடை அவள் சிவந்த மேனிக்கு ஒரு தனி எழிலை யூட்டியது. சிவந்த ரோஜா மலரைப் பனிப் படலம் மறைத்தது போன்ற அந்த ஆடை, அவளைத் தேவலோகக் குமரியாகக் குளுமையோடு எடுத்துக் காட்டியது. ஆமாம்; அது இளமையின் முதற்படியிலே கால் வைத்து விட்ட பருவம்: 'அவள் இன்னும் ஒரு முறை நிமிர்ந்து பார்க்க மாட்டாளா?' என்ற இனம் புரியாத ஒரு துடிப்பு என்னுள்ளே முளைத்து விட்டிருந்தது.

'சுருதிப் பெட்டியை இயக்க யாராவது வேண்டுமே!' அந்த ஆசிரியையின் குரல் என்பக்கம் திரும்பியதைத் தெரிந்து கொண்ட பிறகுதான் என்னைச் சமாளித்துக் கொண்டேன். 'யாராவது சின்னப்பையனே போதும்; இல்லையா?' என்றபடியே எனது கடைசித் தம்பியை அழைத்து விட்டேன். அந்த ஆசிரியை சுருதிப் பெட்டியை இயக்கும் விதத்தைப் பையனுக்குக் காட்டிக் கொடுத்தாள். நிகழ்ச்சி ஆரம்பமானது.




அவள் பாடினாள்; அந்த மாணவி பாடினாள்—இல்லை அந்தத் தேவ உலக இளம் தேவதை பாடியது—அதுவுமில்லை, குயில் தேனைப் பொழிந்தது. பாரதியே இவள் பாட வென்றுதானோ தமிழ் செய்து வைத்தான்? அவன் தீர்க்கதரிசி!

விழா முடிந்தது. அவர்களை நாங்கள் நடந்து செல்ல விடவில்லை; காரிலே ஏற்றி அனுப்பிவைத்தோம். கார் புறப்படும் போதும் ஒரு தடவை, அவள் தன் குமுத விழிக் கோணங்களை என் மீது திருப்பியது, ஞாபகமிருக்கிறது. அவள் போய் விட்டாள்.

இப்படி எத்தனையோ பேரைச் சந்திக்கிறோம். அவர்களைப் பற்றியெல்லாம் சிந்தித்துக் கொண்டேயிருந்தால்?...வெறும் சண நேர உணர்ச்சிச் சிந்தனைகளைத் தூக்கிப்பிடிக்க முடியுமா? அழகு எங்கிருந்தாலும் ரசிக்கத்தான் கலையுள்ளம் துடிக்கிறது. எழில் எங்கிருந்தாலும் பருகத்தான் விழிகள் ஆசைப்படுகின்றன. ஆனால் சமூகம் இருக்கிறதே, அதற்குப் பயப்பட வேண்டியிருக்கிறதே! அது நாசமாய்ப்போக; பொல்லாத சமுதாயம்! ஏன் இப்படிப் பண்பாட்டை வளர்த்தது? அதன் தலையிலே இடிவிழ; உணர்ச்சிகளை மானத்துக்கும் மரியாதைக்கும் பெருந்தன்மைக்கும் பயந்து ஒடுக்கி வைக்க வேண்டியிருக்கிறதே! சே, சே, பாழும் சமூகம். ஒன்றில் இலமூரிய நாகரிகத்தின் சிகரத்தை எட்ட வேண்டும். அல்லது மனித ஆரம்பத்தின் முதற்படியிலே நிற்க வேண்டும். அதுவன்றி, இந்த இடைநிலையும்; நாகரீகமும் யாருக்கு வேண்டும்? அவள் போய் விட்டாள்— என்ற நிலை இத்தனை தூரம் சிந்திக்க வைத்து விட்டதென்றால் எந்த வகையான சிந்தனை! சிரிப்புத்தான் வருகிறது. அதன் பின்பும் பல சந்தர்ப்பங்களிலே அவளை நான் பார்த்ததுண்டு. அப்போதெல்லாம் அவள் சிரித்து விட்டுக் குனிந்து கொள்வாள்.

அன்று ஏதோ ஒரு புதிய படம். தியேட்டருக்குள் நுழையுமுன்பே படம் ஆரம்பித்து விட்டது. தட்டித்தடவி ஒரு இடத்திலே அமர்ந்து கொண்டேன்.

என்பக்கத்திலே யாரோ குசுகுசுப்பது கேட்டது. மல்லிகை வாசம் வேறு வீசியது. அத்தோடு புதிய ஆடையின் சரசரப்பு வேறு. அப்போது தான் வெளியிலிருந்து வந்தேனு, என் கண்களுக்கு எல்லாமே இருளாய்த்தானிருந்தது. ஆனால் அந்தக் குசுகுசுப்பு தெளிவாகக் கேட்டது.



'டடி; இவர்தான்; அவர் நான் சொன்னேனே!.........' இந்தக் குசுகுசுப்பு ஒரு பெண்ணுடையது தான்.

'ஆ! பொய்'

'இல்ல, டடி, நீங்க கேட்டுப் பாருங்கோ'

'இன்றவலுக்கை' பார்ப்பம்.........'

அந்தக் குசுகுசுப்பு என்னைப் பற்றித்தான் [illegible] புரிந்து கொண்ட எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. யாரென்று பார்த்து விட வேண்டுமென்ற துடிப்பு. ஆனால் கண்ணை விட்டு அந்த இருள் தெளிய மாட்டேனென்கிறதே. படத்திலே கருத்துச் செல்லுமா? இதே எண்ணத்தில் ஒன்றரை மணி நேரம் ஓடிமுடிந்தது. நான் சட்டென்று திரும்பினேன். அவளும் என்னைப் பார்த்தாள். முறுவலித்துக் கொண்டே குனிந்து கொண்டவள், கிழவரைச் சுரண்டினாள். கிழவர் என்னை நோக்கினார். என்ன விபரீதமோ? என் இதயம் பலமாக அடிக்க ஆரம்பித்தது.

'மெய்தானு தம்பி இந்தப் பிள்ளை சொல்வது?'

'என்ன?' நான் தடு மாறினேன்.

'அந்த 'மாலதி' என்று சொல்லிக் கதையெல்லாம் எழுதுறது......'

'ஓ அதுவா......?' எனக்கு உயிர் மீண்டது...'இல்லையே! யார் சொன்னது?' கிழவர் அவளைப் பார்த்தார்.

'ஏன் பொய் சொல்றீங்க?' அவள் என்னைப் பார்த்தே கேட்டாள். 'நீங்கதான் எனக்கு நல்லாத் தெரியும். பத்திரிகையில் போட்டிருக்கு'......நான் குனிந்து கொண்டே பெரு விரலைக் கடித்தேன். அவளிடம் வகையாக மாட்டிக் கொண்டிருக்கும் போது......?

'இல்ல டடி, இந்த எழுதுற ஆக்களெல்லாம் இப்படித்தான். பொம்புளையளுட பேரை வச்சிக் கொண்டா அவங்களை யாரும் கவனிக்கமாட்டாங்க என்ட எண்ணம்' அவள் சின்னக் குரலிலேதான் குழைந்தாள். கிழவர் சிரித்தார். நானும் சிரித்தேன். அவளும் இமைகளைப் படபடவென அடித்துக் கொண்டு முறுவலித்துக் கொண்டே சேலைத் தொங்கலை முறுக்கினாள். அந்த இளநீலப் புடவைகூட அவளுக்கு அழகாக இருந்தது. நீலக் கண்ணாடித் தாளில் மறைத்து வைத்த புதிய ரோஜா மலராக அவள் தோற்றமளித்தாள்.

மணி அடித்தது. கிழவர் எழுந்து வெளியே போனார். முன்னும் பின்னுமாக சில கண்கள் அவளையும் என்னையும் தனித்து வைத்து நோக்கின. சே, என்ன சங்கடமான நிலை. அவளை நன்றாகப் பார்க்க வேண்டுமென்ற துடிப்பு! மறுபுறம் யாராவது பார்த்துவிடுவார்களோ என்ற நடுக்கம், கிழவர் இருக்கும்போது பார்த்தாலும் பாதகமில்லை. இப்போது பார்ப்பது ரவுடித்தனம் என்ற ஒரு மான உணர்ச்சி, அதையும் மீறத் துடிக்கும் இளம் துடிப்பு; அப்பாடா; என்ன வேதனை அது? அந்த வேதனையிலும் புரியாத ஒரு புல்லரிப்பு—ஒரு கிளு கிளுப்பு!

இரண்டாம் மணியும் அடித்தது. கிழவர் இப்போதும் வரவில்லை. படம் ஓடத் தொடங்கியது. அவரை இன்னும் காணவில்லை. கண்களின் ஆசைத் துடிப்புக்கு மனம் அடங்கிவிட்டது. அவளை நோக்கினேன். அடடா, அவள் எப்போதிலிருந்தோ என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள் போலிருக்கிறதே! அப்படியானல் என் முகம் பிரதிபலித்த உணர்ச்சி மாற்றங்களை அவள் கவனித்தேயிருப்பாள். எனது முகத்தில் அசடு வழிந்தது, எனக்கே தெரிந்தது. அதை மறைக்கப் புன்னகைக்க முயன்றேன். நிழல் மயமான இலேசான இருளிலும் என் பற்களை அவள் கண்டிருக்க வேண்டும். அவளின் புன்னகையும் இதழ் விளிம்பிலே பளபளத்தது. எனது விழிகளை அங்கிருந்து மீட்டுத் திரையை நோக்கினேன்.

'உஸ்........' அவள் தானு? நான் திரும்பவில்லை.

'உஸ்; உங்களைத்தான்...' எனக்குப் பார்க்க வெட்கமாக—பயமாக இருந்தது.

'...உஸ்...மாலதி!...' அவள் கையை நீட்டினாள். அதிலே இரண்டு 'சாக்லேட்'கள் இருந்தன.

'ஒன்று உங்களுக்கு...உம்..' நான் எடுக்கவில்லை. வேண்டாம் என்று தலையை ஆட்டினேன்.

'பிளீஸ்......' என்றாள் அவள்...எனக்குப் பேச முடியவில்லை.

'சும்மா எடு தம்பி'. கிழவரின் குரல் பின்னாலிருந்து வந்தது. அவர் இருவருக்கும் இடையில் அமர்ந்து கொண்டார்.

'டடி இந்த எழுத்தாளர்கள் சாக்லேட் சாப்பிட்டால் கற்பனை வராதோ?' அவள் கிழவரைக் கேட்டாள். கிழவர் என்னைப் பார்த்தார். 'அப்படி ஒன்றுமில்லை' என்று நான் சிரிக்க முயன்றேன். அவள் அதிலொன்றை என் மடியிலே போட்டாள்.

அந்த ஒன்றரை மணி நேரமும் அடிக்கடி அவள் என்னைப் பார்த்தாள். நான் அவளைப் பார்த்தேன். கிழவர் திரையைப் பார்த்தார். முறுவலித்துக்கொண்டே பிரிந்து சென்றோம்.

இதன் பின் வீதியோரங்களிலும், புத்தகசாலைகளிலும் அவளை நான் சந்தித்ததுண்டு. முறுவலிப்போம், பேசியது கிடையாது. பேச வேண்டும் — அதுவும் தனியாக நீண்ட நேரம் பேச வேண்டும், இந்த அவா எனக்கிருந்தது அவளுக்கும் இருந்திருக்க வேண்டும்.

பல்கலைக் கழகத் தொடக்கத் தேர்வின் முதல் நாள், அவளும் வந்திருந்தாள் என்பது எனக்குத் தெரியாது. அடுத்த நாள் நான் நிலையத்தைத் அடைவதற்கும் பரீட்சை ஆரம்பமாவதற்கும் சரியாயிருந்தது. அவசரமாக எனது பழைய மேசையை நோக்கிய நான் ஏமாந்தேன். அதிலே வேறொருவர் அமர்ந்திருந்தார். எனது தடுமாற்றத்தையுணர்ந்த மேற்பார்வையாளர் எனது இலக்கமிட்ட மேசையைக் காண்பித்தார். அதிலே போய் அமர்ந்த பின்புதான் பக்கத்திலிருந்தவர்கள் மீது எனது கண்கள் விழுந்தன. எனக்கு முன்பாக, 'போனி றெயில்' வைத்த ஒரு ஆசிரியை, இடது பக்கமாக அமர்ந்திருந்தது? அவள்—அவள் தான்—அவளேதான். அவள் திரும்பினாள். இருவரும் முறுவலித்தோம். அந்தப் பக

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமெந்து ஆலை: தொழிற்சங்க தலைமை சிங்களவர் கையில் இருப்பதா?

## உணவுத் திணைக்கள ஊழியர்கள் கூட்டத்தில் கோடீசுவரன்

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தின் உணவுத் திணைக்கள உணவு அமைச்சுக் கிளையின் இரண்டாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 17-6-64 மாலை 4-45 மணியளவில் உணவுத் திணைக்கள விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடைபெற்றது. கிளைச் சங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கத் தாய்ச் சங்கத் தலைவர் திரு. செ. கோடீசுவரன் பி. ஏ. அவர்களும் பிரசன்னமாக இருந்தார். திரு. கோடீசுவரன் உரையாற்றுகையில் தொழிற் சங்கங்கள் விழிப்பாகவிருந்து உத்வேக போராட்டம் நடத்த வேண்டிய காலம் எப்பொழுதையும்விடத் தற்பொழுதுதான் வந்துள்ளதாகவும் முதலாளித்துவத்தின் அழிவிலேதான் சமத்துவம் (சோசலிசம்) உருவாக முடியும் என்ற நியதியுடன் வகுப்புவாதத்தின் கோர தாண்டவமும் அப்பொழுதுதான் அழிவெய்தும் என்றும் கூறினார்.

### தீவிரம் வேண்டும்

இங்கு சோசலிசம் பேசுபவர்கள் முதலாளித்துவத்துடன் இணைந்துள்ள வேளையில் வகுப்புவாத பூதம் தமிழூழியர்களையும் தமிழ் பேசும் மக்களையும் விழுங்கி வருவதனால் சோசலிச சமுதாயத்தை இனிமேல் இங்கு எதிர்பார்க்க முடியாதாகையால் எமது உரிமைப் போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டியது அவசியம்.

தற்போதைய சூழ் நிலையில் ஒரு வேளை சில சலுகைகள் எங்களுக்குக் கிடைத்தாலும் முழு உரிமைகளையும் பெறும்வரை எங்கள் போராட்டம் ஓயக்கூடாது.

### நமது சாதனை

தொழிற் சங்க வளர்ச்சியிற் கிளைச் சங்கங்களின் பங்கு மிக முக்கியமானது. குறைவை எடுத்துக் காட்டி ஆலோசனைகளைக் கொடுத்துப் பாரத்தின் பகுதியையும் சுமக்க வேண்டியது அவர்கள் கடமை.

வாழைச்சேனைத் தாளாலைக் கூட்டரவு தொழிற் சங்க ரீதியில் எடுத்த தீவிர போராட்டம் மொழிவழித் தொழிற் சங்க சரித்திரத்தில் அழியா இடம் பெற்ற ஒன்றென்பதை மறுக்க முடியாது. மொழிவழித் தொழிற் சங்கத்தில் மட்டுமல்ல தொழிற்சங்க இயக்கத்திலேயே அத்தகைய சாதனைகளை என்றுமே கண்டதில்லை எனவும் கூறினர்.

### கையாலாகாதவர்கள்

சிமெந்துக் கூட்டுத் தாபனத்திலும் இந்தவகை நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யலாகாதா என வினவியதற்கு, அங்கிருக்கும் தொழிற் சங்கம் தலைமைப் பதவிகளைத் தாம் வகிக்காது விரல்விட்டு எண்ணத்தக்க சிங்கள ஊழியர்களிற் சுமத்திவிட்டுத் தமிழினத்திற்கே துரோகமிழைக்கிறார்கள் எனவும் அதைவிட வருத்தம் தரும் இழிவு வேறெங்கும் கண்டதில்லை எனவும் பதில் கூறினர்.

உடலுழைப்புத் தொழிலாளர்களின் தொழிற் சங்கங்களே முக்கியமாகையால் அவைகளை உருவாக்குவதும் ஊக்குவதும் முக்கியம் எனவும் கூறினர்.

பின்வருவோர் நடப்பு ஆண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. செல்லத்துரை, துணைத்தலைவர்: திரு. நா. பாலசுப்பிரமணியம், செயலாளர்: திரு. இ. தியாகராசா, துணைச் செயலாளர்: திரு. தி. அ. தில்லைநாதன், பொருளாளர்: திரு. ச. மு. தியாகராசா.

ஆட்சிக்குழு உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: சி. தவஞானம், க. பிறைசூடி, மு. அ. ஜயராசா, கே. வீரசிங்கம்.

## தமிழ் மறையவில்லை

"காப்புறுதி பிரசுரத்தில் தமிழ் மறைந்தது" என்று 31-5-64 இதழ் 6ம் பக்கத்தில் ஒரு செய்தி பிரசுரமானது ஞாபகமிருக்கலாம். காப்புறுதிக் கூட்டுத்தாபன அபிவிருத்தி அதிபரான திரு. யு. டி. ஆர். குணரத்தின கிழ்க்கண்ட கடிதத்தைச் 'சுதந்திரனு'க்கு எழுதியிருக்கிறார்:

"இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் செய்தி வெளியீட்டில் 'தமிழ் மறைந்து விட்டது' என்ற தலைப்பில் வெளியாகிய உங்கள் செய்தியும், தாபனத்துக்குத் தமிழ் பேசும் மக்களின் ஆதரவு பற்றிய உங்கள் விமர்சனமும் உங்கள் வாசகர்களிடையே தப்பபிப்பிராயத்தை உண்டாக்கலாம். ஆகையினால், எமது பிரசுரத்தின் உண்மை நிலையினை உடனடியாக விளக்க விழைகிறோம்.

சென்ற இரண்டு இதழ்களில், தமிழின் 'மறைவு' ஏற்படக் காரணம் முற்று முழுதாக நிர்வாகச் சிக்கல்களினாலல்லாது, கொள்கையினால் அல்ல. எமது தமிழ்ச் சகோதரருக்கோ அல்லது அவர்களுடைய மொழிக்கோ எவ்வித களங்கமும் எண்ணப்படவில்லை.

எங்களது மொழி பெயர்ப்பு வசதிகள் வழக்கமான நிலைக்கு வந்ததும், நிலைமை திருத்தியமைக்கப்படும்.

'காப்புறுதிச் செய்தி'யின் அடுத்த இதழ் வழக்கமான அதன் தமிழ்ப் பகுதியுடன் வெளி [illegible] இறேன்.'

## நிதி மந்திரி என். எம். பெரேராவுக்கு

நாவலப்பிட்டித் தொகுதியிலுள்ள உடஹந்தன்னை சென்திர மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானக் கலை, கைப்பணிக் கூடத் திறப்புவிழாவில் உரை நிகழ்த்திய நாவலப்பிட்டித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஆர். எஸ். பெல்பொல கூறியதாவது:

'மற்றவர்கள் சந்தேகத்துடனும் பீதியுடனும் நோக்கிய இடதுசாரித் தலைவர் ஒருவரை பிரதமர் தமது துணிவாலும், தீர்க்கதரிசனத்தாலும் தம் கீழ் அடிபணிய வைத்துவிட்டார்.

* * * *

நாட்டு மந்திரி சபையில் நிதி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் முதல்தடவையாக அவிசாவளைத் தொகுதிக்கு விஜயம் செய்த டாக்டர் என். எம். பெரேராவிடம், முக்கிய தொழிற்சங்கவாதியொருவர் சமர்ப்பித்த மகஜரில், 'உத்தியோக மொழிச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடாத்த உழைக்குமாறு' கோரப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் அவற்றைக் கவனிப்பதாக வாக்குறுதியளித்துள்ளார்.

—பத்திரிகைச் செய்தி

* * * *

'மூன்று சமசமாஜத் தலைவர்கள் கூட்டரசாங்கத்தில் சேர்ந்து, மந்திரிகளாக விசுவாசப் பிரமாணம் எடுத்ததுடன், லங்கா சமசமாஜக் கட்சி பௌத்த மதத்தைத் தழுவிக்கொண்டது' என்று சமூக, கலாச்சார விவகார மந்திரி திரு. டி. எஸ். குணசேகரா பிக்குகளுக்கான ஆஸ்பத்திரியின் கூரை வேயும் நிகழ்ச்சியையொட்டிய கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டத்துக்கு வண. மதின்னகொட நந்த நாயக்க தேரோ தலைமை வகித்தார்.

மந்திரி மேலும் கூறியதாவது: 'நாங்கள் இல்லாத போதும், பௌத்த மதத்தின் அபிவிருத்திக்காக உழைப்பதற்கு இப்பொழுது சமசமாஜக் கட்சியும், அதன் தலைவர்களும் இருக்கின்றனர். பௌத்த மதத்துவாகையை அவர்கள் உயர்த்திப் பிடிப்பரென்பதில் எனக்கு ஐயமில்லை. பௌத்தர்கள் என்ற முறையில், நாம் எல்லோரும் அவர்கள் பௌத்த மதத்தைத் தழுவியதையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும்.'

கூட்டரசாங்கத்தினால் எவ்விதத் தீங்கும் விளையுமெனத் தான் கருதவில்லையெனவும் அவர் கூறினார். பௌத்தத்துக்கு எதிரான நடவடிக்கை ஏதாவது ஏற்படின், அதை எதிர்ப்பதில் தான் முதலாவதாக நிற்பாரெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

'நாட்டின் அபிவிருத்திக்காகச் சேவை செய்யாததன் மூலமே மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த உண்மையைத் தொழிலாளவர்க்கத் தலைவரான டாக்டர் என். எம். பெரேராவும் அவரது கட்சியினரும் நன்குணர்ந்துள்ளனர். அதனால்தான், அவர்கள் தொழிலாளர்களை வேலைநிறுத்தத்தில் ஈடுபட வேண்டாமென்று கேட்கிறார்கள்.' இவ்வாறு திரு. குணசேகரா கூறினார்.

### சிங்களத் தலைவர்கள் புகழ் மாலை

# தமிழ் பணி புரியும் சிங்களச் சாமியார்

சிங்களவராய்ப் பிறந்து தமிழ் வளர்க்கும் பணியில் ஈடுபட்டுவரும் கத்தோலிக்க மதகுருவான வணக்கத்துக்குரிய குருகுல சூரிய யோண் எட்வின் பெர்னாண்டோ குருத்துவப்பட்டம் பெற்று இன்று 25வது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறார். நீடுழி வாழ்ந்து தமிழன்னைக்கு சேவை செய்ய வாழ்த்துகிறோம்.

வீரமாமுனிவர், போப்பையர் என்ற பிறநாட்டு மதபோதகர்கள் தம் மதபரிபாலனத்துடன் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் அயராது தொண்டாற்றினர். இன்று அப்பெரியார்களின் அளவு இல்லாவிடினும் தம்மாலியன்றவண்ணம் தமிழ்ப்பணி செய்துவரும் ஒரு சிங்களப் பாதிரியாரை நம் தமிழ்மக்கள் பலர் அறிந்திருக்கமாட்டார்கள். அவர்தான் குருகுல சூரிய யோன் எட்வின் பெர்னண்டோ.

கத்தோலிக்க மதபோதகரான இப்பெரியார் தாம் குருத்துவ அந்தஸ்தில் இணைந்த இருபத்தைந்தாம் ஆண்டு விழாவை இன்று கொண்டாடுகின்றார். இத்தருணத்தில் அத்தமிழ் தொண்டரைப்பற்றி சிறிது தெரிந்துகொள்வது அவசியம்.

நீர்கொழும்பு இவரது தாயகம், ஐந்தாவது வகுப்பு வரை தாயமொழியான சிங்களத்தைக் கற்றார். பெற்றோரின் இடமாறுதல் காரணமாக, அங்கு வீட்டுச்கு அண்மையில் இருந்த தமிழ் பாடசாலையில் தயக்கமின்றி சேர்ந்து கல்வியைத்தொடர்ந்தார். இச்செயலே இவர் தேனினுமினிய தமிழில் நன்கு தேர்ச்சியடையச் செய்தது.

இளைஞர் எட்வின் தமது உயர்தரக் கல்விக்காக நீர்கொழும்பு மாறிஸ் ரெல்லா கல்லூரிக்கு சென்றார். அங்கு அவர் மும் மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றார்.

கல்லூரியில் பயிலும் போதே இவருக்கு இறைவனின் பணியில் ஆர்வம் பிறந்தது. எனவே கல்லூரிப் படிப்பு முடிந்ததும் குருத்துவ பயிற்சிக் கல்லூரியில் இணைந்தார். பயிற்சி முறைகளில் எவ்வித குறையுமின்றித் தேறி 1939ம் ஆண்டில் ஒரு கத்தோலிக்க குரு ஆனார்.

### தமிழ்த் தொண்டு

தமிழ் மொழியிற் போல தமிழ்க் கலைகளிலும் அபிமானம் கொண்டவர் இக்குரவர். தமிழன்னைக்கு அவர் அணிந்த மாலைகளுள் மிகப் பெரியது பம்பலப்பிட்டி சென்ற். பீட்டர்ஸ் கல்லூரியில் அவர் நடாத்திய ஒரு பெரும் நிகழ்ச்சியாகும். இக் கல்லூரி மிகப் பெரிய அளவில் நடாத்திய 'பன்—ஓ—ரமா' களியாட்ட விழாவின் பொருளாளராக கடமையாற்றினார் எங்கள் குரவர். அக்களியாட்டத்தில் ஒரு நாளை தமிழ்த் தினமாகக் கொண்டாடத் திட்டமிட்டு, தமிழ் விழாக்களெதற்கும் சளைக்காத முறையில் நடாத்தி முடித்தார். தொலைக்காட்சியில் (டெலிவிஷன்) ஒளிபரப்பப்பட்ட இந் நிகழ்ச்சிகட்கு சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமை தாங்கினார். சுவாமியவர்கள் இந்துப் பிரமுகர்களிடையே பெற்றிருக்கும்

(13-ம் பக்கம் பார்க்க)

# கிளைகள் அமைக்க மாணவர் மன்றம் முடிவு

இலங்கை வாழ் தமிழ் பேசும் மாணவர்களுடைய கல்வி இதர முன்னேற்றங்களை அடிப்படை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட மாணவர் மன்றம், தமிழ் பிரதேசங்கள் பூராவிலும் கிளைகள் அமைப்பதில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. அடுத்த வாரத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாடு பூராவும் மன்றத்தின் தலைமை நிலையப் பிரநிதிகள் பிரசாரம் செய்வதில் ஈடுபடுவார்கள் என்று தெரிகிறது.

தமிழ்ப் பிரதேசங்களுக்கு சிங்கள ஆசிரியர்களை அனுப்புவதால் ஏற்படக் கூடிய விளைவு பற்றிய பிரச்சினை இவர்களின் பிரசாரக் கூட்டத்தில் முக்கிய இடம் பெறும் என்று மன்றத்தின் முக்கிய பிரமுகர் ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

பிரசார வேலைகள் முக்கியமாக சர்வகலாசாலை மாணவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளதாம். இதுவரை சர்வகலாசாலைகளிலும், கொழும்பு மாவட்டத்திலும், மலைநாட்டின் சில பகுதிகளிலும் கிளைகள் அமைக்கப்பட்டு விட்டதாகவும், யூலை மாத முடிவிற்குள் வடகிழக்கு மாகாணம் பூராவும் கிளைகள் நிறுவப்பட்டுவிடும் என்றும் மன்றப்பிரமுகர் தெரிவித்துள்ளார்.

மன்றத்தின் நோக்கம் பற்றி அப்பிரமுகர் தெரிவித்துள்ளதாவது: தமிழ் பேசும் மாணவர்களுடைய கல்வி இதர முன்னேற்றங்களுக்காக உழைத்தல்; தமிழ் மாணவர்களுக்கு அரசியல் அறிவைப் போதித்தல்; அசட்டை செய்யப்பட்ட பிரதேசங்களிலுள்ள தமிழ் மக்கள் மத்தியிலுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றுவதற்கு முயற்சி செய்தல்; நாட்டில் ஒரு தமிழரசை நிறுவுவதற்கு இயன்றதைச் செய்தல; ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்க இயன்ற வரை உழைத்தல். இந்த நோக்கங்களைச் செயல் படுத்த மன்றம் உழைக்கும் என்றும் அதற்கு நாடு பூராவிலும் உள்ள மாணவர்களை ஒன்று படுத்துவதே முதல் நோக்கம் என்றும் தெரிவித்துள்ளார்.

### சிங்களத்தில் காசோலை எழுத அதிகாரம்

சிங்களத்தில் காசோலை எழுதுவதற்கும் அதில் சிங்களத்தில் கையொப்பமிடுவதற்கும் அதிகாரம் அளித்து நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், திணைக்களங்களின் தலைவர்களுக்கும் திறைசேரி ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

ஆங்கிலத்தில் காசோலை எழுதப்படும்போது எடுக்கப்படும் எல்லா பாதுகாப்பு நடவடிக்கைகளும் சிங்களத்தில் எழுதும் காசோலைகள் விஷயத்திலும் எடுக்கப்பட வேண்டுமென இச் சுற்றறிக்கை கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நட்பின் தெய்வீகத்தை விளக்கும் சித்ரா புரடக்ஷன்ஸ்

# தெய்வத்தின் தெய்வம்

பணக்காரியான கண்மணியும் ஏழையான அன்னமும் அன்பினல் பிணைக்கப்பட்ட இணைபிரியா சிநேகிதிகள். இவர்களுடைய சினேகம் அறுந்து போகாமல் காப்பாற்றப்படுகிறது. ஆனல் இடையிலே எதிர்பாராத வகையில் சோகப் புயல் வீசுகிறது. ஆனல் கதையிலோ 'வில்ல'னுக்கு வேலையில்லை.

நட்பின் உயர்ந்த தத்துவத்தை மிக உயர்ந்த முறையில் எடுத்துக்காட்டும் சின்னஞ் சிறு கதை. அனுவசியமான எந்த நிகழ்ச்சியும் புகுத்தப்படாமல், தங்கு தடையின்றி செல்கிறது கதை. திரையைவிட்டுக் கண்களை அகற்ற முடியாத வகையில் காட்சிகளைக் கோபாலகிருஷ்ணன் அமைத்திருக்கிறுர்.

விஜயகுமாரி, ரங்கராவ், புதுமுகம் மணிமாலா, ராஜேந்திரன் ஆகியோர் முறையே நடிப்பின் இலக்கணத்தை நமக்குப் புலப்படுத்துகின்றனர். மற்றும் சிரிப்பூட்டும் பாணியில் நாகேஷும், மனோரமாவும் ஈடுபட்டுள்ளனர். சந்தியா, ராஜம்மா, ரி. கே. பாலச்சந்தர் முதலானேரும் நடித்துள்ளனர்.

தமிழ்ப் படங்களில் இதுவரை காணுதவகையில் ஒரு காட்சியினை டைரக்டர் நமக்குக் காட்டி விடுகிறுர். சகல துறையிலும் மேம்பட்டு விளங்கும் இப்படத்தின் புனிதத்துக்குத் திருஷ்டி கழிப்பதுபோல் இக்கட்டம் சற்று ஆபாசமாக அமைந்து விட்டது. ஆண் வேடம் புனைந்துவரும் விஜயகுமாரியும் பெண்ணுக விளங்கும் மணிமாலாவும் தங்களை மீறி—(டைரக்டரின் — தயாரிப்பாளர்களின் ஆக்ஞைக்கு உட்பட்டோ என்னவோ) கட்டிப்புரண்டு விகார உணர்ச்சியை வெளிப்படுத்தியிருக்க வேண்டாம். ஆனல் அந்தக் கட்டத்தில் விஜயகுமாரியிடம் பிச்சை வாங்க வேண்டும்—ஆண்கள்.

ஒளிப்பதிவாளர் கர்ணன் உயர்ந்த முறையில் பதிவு செய்துள்ளமையைப் பாராட்டாமலிருக்க முடியாது. மறைந்த இசை மேதை ஜி. ராமநாதனின் இசையும் உயிரூட்டுகிறது.

கே. எஸ். கோபாலகிருஷ்ணன் திரைக்கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புடன் வளர்ந்த சித்திரா புரொடக்ஷன்ஸ் 'தெய்வத்தின் தெய்வம்' கடந்த சில ஆண்டுகளுக்குள் பார்த்தவைகளுள் மிகச் சிறந்த படம் என்பதே எமது கருத்தாகும். இலங்கை இரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதலை இப்படம் பெறும்—குறிப்பாகப் பெண் இரசிகர்களின் கண்ணீர் இந்தக் கலாசிருஷ்டிக்குப் பெரும் காணிக்கையாகும் என்பது திண்ணம்.

—நாதன்



## நாடகப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாண இரசிகர்களிடமிருந்து கிடைத்த வாக்கு விபரங்களின் முடிவுகளை இங்கே தந்துள்ளோம். ஏனைய இடங்கள் அடுத்த வாரம் பிரசுரமாகும்.

**சிறந்த நாடகம்:**

| | |
|---|---|
| திப்பு சுல்தான் | 179 |
| காதலா கடமையா? | 128 |
| நளதமயந்தி | 104 |

**நடிகர்:**

| | |
|---|---|
| எஸ். லோகேஸ்வரன் | 164 |
| சிவ அன்பு | 114 |
| கணபதிப் பிள்ளை | 112 |

**நடிகை:**

| | |
|---|---|
| சாந்தகுமாரி இராமநாதன் | 140 |
| யோகா இராசையா | 72 |
| வி. மகாலட்சுமி | 64 |

**கதாசிரியர்:**

| | |
|---|---|
| தேவன்-யாழ்ப்பாணம் | 174 |
| ரி. ஏ. மூர்த்தி | 161 |
| எஸ். கிறிஸ்ரி | 89 |

**நகைச்சுவையாளர்:**

| | |
|---|---|
| ராதாரமணன் | 158 |
| ஆர். எஸ். பாபு | 94 |
| சூசைப்பிள்ளை | 88 |

**இயக்குநர்:**

| | |
|---|---|
| எஸ். ரி. அரசு | 197 |
| தேவன்-யாழ்ப்பாணம் | 138 |
| ஏ. ரி. பொன்னுத்துரை | 122 |

**தயாரிப்பாளர்:**

| | |
|---|---|
| கலைவாணர் நாடகமன்றம் | 186 |
| உதயசூரியன் நாடகமன்றம் | 97 |
| இலங்கைநாயகி நாடகமன்றம் | 76 |



## கானூன்

(இந்தி)

நீதிபதியாக இருந்து கொலை வழக்கை விசாரித்தவரே, அதே கொலையைச் செய்த கொலைக் குற்றவாளியாகக் குற்றஞ்சாட்டப்படுகிறுர். குற்றஞ்சாட்டுபவர் வேறு யாருமல்ல. நீதிபதியினுடைய அன்பு மகளை மணக்கப் போகிறவன். அவனும் அரசாங்க வக்கீல்.

இத்தகைய ஒரு துணிகரமான கதை அமைப்பைக் கொண்டதுதான் 'கானூன்'. பி. ஆர். சோப்ராவின் தலை சிறந்த தயாரிப்பான இப்படம் இப்பொழுது சென்ட்ரல் திரையில் காட்சியளிக்கிறது.

விறு விறுப்பாகக் கதை செல்கிறது. பாதிக்குமேல் வழக்கு விசாரணை—நீதிமன்றம். மொழி தெரியாச் சிக்கலால் விசாரணை புரியாமல் திண்டாட வேண்டி ஏற்படுகிறது. இதைத் தவிர நாம் படத்தில் எக்குறையையும் கூற முடியாது.

அற்புதமான இசையமைப்பு இருப்பினும், ஒரு பாடல் கூட இடம் பெறவில்லை.

ஒரு ருஷ்ய ஆடலழகியுடன் கோபிகிருஷ்ணு, மாதுரி ஆகியோர் அளிக்கும் நடனம் நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது.

அசோக்குமார், நந்தா, ராஜேந்திரகுமார் முதலியோர் நடிக்கின்றனர்.

— நாதன்

## மின்சார வெட்டினல் படப்பிடிப்பு பாதிப்பு

சென்னையிலுள்ள ஸ்டுடியோக்கள் பலவற்றுள் வேலைகள் ஸ்தம்பித்துவிட்டன. மே மாத ஆரம்பத்திலிருந்து தொடங்கிய இந்த ஆமை வேக முன்னேற்றம், இப்பொழுது உயர்சக்தி மின்சார வெட்டினல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

சென்னை தியேட்டர்களிலும் இப்பொழுது தினசரி ஒரே ஒரு காட்சிதான் படம் காண்பிக்கப்படுகிறது. வழக்கமாக இத்தியேட்டர்களில் மூன்று காட்சிகளும் ஞாயிற்றுக்கிழமைகளில் 4 காட்சிகளும் நடைபெறும். வரட்சி மேலும் நீடிக்குமானல் இம் மின்சார வெட்டும் நீடிக்கும்.

## ஜப்பானியர் கட்டவிருக்கும் சொர்க்கம்

வட இந்திய தயாரிப்பாளரும் டைரக்டருமான ஓ. பி. ரம்ஹான் தயாரிக்கும் ஈஸ்ட்மன் கலர்படமான "பூல் அவுர் பத்தர்" (மலரும் கல்லும்) என்னும் இந்திப்படத்தில் சொர்க்கலோகக் காட்சி ஒன்றை அமைக்க ஜப்பானிலிருந்து நிபுணர்கள் வருகிறுர்கள். மீனுகுமாரி சொர்க்கலோகம் செல்லும் காட்சி ஒன்றுக்காகவே பல இலட்ச ரூபாயில் இக் கட்டம் தயாரிக்கப்படுமாம்.




## முத்தமிழ் விழா

இலங்கைச் சட்டக் கல்லூரி தமிழ் மன்றத்தினரின் முத்தமிழ் விழா கடந்த (21-6-64) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் சரியாக பிற்பகல் 5-30 மணிக்கு ஆரம்பமாகியது. மன்றத் தலைவர் திரு. ந. சிவகுமாரன் சகலரையும் வரவேற்றுப் பேசுகையில், "சட்டக்கல்லூரியில் முத்தமிழையும் வளர்ப்பதற்கு ஏற்ற அளவு எமக்கு வசதியும் சந்தர்ப்பமும் இல்லையாயினும், முத்தமிழில் ஒன்ருன இயற்கலை நன்கு வளர்கிறது" என்று கூறினர்.

தலைவரின் வரவேற்புரையைத் தொடர்ந்து 'தமிழில் நீதி பரிபாலனம் சாத்தியமா?' என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெற்றது. தமிழில் நீதி பரிபாலனம் சாத்தியம் என்று திருவாளர்கள் ந. சி. சிறீதரன், மு. திருநாவுக்கரசு, மு. ஹ. ஜெளபர் ஆகியோர் வாதிட்டனர். அவர்களின் கருத்தை மறுத்து திருவாளர்கள் தில்லை க. திலகன், அ. கெங்காதரன், க. குணரத்தினம் ஆகியோர் வாதிட்டனர். என்றுலும் தமிழில் நீதி பரிபாலனம் சாத்தியம் என்று வாதிட்டவர்கள் கனமான கருத்துக்களை நயமாக எடுத்துரைத்து பொது மக்களின் ஆதரவைத் தம் பக்கம் ஈர்த்துக் கொண்டனர். ஜனப் மு. ஹ. ஜெளபரின் வாதமும், அவர் முன் வைத்த கருத்துக்களும் மாற்றுக் கட்சியினரை நிலைகுலைய வைத்ததுடன் பட்டி மன்றத்திற்கும் சிகரமாக அமைந்திருந்தது.

பட்டி மன்றத்தை அடுத்து நடைபெற்ற செல்வி கெளரீஸ்வரி கனகரத்தினத்தின் இசை விருந்து பட்டி மன்றத்தினுல் ஏற்பட்டிருந்த வெப்ப நிலைக்கு இளம் தென்றலாக அமைந்திருந்தது. செல்வி பத்மினி தகநாயகா அவர்களின் நடன விருந்து இரசிகர்கள் எதிர்பார்த்திருந்த அளவிற்கு சோபிக்கவில்லை. கல்லூரி மாணவர்களின் 'உண்மையே அன்றி வேறில்லை' என்னும் நாடகமும் நடைபெற்றது. (விமர்சனம் அடுத்த இதழில் வெளியாகும்.) மன்றச் செயலாளர் ஜனுப் அ. ஆ. மு. பாருக் நன்றி கூறினர்.

### நடந்தவை

**முல்லைக் குமரி, மலர் விழி**

திமிலை நளினகலா மன்றத்தினரின் "முல்லைக் குமரி", "மலர் விழி", ஆகிய நாடகங்கள் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் 1-6-64லிலும், திமிலைதீவில் 8-6-64லிலும் அரங்கேற்றப்பட்டன. இவ்விரு நாடகங்களுக்கான கதை வசனம் பாடல்களை எழுதி இயக்கியவர் கவிஞர் திமிலைத்துமிலன்.

**சீலாமுனை இளைஞர் மன்றம்**

6-6-64ல் மட்டக்களப்பு சீலாமுனை இளைஞர் மன்றத்தினர் 'அன்பின் முடிவு' என்ற சமூக நாடகத்தையும், வடமோடி நாட்டுக் கூத்து ஒன்றினையும் அரங்கேற்றினர்.

**'நவீன அரிச்சந்திரா'**

சரணவாய் தெற்கு சந்திர கலா மன்றத்தினர் 6-6-64ல் சம்பூர்ண நவீன அரிச்சந்திரா நாடகத்தை நடித்துக் காண்பித்தனர்.

திருவாளர்கள் க. சின்னவன், சி. செல்வன், க. சின்னத்தம்பி, நா. மாணிக்கம், க. சிவபாதம் ஆகியோர் முக்கியபாக மேற்று நடித்தனர். சங்கீத பூஷணம் திரு. கந்தையா இந்நாடகத்தை இயக்கினர்.

### நடக்கவிருப்பவை

## மீண்டும் யமன்

சிவசக்தி கலை அரங்கு கடந்த மாதம் நடாத்திய முத்தமிழ் கலை விழாவில் நடைபெற்ற 'நட்டாசடின்றி இளைப்பாறும் யமன்' என்ற நாடகத்தை மீண்டுமொரு முறை மேடையேற்ற அரங்கின் செயலாளர் திரு. ஆர். ஜெகசோதி முயற்சித்து வருகிறுர்.

## 'மாஸ்டர்-மாணிக்கம்'

இந் நாடகம் 28ம் திகதி திருக்கோணமலை சென். ஜோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் 'கதிரவன் இரண்டாவது ஆண்டு மலர்' வெளியீட்டு விழாவின் போது மேடையேற்றப்படவுள்ளது. இந் நாடகத்தில் வீ. இராஜேந்திரம், கவிஞர் மலைமதி, பு. துரைசிங்கம், ந. சிறீஸ்கந்தராசா, பொன்முடி, புரட்சி பாலன் ஆகியோர் நடிக்கவிருக்கின்றனர். இதன் இயக்குநர் பொறுப்பை வீ. இராஜேந்திரம் அவர்கள் கவனித்து வருகிறுர்கள்.

## ஸ்ரீதர் பவனி

'காதலிக்க நேரமில்லை' படத்தை வெற்றிப்பவனி வரவிட்ட ஸ்ரீதர், 61 பேர்களைக் கொண்ட ஒரு கோஷ்டியுடன் வைகை அணைக்கட்டில் பவனி வருகிறுர். கடந்த 17-ம் திகதி இக் குழுவினர் வைகை அணையில் படப்பிடிப்பை மேற்கொண்டனர். வேடம் புனைந்த எவரையுமே நமக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. எல்லோரும் புதியவர்கள்.

"கண்ணன் என்னும்
மன்னன் பெயரை
சொல்லச் சொல்ல
கள்ளும் முள்ளும்
பூவாய் மாறும்
மெள்ள மெள்ள..."

சுசீலாவின் மெல்லிசை காற்றிலே மிதக்கிறது. புதுமுகங்களான ஸ்ரீகாந்த், ஜெயலலிதா ஆகியோர் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டன. புதுமுகம் சுஜாதாவும் பங்கு கொண்டார்.

இது ஸ்ரீதரின் சித்ராலயா புரொடக்ஷனின் 5-வது தயாரிப்பாகும்.

## யாழ். கலை அரங்கு

யாழ். கலை அரங்க நிதிக்காக 5—7—64 காலை 10 மணிக்கு கொட்டாஞ்சேனை கெயிட்டி பட மாளிகையில் 'சாரதா' திரையிடப்படுகிறது. கைத் தொழில் உதவி அதிகாரி திரு. எஸ். இராமச்சந்திரன் தலைமை தாங்குகிறுர்.

நடந்தவை
நடக்கவிருப்பவை
கலைப் பூஞ்சோலை,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானல்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

மையான நினைப்பிலே இலக்கியப் பகுதியிலே கவிதைச் 'சிறப்பாய்வை'த் திருப்தியாகச் செய்து முடித்தேன்.

பிற்பகலிலும் அதே முறுவல். ஆனால் அந்த முறுவல் தன் இலக்கண விடைகளிலே ஐயப்பாட்டை ஏற்படுத்தி விட்டது போகட்டும்.

எனக்குப் பாடங்கள் முடிந்துவிட்டன. அரசினர் கல்லூரிப் பக்கம் எனக்கென்ன வேலை இனி?

ஆனால் கோட்டைமுனைப் பாலத்தில் கால் குத்தினேனோ இல்லையோ அந்தக் கிறுக்கன் கந்தசாமி, அவள் என்னைக் காத்து நிற்கிறாள் என்றானே!

அவன் சொன்னது போல; அவள்தான், அந்த வேப்பின் ஓரமாக நின்றிருந்தாள். மனம் கிளு கிளுத்துக் கிடந்தது. உடலெல்லாம் ஒருவித புல்லரிப்பு: ஆனால் இதயமும் சற்று வேகமாகத்தான் அடிக்க ஆரம்பித்தது. அவளை நெருங்கிவிட்டேன். மிதிவண்டியிலிருந்தும் இறங்கிவிட்டேன். அவள் என்னை நோக்கி வந்தாள். எப்படிப் பேசுவது? என்ன பேசுவது? எதைப் பேசுவது. சே, நாம் பேசாமல் இருந்துவிட வேண்டியதுதான். அவளே பேசட்டும். என்ன பேசுவாள்? படம் பார்ப்பவள் தானே; அப்படித் தன் இதயத்தைத் திறந்து சொல்லப் போகிறாளா?

சே படம்வேறு வாழ்க்கை வேறு: அவள் பெண்: வெளிப்படையாகச் சொல்ல வெட்கப்படுவாள்: பேச முடியாமல் திணறுவாள். நாணிக் குழைவாள். அப்போது நான் அவளை...அ, ஆமாம்; அவள் பெயர்? அது கூடத் தெரியாதே..ம்,கேட்டு விடலாம்.

நெருங்கியே வந்து விட்டாள். இனி என்ன வேண்டியிருக்கிறது? அவளே என்னையடைய வருகிறாள். நான் பாக்கியவான். ஆவலோடு அவளை நோக்கினேன். அதே போல மகிழ்ச்சிக் கூத்திடும் விழிகளால் அவளும் நோக்கினாள்.

'உங்களைத்தான்; வெகு நேரமாகக் காத்து நிற்கிறேன். உங்களுக்கு இன்றைக்கு'......

'இல்லை எல்லாம் நேற்றோடு முடிந்துவிட்டது.'

'உங்களிடம்...' அவள் ஆரம்பித்தாள். எனக்கு அமுதமான வார்த்தை, அவள் வாயாலேயே சொல்லப் போகிறாள்.

'எனக்கு...' அவள் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி கொட்டத் தொடங்கினாள். ஆனந்தம் தாங்க முடியவில்லை. அதன் மேலும் உள்ளத்தை அடக்க முடியவில்லை.

'ஆ! அப்படியா? எனக்குத் தெரியும்...' நான் ஆனந்தத்தில் மிதந்தேன். அவள் இன்னும் தொடர்ந்தாள்.

'......ஒருவரை அறிமுகம் செய்து வைக்க நீண்ட நாளாக ஆசை......' அவள் யாரையோ அழைக்கத் திரும்பினாள். எனக்கு உலகமே சுழன்றது. இமயத்தின் உச்சியிலிருந்து அதல பாதாளத்தில் உருட்டிவிட்டதுபோல......என்ன! மிதிவண்டியோடு விழுந்தே விடுவேனா? சமாளித்துக் கொண்டு இன்னும் தான் நின்றிருந்தேன்.

அவள் 'நடேஸ்!' என அழைத்தாள். ஒரு வாலிபன் மோட்டார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு முன்னேறினான். என்பக்கம் அவள் திரும்பினாள்.

'உங்களுக்கு இவரை முன்பே தெரியுமா? இவர் சொல்லவில்லையே?...' என்றாள். 'அ...இல்லை...' நான் திக்குமுக்காடினேன். செத்தவீட்டு உணர்வோடு எனது ஐம்பொறிகளும் இயங்கின. அவள் அவனை அறிமுகமாக்கினாள். அவன் கை கூப்பினான். சம்பிரதாயத்துக்கு நானும் கூப்பினேன்.

அவள் தொடர்ந்தாள்... 'இவர்வந்து...' முடிக்க முடியாமல் நாணமாக விரலைக் கடித்தாள்..., எங்க மாமா மகன்...உங்களைப் போல கதை எழுதுவதில் ஒரே பைத்தியம். அதுதான் உங்களுக்கு அறிமுகமாக்க வரச் சொன்னேன். இவர் பல்கலைக் கழகத்திலே கடைசி வருடத்தில் படிக்கிறார்...' அவள் சொல்லிக்கொண்டே போனாள். செயலிழந்த செவிகளும் அவற்றை வெறுப்போடு வாங்கின.

'உங்கள் கதைகளை ஒன்று விடாமல் படிப்பேன்...... யாரோ உங்கள் கதைகளை நடைச் சித்திரம் என்று எழுதினார்களே!......'

'...ஓம் எழுதினார்கள்...'

'அப்போ நாங்கள் வருகிறோம்.' அவள் சொன்னாள்... அவனும் கரம் கூப்பினான். அவள் சிரித்தாள்; பதிலாக நானும் சிரித்தேன்.

இருவரையும் சுமந்தபடியே மோட்டார் சைக்கிள் நெடுதூரம் சென்று மறைந்தது. இருள் கவ்வும் வரை நான் அசையாமல் நின்றிருந்தேன்.

# சங்கப் பலகை

## காலத்தின் குரல்கள்

தொகுப்பாசிரியர்: கலா பரமேஸ்வரன்

வெளியீடு: பல்கலை வெளியீடு, பேராதனை

விலை: ரூபா 1-25

காலத்தில் குரல்கள்--ஒன்பது கதைகள். நவரசங்களா, நவக்கிரகங்களா, நவரத்தினங்களா? இல்லை. இலக்கியத்தில் இன்று செல்வாக்கு மிகுந்த துறைப் படைப்புகள்.

இக்கதைகளில் — சின்னக் கடையில் மீன் வியாபாரம் செய்யும் திரேசம்மா, மீன் பிடிக்கும் கந்தையன், வேலைக்காரி ரோசலின், கூலி வேலைக்காரனின் கைம்பெண் தெய்வானை, தோட்டத் தொழிலாளி பார்வதி, தோட்டத் தொழிலாளி ஒருத்தியின் குழந்தை, கள் இறக்கும் கந்தர், தோட்டக்கார சுப்பையர், சாராயங் காய்ச்சும் பொன்னு — பாத்திரங்கள், நாயக நாயகிகள். யதார்த்த அழுத்தத்தின் எதிரொலியோ? சுற்றி நடக்கிறவற்றை ஊன்றி அவதானித்தபோது மனதில் படித்தவையோ? எப்படியிருந்தாலென்ன? இவர்களைம் பற்றி எழுதக்கூடாது என்று சட்டமில்லையே! ஒன்பதிலும் ஒரு ஒற்றுமை, அவ்வளவுதான்.

மேலும்-இழிசனர் வழக்கு (இச் சொற்றொடர் எல்லோருக்கும் புரியும் என்று நினைக்கிறேன். இக் கதைகளில் வரும் பாத்திரங்களைக் கூட இழிசனர் என்று நான் கூறவில்லை) தண்ணீர் பட்டபாடு. மண் வளமா, தேசியமா? கதை சொல்வோன் கூட கொச்சைத் தமிழைத் தானா பயன்படுத்த வேண்டும்? எந்த அளவுக்கு பேச்சுத் தமிழ் சுவைக்கும், தேவை என்பதில்லையா? ஆகாது என்பதல்ல. அளவு எது? அவதான சக்தியின் பார்ட்சையா, சிறுகதைப் படைப்பு? குந்தவை மட்டும் இததொகுதியில் கட்டுமட்டாகப் பேச்சு வழக்கைப் பயன்படுத்திய ஆசிரியை எனலாம். ஏனையோர்?

நல்லவை—நான்கு.

பெற்றுப் பெற்று சாகக் கொடுத்த திரேசம்மா தங்கம்மாவின் பிள்ளை மீது கொண்ட பாசத்தால், முலைப்பால் விற்றுச் சீவிப்பவள் என்று நையாண்டி பண்ணப்பட்ட பின்பும், குழந்தையின் கண்ணுக்கு மருந்தாக முலைப்பால் அளிப்பது பரராஜசிங்கத்தின் விளாம்பழத்தில். உருக்கமான கதை. சின்னக்கடை வாழ்க்கையும் பேச்சும் அப்பட்டமாகப் படம் பிடிக்கப்பட்டுள்ளன. (வேசா என்று பேசுகிறது உட்பட) 'ஆத்திரம் சந்தனம் அறைக்கிறது'. என்ன? அதுவும் சின்னக்கடையில். 'குழந்தையைக் கடைசித் தடவையாகக் கண்குளிரப் பார்த்துவிட்டு' என்னும்போது படபடக்கும் வாசகரின் நெஞ்சு கடைசி வரையில் 'போட்டு வாறன்' என்னும் போது நிம்மதி பெறும். அது கிடக்கட்டும். முலைப்பால் அளிக்க, திரேசம்மாவுக்கு ஒரு கைக் குழந்தையிருக்க வேண்டுமே அதைப் பற்றிய பேச்சைக் காணோம்.

நொந்து போன குடும்பம் கள்ளச் சாராயத்தால் மிதப்பதும், பணத்தைக் கரைத்து விட்டுச் சாராயக் கந்தர் மறியலுக்குப் போவதும் மனைவி பொன்னு அதே வழியில் படுகுழியில் வீழ்வதும், விதானையாரின் மிரட்டலும், மூத்த பெண் தங்கத்தின் கற்பு அழிவதும், கல்யாணம் தடைப்படுவதும் கலா பரமேஸ்வரனின் உதிரியில். மது-மங்கை—வரிசை சரி.

மனிதாபிமானத்தினால் கடலில் சாக இருந்த இரு கள்ளத்தோணிகளைக் கந்தையன் காப்பாற்றுவதும் அதற்காக மறியலுக்குப் போவதும் குந்தவையின் மனிதத்துவத்தில். ஏமாற்றப்படும் இந்தியரின் பரிதாப நிலையைப் பச்சையாகக் கூறுகிறது.

தாயுடன் பஸ்ஸில் ஏறிய குழந்தை காற்றாடியைத் தவறவிடுவதும், கண்டக்டர் மிச்சக்காசு ஐந்து சதமில்லை என்பதும், ஒரு சதத்தோடு விளையாடிய குழந்தை அதை சாளர இடுக்கில் இழந்துவிட்டு ஏமாறுவதும் செல்வ பத்மநாதனின் அசைவில். வர்ணனை போலத் தோற்றம். ஆனால் சிறுகதை வடிவத்தின் மிடுக்கு. கவர்ச்சியுடன் மிளிர்கிறது.

அன்பின் அணைப்பில் இருபத்தைந்து சதத்துக்கு வழியில்லாத தாய் குழந்தைகளை அடிக்கிறாள், பச்சாதாபப் படுகிறாள். நாட் குறிப்புப் போல உள்ளது. அணைப்பில் மகன் செய்த குற்றத்துக்குக் கடுமையாகத் தண்டித்த தந்தை இரங்குகிறார். ஒரு சிறிய சம்பவம். சிறுகதை? 'யாழ்ப்பாணத்துத் தண்ணீர் போல களங்கமில்லாதது'. அர்த்தம்? அபிமானமா?

சாதிக் கதைகள் இரண்டு. வர்க்கபேதம், தொழிற் பிரிவு அடிப்படை. செம்பியன் செல்வனின் பாரம்பரியம் சிறு குழந்தைகளுலகிலும் வர்க்க பேதத்தை நுழைக்கிறது. குழந்தை மனோதத்துவத்துக்கு முரணாகப் படுகிறது. நெருப்புச் சுட்டதால் வேலு அலறும் போது மற்றக் குழந்தைகள் சிரிப்பது— வாழைப்பழத்தில் சறுக்கி விழும் ஹாஸ்யம் போல— வர்க்க பேத உணர்ச்சியல்ல. [illegible] அவனுலகை மீறி நிற்கின்றன. செங்கை ஆழியானின் சாதி சாதியை நிலைக்கச் செய்து அதனால் பிழைப்பு நடத்துவோருக்கு நல்ல சாட்டையாக அமைந்த போதிலும், அதில் வரும் உலக அனுபவம் மிக்க கந்தர் கடைசி வரை முருகேசுவின் போலித்தனத்தை உணராதவராயிருந்தார் என்பதை நம்பமுடியவில்லை.

காலமென்னும் பெரு வெள்ளத்தில் பல சுழிப்புகள் ஏற்படும்வரை 'அக்காவுட கொழந்தையை' மறந்திருந்த ரோஸலின் ஒரு குழந்தையைக் கண்டதும் மாறிவிடுவது சுக்ரியின் கழுவாயில். குளிக்கும் தொட்டி நிரப்பப்படவில்லை என்று மனிதன் வெறிநாயாவதும் அதிலேதான். தத்துவ விசாரத்தில் இறங்கியதனால் முன்னுரையும் பின்னுரையும் நீண்டு சிறுகதையின் கட்டுக் கோப்பு குலைந்து, சீர்திருத்த நோக்கமிருந்தாலும், கவர முடியாத காரணத்தால் அதிலும் வெற்றி பெறாமல் முடங்குகிறது.

மொத்தத்தில் — இத் தொகுதி காலத்தின் குரல்களல்ல, காலத்தின் குரல் தான்— ஏகோபித்து ஒலிக்கிறது, ஒரே சுருதியில்— காலத்துக்கு ஏற்றதும் கூட.

— "சயம்"

# தமிழ் பணி புரியும்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வாக்குக் காரணமாக பல பெரிய சைவப் பிரமுகர்களின் புதல்விகள் இத்தினத்தில் பரதநாட்டியம் போன்ற கலை நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்தமைஇங்கு குறிப்பிடத்தக்கது.

### இனக்கலவரத்தின் போது

1958ம் ஆண்டின் வகுப்புக் கலவரத்தின் போது அடிகளார் கும்பெனித் தெருவில் கடமையாற்றினார். அப்போது இராணுவம், பொலிசார் என்பவர்களோடு ஒத்துழைத்து அப்பகுதியிலிருந்த தமிழ் மக்களைக் காப்பாற்றியமையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

இவர் எங்கு கடமையாற்றினாலும் அப்பகுதியிலுள்ள மாணவ, மாணவிகள் இவரைத் தங்கள் அன்புத் தந்தையாக மதித்து சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இவரிடம் வந்து உரையாடித் தங்கள் இன்ப துன்பங்களைச் சொல்லி ஆறுதலடைந்து போவது வழக்கம். இவ்விதம் சுவாமியாரிடம் வரும் மாணவ மாணவிகளுள் கத்தோலிக்கர் அல்லாதவர்களே அதிகமாகும். சிறப்பாக தமிழ் மொழி பேசுவோரையே குறிப்பிடலாம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற விரிந்த மனப்பான்மை கொண்டவர் இவர். பிறமதப் பிரமுகர்களுடன் எவ்வித துவேஷமுமின்றி உறவாடுபவர். கிறிஸ்து காட்டிய அன்பு வழியே நடந்து யாவருடனும் சகோதரத்துவ சமரச மனப்பான்மையுடன் ஒழுகுபவர். இதன் காரணமாக இவர் எங்கு கடமையாற்றினாலும் அப்பகுதியிலுள்ள பிற சமய குருக்கள், பிரமுகர்களெல்லாம் இவருடன் இணைபிரியா நட்பு கொண்டிருப்பதைக் காணலாம்.

### வாழ்க பல்லாண்டு

ஆஜானுபாங்கான தோற்றம், அதற்கேற்ற கம்பீரமான தொனி, மும்மொழிகளிலும் சொற்பெருக்காற்றும் ஆற்றல், நிர்வாகத் திறமை, கலைத்திறமை இன்முகம் காட்டி இனிமையாக உரையாடும் ஆற்றல், தீயோரையும் அணைத்து நல்வழிப் படுத்தும் சக்தி, தமிழன்னையிலும், அவள் தம் புத்திரிலும் பெரும்ஈடுபாடு-அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவண. எட்வின் பெர்னாண்டோ அடிகளார்இன்று தாம் குருத்துவத்தில் இணைந்த வெள்ளி விழாவைக் காண்கிறார். அடிகளாரின் சேவை இன்னும் பல்லாண்டுகள் எமக்குக் கிடைக்க வேண்டுமெனவும் பரம்பொருளை வேண்டுவோம்.

—சா. பெ.

# சுயமதிப்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட இலக்கிய வாழ்க்கைத் தொடர்பு—

சுயமதிப்பீட்டில் கிடைத்த வெற்றி—

இவை எழுதத் தூண்டின.

### பிறப்பு

எடுத்த எடுப்பில், அனுப்பிய இரு வாரங்களில் சுதந்திரனில் பிரசுரமான (1953ல்) இஸ்லாமியக் கட்டுரையை முதல் எழுத்தாகக் கொள்வதா?

காத்தான்குடி மத்தியக் கல்லூரி சிரேஷ்டவகுப்பினுள் 'சுதந்திரன்' சகிதம் பிரவேசித்த தமிழ்ப் பண்டிதர், அன்றையப்பாடமாக (1954ல்) படிப்பித்த 'பங்கய மென்றெண்ணிப் பாவை முகத்தில் மொய்த்த மதுகரம்' என்ற-முதல் எழுதிய, இலக்கியக் கட்டுரையை முதல் எழுத்தோவியமாகக் கொள்வதா?

சற்று நிதானிக்கவேண்டியிருந்தாலும், தினகரனில் பிரசுரமான 'இருள்' சிறுகதையை முதலாவது எழுத்தோவியமாகக் கொள்வது அர்த்த பூர்வமானது.

### சூழல்

நான் வாழும்கிராமத்தின் அக வாழ்வையும் புற வாழ்வையும் ஊடுருவிப் பார்க்காமல் இருக்க முடிவதில்லை. இஸ்லாமிய நெறியும் சீலமும் பிறழாது பாடுபட்டுழைத்து, மக்களைப் படிப்பித்துக் குமர்களைத் தகுதிக்கேற்ற பௌசு பாக்கியங்களுடன் வாழவைக்கும் விதவைகளை அன்றுடங்காண முடிகிறது.

### வரலாறு

பராய மறிந்த நாட் தொட்டு மனத்திற் புடமிட்டுக் கிடந்த இவ்வவல வாழ்க்கைக்கு இலக்கிய அந்தஸ்து வழங்கவேண்டுமென்ற அவா முகைவிட்டுக் கொண்டேயிருந்தது.

கவிஞர் நீலாவணனும், எம். ஏ. நுஃமானும், சி. பி. சத்திய நாதனும் 'வசந்தம்' சஞ்சிகை வெளியிடமுயன்று கொண்டிருந்த காலம். வசந்தத்தில் பிரசுரமாகவிருந்த ஒரு கதைக்கு நான் வரைந்த படத்தைப் பார்க்க என்வீட்டுக்கு வந்த கவிஞர் நீலாவணன்,

'தம்பி நீர் புதுமைப் பித்தனுக்கு நிகரான வசன நடைகைவந்தவன். சிறுகதை எழுதிப்பாரும் நிச்சயம் வெற்றியைத் தரும்' என்றார்.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு என் மனதில் கருக்கொண்டிருந்த சம்பவத்தை அவரிடம் சொன்னேன். கவிஞர் குதித்தெழுந்தார்.

'அருமையான சம்பவம். கதை நல்ல வெற்றியைத் தரும். முடிவும் கச்சிதமானது. தம்பி நீ எழுது. நான் வசந்தம் முதலிதழிலேயே பிரசுரிக்கிறேன்" என்று கூறி உற்சாகந் தந்தார். 'இருள்' பிறந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர் கதை:

# சோலை மண்டபம்

—'மாவிட்டபுர ஆனந்தன்'—

## (9)

'அழாதீர்கள். உங்களை என்னுற் காப்பாற்ற முடியும்.'

இவ்வாறு, உணவு கொண்டு வரும் அந்த மனிதன் சொன்னபோது, போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

'சிரச்சேதத்திலிருந்து எம்மைக் காப்பாற்ற முடியுமா? அது எப்படி? சீக்கிரம் சொல்லுங்கள்'— நான் அவசரப் படுத்தினேன். 'சொல்கிறேன், இங்கே வாருங்கள்' என்று கூறி, இருட்டறையின் ஒரு மூலைக்கு என்னை அழைத்துச் சென்ருன் அவன்.

'இதோ, சுவரின் அடிப் பாகத்தைப் பாருங்கள். வட்ட வடிவமான சின்னஞ் சிறியதோர் வாயில் இருக்கிறதல்லவா? இது ஓர் சுரங்கப்பாதையின் வாயில். இதன் வழியாகப் புகுந்து சென்று இன்று இரவோடிரவாகத் தப்பிக்கொள்ளுங்கள். சரிதானே?'—இவ்வாறு கூறிவிட்டு விளக்கொன்றையும் என் கையில் கொடுத்தான். பின்னர்......வழக்கமான ஒரு புன்சிரிப்பு-போய் விட்டான்!

நாங்கள் ஐவரும் சுரங்கப் பாதையின் வழியே நடந்து கொண்டிருந்தோம். வழியில், தங்கத்தினுற் செய்யப்பட்ட பெட்டியொன்று எம் கருத்தைக் கவர்ந்தது. அதனை எடுத்து மெல்லத் திறந்தேன். அதற்குள் வேருெரு தங்கப் பெட்டி இருந்தது. அதையும் திறந்தேன். பின்னரும் ஒரு பெட்டி! இப்படியே ஐந்து பெட்டிகளைக் கடந்த பின், ஏட்டுச் சுவடி எம் கைக்கு அகப்பட்டது.

இவ்வளவு பத்திரப்படுத்தி வைத்திருக்கிறபடியால், அந்த ஏட்டுச்சுவடியில் ஏதோ இரகசியச் செய்திகள் இருக்க வேண்டுமென்று பட்டது. நின்ற நிலையிலேயே முழுவதையும் படித்து முடித்தேன். ஆம்; என் ஊகம் சரியாகத்தான் இருந்தது. நாங்கள் முன்பு பார்த்த சோலையினுள் ஒரு மண்டபம் இருந்ததல்லவா? அந்த மண்டபத்தின் மர்மத்தை விளக்கும் ஏட்டுச் சுவடிதான் நான் படித்து முடித்தது! 'சோலை மண்டபமும் அதன் மந்திரத் துவக்கும்' என்பதுதான் நூலின் பெயர்.

## (10)

எனக்கோ மகிழ்ச்சி பொங்கி வந்தது. ஏட்டிற் குறிப்பிட்டிருக்கும் 'மந்திரத் துவக்'கை எப்படியும் கைப்பற்றி விட வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

'இந்த மந்திரத் துவக்கின் முன் எதிரிகள் எவரும் சஞ்சரிக்க முடியாது. அவர்கள் அனைவரையும் ஒரு நொடியில் சுட்டு வீழ்த்திவிடும்' என்று ஏட்டிற் குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனுலும், அந்தத் துவக்கை அடைவது அவ்வளவு சுலபமாகப் படவில்லை. எத்தனையோ பயங்கரமான தடைகள் குறுக்கிட்டு வரும், அவற்றையெல்லாம் வெற்றிகொள்ள வேண்டுமே!

'எதிரிகளை வெல்ல வேறு வழி ஏதும் இல்லாவிட்டால் தான், இந்த 'மந்திரத் துவக்கு' மன்னனுல் உபயோகிக்கப்படும்' என்று ஏட்டிலே எழுதியிருந்தது. 'மந்திரத் துவக்'கைக் கைப்பற்றும் முயற்சியில் எமக்கு வந்த முதலாவது தடை, மலை போன்ற இரு காவலாளிகள். அவர்களைப் பார்த்தாலே உடல் நடுக்கம் பிடிக்குமாம். சோலை மண்டபத்தின் வாயிலிலேயே எந்நேரமும் அவர்கள் நின்றுகொண்டிருப்பார்களாம். அவர்களை வெல்ல உள்ள ஒரே ஒரு வழி இனிய சங்கீதம்தானென்பதை ஏட்டின் உதவியால் அறிந்துகொண்டேன். எனக்கு நல்லாகப் பாட வரும். இது எனது அதிர்ஷ்டமேயென எண்ணிக் கொண்டே நண்பர்களுடன் சுரங்க வழிப் பிரயாணத்தைத் தொடரலானேன்.

என்ன ஆச்சரியம்! சுரங்க வழியானது எங்களை நேரே சோலை மண்டபத்தின் அருகிலேயல்லவா கொண்டு வந்து விட்டது! அதன் இரண்டு காவலாளிகளும் எம் கண்களுக்குத் தெரிந்தனர். ஐயையோ......எத்தனை பயங்கர உருவம்! எங்கள் ஐவருக்குமே நடுக்கம் தொட்டது. நான் பாடலை மறந்து போய்விட்டேன், பயத்தினுல்!! என்ன கொடுமை! அந்த இருவரும் எங்களைக் கண்டுவிட்டு, மூசி மூசி வருகிருர்களே!! எம்மை என்ன செய்வார்களோ...... தெய்வமே, என்னுடைய பாடல் நினைவுக்கு வரமாட்டேனென்கிறதே...ஆ!

(தொடரும்)

## பொன் மொழிகள்

கெட்டவனுய் இருந்தாலும் ஒருவன் அதை அறிந்தோ அறியாமலோ உனக்கு மதிப்புக் கொடுத்து நடந்தால் நீ அதைப் பிரயோசனப்படுத்தி உன்னைத் திருத்திக்கொள். இதுவே உனக்குக் கிடைத்துள்ள முதலாவது சந்தர்ப்பம்.

ஃ

உன்னை ஒருவன் மதித்து நடக்க வேண்டுமென்று நீ விரும்பினுல், முதலில் நீ மற்றவர்களை மதித்து நடக்கக் கற்றுக் கொள்.

ஃ

ஒருவன் மற்றவர்களின் வளர்ச்சியைப் பாதித்து, அவர்களைச் சிறுமைப்படுத்தித் தான் முன்னுக்கு வரத் திட்டம் செய்தால் அவன் தன்னைத்தானே இழிவு செய்கின்ருன் என்பது பொருள்.

## கொக்குப் பறக்குது!

—செ. குணரெத்தினம்—
மட்டக்களப்பு

மழை வருகுதடா—இடி
'மத்தளம்' கேட்குதடா
குளக் கரையினிலே – நாரைக்
கொக்கு நிற்குதடா!

பாய்ந்து செல்லுதடா—மீன்கள்
பயந்து பாயுதடா
சாய்ந்து பார்க்குதடா!—கொக்கு
சலித்துக் கொள்ளுதடா!

"கிட்டவரல்லையே!—மீன்கள்
கெட்டுப் போச்சடா
எட்டப் போகுதே—மீன்கள்
என்ன பிறப்படா?

காலம் மாறிய—இந்த
'கலி'யுகத்திலே.
கேவலமிந்த—மீன்கள்
கெட்டுப் போச்சடா"

என்று மனதிலே—கொக்கு
எண்ணிக் கொண்டதோ?
நின்றிடாமலே—அது
பறந்து செல்லுதே!

# புதுமைகள் பாரீர் பாரினிலே-(7)

—அன்ரனி பெர்னுண்டோ, கிரிலப்பனை—

## காற்றிலே காசு பறந்ததடா!

மாலை ஆறு மணிக்கு ஆரம்பமாகும் சினிமாப் படத்தைப் பார்ப்பதற்குச் சனங்கள் பகலிலிருந்தே ஒவ்வொருவராகப் படமாளிகையில் வந்து கூடுகிருர்கள். நேரம் நெருங்கும் போது படமாளிகை நிறைந்துவிடுகிறது. படம் முடிந்தவுடன் சனங்கள் ஒவ்வொருவராக வெளியேருமல் ஒரேயடியாகக் கலைந்து செல்வதைக் காண்கிருேம்.

"இதைப் போன்றதே செல்வமும். அது வரும் போது கொஞ்சம் கொஞ்சமாக வந்து சேருகிறது. போகும் போது ஒரேயடியாக அழிந்து போகிறது" என்று சொல்கிருர் தெய்வப் புலவர் திருவள்ளுவர். கொஞ்சம் கொஞ்சமாக செல்வத்தைச் சம்பாதிப்பதற்கும் மனிதன் எவ்வளவோ பாடுபடவேண்டியிருக்கிறது. செல்வம் சும்மா வராது. சுலபமாகவும் அதைப் பெற முடியாது. இது யாவரும் அறிந்ததே.

நிலைமை இப்படி இருக்கும்போது ஒருமுறை லண்டன் மாநகர வீதியொன்றில் பண நோட்டுகள் காற்றிலே பறந்தன. அதுவும் எல்லாம் ஒரு பவுண் நோட்டுகள், கைக்கு எட்டும் உயரத்தில் பறந்தன.

சும்மா வரும் காசை யார்தான் விடுவார்கள்! ஒன்றன்பின் ஒன்ருக வேகமாய் ஓடிக்கொண்டிருந்த கார்களும் பஸ்களும் இந்தப் புதுமையான காட்சியைக் கண்டு திடீரென நின்றன. கார்களில் இருந்தவர்களும் பஸ் பிரயாணிகளும் நான் முந்தி, நீ முந்தியென்று வெளியே குதித்துத் துள்ளி ஓடினர். பறந்துகொண்டிருந்த நோட்டுகளை மேலே பாய்ந்து எட்டி எட்டிப் பிடித்தனர்.

இது ஒருபுறமிருக்க, வண்டிகள் திடீரென நின்றதால் நான்கு கார்கள் ஒன்ருேடொன்று மோதி நொறுங்கிவிட்டன. அதோடு இன்னும் எத்தனையோ சிறு சிறு விபத்துகளும் ஏற்பட்டன. அந்தச் சுறு சுறுப்பான வீதியில் போக்கு வரத்துத் தடைப்பட்டுவிட்டது.

இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு இரண்டு பொலீஸ் கார்களில் பொலீசார் வந்தனர். அவர்கள் நீண்ட நேரமாக. மிகுந்த சிரமப்பட்டுத்தான் போக்குவரத்தை ஒழுங்கு செய்ய முடிந்தது.

அந்த வழியால் வேகமாகப் போய்க்கொண்டிருந்த ஒரு மோட்டார் வானின் கதவு திடீரென்று திறந்துகொண்டது. அப்போது உள்ளே இருந்த ஒரு பவுண் நோட்டுகள் வெளியே காற்றில் பறக்க ஆரம்பித்துவிட்டன. நடு ரோட்டில் நோட்டுகள் பறக்கக் காரணம் இதுதான். பின்னர் இந்த நோட்டுகள் எல்லாவற்றையும் எடுத்தவர்களிடமிருந்து திருப்பி வாங்கி விட்டார்கள். ஆத்திரமும் அவசரமுமாக ஆவலோடு எடுத்த காசை திருப்பி கொடுக்கும்போது மனதிற்கு எவ்வளவு வருத்தமாக இருந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ?

# கதைப் பாட்டு

—(பூனையும்-எலிகளும்)—

—மட்டுநகர் முத்தழகு—

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார்
மற்றெல்லாம் தொழுதுண்டு
பின் செல்பவர்"

என்னும் பாடலைப் போல், 'மத்திமபுரம்' என்னும் கிராமத்தில் வாழும் மக்கள் எல்லோரும் படித்துப் பட்டங்கள் பெற்றிருந்தும் உயர் பதவிகளில், தங்களைத் தியாகம் செய்யாமல் உழவுத் தொழிலையே தங்கள் குலத் தொழிலாகப் போற்றி வளர்த்தனர். இவர்களிலே பாலிப் போடியாரும் ஒருவர். ஒரு நாள், பாலிப் போடியார் அறுவடை செய்து மலை மலையாகக் குவித்து வைத்திருந்த நெற்குவியல்களை எலிகள் புகுந்து தின்னத் தொடங்கின. இதையறிந்த போடியார் எலிகளைப் பிடிக்க பூனையொன்றை வளர்த்து வந்தார்.

அந்தப் பூனையோ:-

ஓடியாடி வேட்டை ஆடிடும்
ஒன்று, இரண்டு, எலியைச்
சாடிடும்!—எலிகளோ...

வாடிவாடி வளையில் தூங்கிடும்
வயிறுகாயக் குந்தி ஏங்கிடும்,
—ஒருநாள்...

எலிகளெல்லாம் ஒன்று கூடியே
எதிரியாரின் அன்பை நாடின,
—அதனுல்...

பூனையாரும் எலி பிடிப்பதைப்
பூரணமாய் நிறுத்தி விட்டதே!
—சமரசமுயற்சியால்...

பூனையும் எலி பிடிப்பதை நிறுத்திவிட்டு போடியாரின் சோற்றைத் தின்று வருகையில் போடியாரும் திடீரென இறந்து விட்டார். பூனைக்கும் வயிறு காயத் தொடங்கியது. "பூனை பசித்தாலும் நெல்லைத் தின்னுமா?" என்றபடி எலிகளிடம் கொண்ட 'அன்பு' அகோரப் பசியாக மாறியதால், எலிகளும் அச்சம் கொண்டு மீண்டும் மகாநாட்டைக் கூட்டி அதில் நிறைவேறிய தீர்மானங்களைப் பூனையிடம் போய் முறையிட்டன:-

"பூனையண்ணு பூனையண்ணு
ஒன்று கூடினேம்
புதியசேதி ஒன்றுகூற
உம்மை நாடினேம்
ஆனையண்ணு ஆனையண்ணு
நாங்கள் சொல்வது
அனுதினமும் ஒருவராக
வந்து சாகிறேம்
கருணையண்ணு கருணையண்ணு
காட்டுவீர் எம்மேல்
கடவுளைப்போல் எம்மினத்தைக்
கூட்டுவீர் மண்மேல்
ஆருமற்ற அனுதையான
எங்கள் வாழ்வினில்
அன்னையைப்போல் ஆதரித்தே
அருளைப் பாலிப்பீர்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### கூட்டுறவுக் கட்டிடச் சங்கம்

வடமராட்சியில் கூட்டுறவுக் கட்டிடச் சங்கம் ஒன்று அமைப்பது பற்றி ஆராயும் பொதுக் கூட்டம் நெல்லியடி கட்டிடக் கலையியல் பயிற்சிக் கல்லூரியில் திரு. பொ. செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

ஸ்தாபன அமைப்புப் பற்றி நெல்லியடி பட்டின சபைத் தலைவர் திரு. வே. சு. பொன்னையா பேசினார். 'கூட்டுறவும் தொழிலும்' பற்றி யாழ் தொழிற் பகுதி உத்தியோகத்தர் திரு. ஏ. மகாசிவனும், 'கட்டிடக் கலையும் பயனும்' பற்றிக் கட்டிடக் கலையியல் கல்லூரி அதிபர் திரு. ஆ. சின்னத்துரையும் உரையாற்றினார்கள். கூட்ட முடிவில் ஆரம்ப செயற்குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

—

### பருத்தித்துறை இன்பத் தமிழ் மன்றம்

பருத்தித்துறை இன்பத் தமிழ் மன்றத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் திரு. ஞானம் அல்போன்ஸ் தலைமையில் நடைபெற்றது.

திரு. வி. அருமைநாயகம், ஆசிரியர் திரு. கே. சோமசுந்தரம் ஆகியோர் மன்ற வளர்ச்சி பற்றி உரைநிகழ்த்தினர்.

பின்வருவோர் இவ்வாண்டிற்குரிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. வி. அருமைநாயகம், உப தலைவர்: திரு. ஞானம் அல்போன்ஸ், செயலாளர்: திரு. மு. நடராசா, துணைச் செயலாளர்: கே. சுரேந்திரன், பொருளாளர்: கே. கணபதிப்பிள்ளை, துணைப் பொருளாளர்: எஸ். நவரத்தினம், 'மாலைமதி' ஆசிரியர்: வ. தங்கராசா. நாடகக் குழு: எம். நடராசா, ஞானம் அல்போன்ஸ், சி. அம்பலவாணர்.

பதினொரு பேரடங்கிய நிருவாக சபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

—

### இரத்தினபுரியில் வள்ளுவர் மன்றம்

இரத்தினபுரி வாழ் கலையார்வமிக்கவர்களிடத்தில் எழுத்துத்துறை, நடிப்பாற்றல், பேச்சுத் திறன், விளையாட்டு முதலியவற்றை ஊக்குவிப்பதற்காகவும் இலவச திருக்குறள் வகுப்புகள் நடாத்திப் பணி புரிவதற்காகவும் அண்மையில் வள்ளுவர் மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதற்குத் தலைமை வகித்த திரு. தா. இராமலிங்கம் அவர்கள் மன்றத்தின் நோக்கங்களைப் பற்றி விபரமாக எடுத்துக் கூறினார். தோட்டங்கள்தோறும் கிளை மன்றங்கள் நிறுவித் தொண்டு செய்ய வேண்டுமென்றும் முடிவாகியது.

மன்றத்தின் நலனைக் கவனிப்பதற்காக அடியிற் கண்டோர் அலுவலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

தலைவர்: திரு. அ. பிலிப், துணைத் தலைவர்: திரு. சி. திருநாவுக்கரசு, பொதுச் செயலாளர்: திரு. த. இராமலிங்கம், துணைச் செயலாளர்கள்: திரு. வை. பரமேஸ்வரதாசன், திரு. ரெ. குப்புசாமி, பொருளாளர்: திரு. ச. முனியாண்டி, துணைப் பொருளாளர்: திரு. க. தம்பு, வரவு செலவுக் கணிப்பாளர்: திரு. எஸ். இராசமாணிக்கம்.

செயற்குழுவினராக திருவாளர்கள்: மு. பொன்னம்பலர், ஆ. லோகேஸ்வரன், எஸ். பெருமாள் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

### தமிழரசுத் தந்தையின் கடிதம்

காரைதீவு சனசமூக நிலையங்களின் சமாசக் காரியதரிசி திரு. க. கா. ஆறுமுகம் காரைதீவுக் கிராமத்தின் பல தேவைகளையிட்டும் தமிழரசுக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சென்றமாதம் பேச்சுவார்த்தை நடாத்தினார். இதன்பயனாக தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் அவர்கள் காரியதரிசிக்குப் பின்வரும் கடிதத்தை அனுப்பியுள்ளார்:-

இன்று காலை நிந்தவூர்த் தொகுதிப் பிரதிநிதி அவர்கள் எமது வேண்டுகோளுக்கிணங்கி எங்களை வந்து சந்தித்தார். உங்கள் பிரச்சினைகளையிட்டு அவருடன் பேசியபோது அவர் கூறினவையாவன:-

1. உங்கள் கிராமத்திற்கு மின்சார விநியோகம் செய்வதற்கு உங்கள் கிராமச்சபை நிலவரி ஏற்படுத்த வேண்டுமாம். இதைச் செய்தவுடன்தான் அரசாங்கத்திடமிருந்து உடனே உங்களுக்கு மின்சார விநியோகத்திற்கு வேண்டிய கடன் பெற்றுத் தருவதாகச் சொன்னார்.

2. உங்கள் கிராமத்தில் உள்ள மகாவித்தியாலயத்திற்கு ஒரு விஞ்ஞான ஆய்வுக் கூடம் அமைத்துக் கொடுப்பதாக அரசாங்கம் தனக்கு வாக்களித்திருப்பதாகச் சொன்னார். நானும் அதைக் கவனித்து வேண்டிய நேரத்தில் உங்கள் பிரதிநிதியை தூண்டிவிடுகிறேன்.

3. உங்கள் கிராமத்தில் ஒரு பிரசவ விடுதி உண்டாக்குவதற்கு சில சிக்கல்கள் இருப்பதாகத் தெரிகிறது. அதாவது இரண்டரை மைலுக்குள் இருக்கும் கல்முனைக் கிராமததிலும் தெற்கே இரண்டு மைலுக்குள் இருக்கும் நிந்தவூர் கிராமததிலும் ஒவ்வோர் பிரசவ விடுதி இருப்பதால் அரசாங்கம் உங்கள் கிராமத்தில் பிரசவ விடுதி அமைப்பதற்குப் பின் வாங்குகிறது. உங்கள் கிராமம் ஓர் தமிழ் கிராமம் என்றும், கல்முனை, நிந்தவூர் முஸ்லிம் கிராமமாய்இருப்பதாலும் தான் எவ்வாறாயினும் முயன்று அரசாங்கத்திடமிருந்து உங்கள் கிராமத்திற்கு ஓர் பிரசவ விடுதி அமைத்துத் தருவதாகக் கூறினார். இதுவிடயத்தில் தானும் முயற்சிப்பேன்.

4. இடுகாடு சம்பந்தமாகவும் பல சிக்கல்கள் இருப்பதாகவும் தெரிகிறது. இருந்தபோதிலும் தன்னாலானதைச் செய்து தருவதாகவும் கூறியுள்ளார்.

காரை தீவைப் பற்றியும் கிராம மக்களைப்பற்றியும் எமக்கு நன்றாகத் தெரியும். காரைதீவு மக்களுக்கு அல்லது கல்முனைக்குத் தெற்கே இருக்கின்ற தமிழ் பேசும் மக்களுக்கும் வேண்டிய உதவி செய்ய நாங்கள் பின் நிற்க மாட்டோம். உங்களுக்கு இருக்கும் விடயங்களைப் பற்றி எங்களுக்கு அறிவியுங்கள். தாங்கள் சில வேளைகளில் உடனே நடவடிக்கை எடுக்காவிடினும் [illegible] படியோ செய்ய [illegible] யதைச் செய்யத் தெண்டிப்போம்.

### புத்தூர் தமிழரசு கட்சிக் கிளையின் விசேட கூட்டம்

ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் புத்தூர் தமிழரசுக் கட்சி கிளைத் தலைவர் திரு. க. சின்னத்துரை தலைமையில் புத்தூர் தமிழரசுக் கட்சிக் கிளையின் விசேட செயற்குழுக் கூட்டம் நடை பெற்றது. தலைவர் தமது முன்னுரையின் போது, தமிழரசுக் கட்சி ஆவணி மாதம் நிலாவெளியில் நடத்தவிருக்கும் தேசிய மகா நாட்டுக்கு இங்கு இருந்து நூற்றுக் கணக்கான தொண்டர்கள் செல்ல வேண்டுமெனக் கூறினார்.

பின்னர் அமரர் திரு. வன்னிய சிங்கம் அவர்களின் ஞாபகார்த்த தினத்தைச் சிறுப்பிட்டியில் கொண்டாடுவதெனவும் போப்பாய் மாவட்டத் தமிழரசுக் கட்சிக் கிளையை ஆடி மாதம் முடிவதற்கு முன்னர் அமைக்க ஒழுங்குகள் மேற்கொள்வதாகவும், ஆகவேண்டிய ஒழுங்குகளை புத்தூர் பகுதி தமிழரசுக் கட்சிக் கிளைச் செயலாளர் திரு. வெ. கணபதிப்பிள்ளை கோப்பாயிலுள்ள கட்சி ஆதரவாளர்களுடன் தொடர்பு வைத்து கட்சி மாவட்டக் கிளை அமைக்க ஆவன செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. இத்துடன் கூட்டம் முடிவுற்றது.

—

### இலங்கை ம. பொ. சி. மன்றம்

இலங்கை ம. பொ. சி. மன்றம் 6-6-64 அன்று கொழும்பு மெயின் வீதியிலுள்ள ஜ. தொ. கா. மண்டபத்தில் வள்ளுவர் விழா வைக் கொண்டாடியது. திரு. த. மணி விழாவிற்குத் தலைமை வகித்தார்.

முதலாவதாக திரு.இராமசாமி 'வள்ளுவர்கண்ட ஜனநாயகம்' என்னும் பொருள் பற்றிப் பேசினார். வள்ளுவர் கண்டது மக்களாட்சி என்றும், மன்னனாட்சி அல்லவென்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

அடுத்து, இலங்கை ம. பொ. சி. மன்ற உப-தலைவர் திரு. இ. குணசீலன் பேசினார். அவர் பேசும்போது, உலகத்திலேயே சிறந்ததும், பழமையானதுமான மொழி தமிழ்மொழி என்றும்,வள்ளுவம இயற்றிய திருக்குறளே அத் தமிழ்மொழி பரவிய தற்கு விதை என்றும் குறிப்பிட்டார்.

அடுத்து, இலங்கை மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில் திரு. மயில்வாகனம் பேசும்போது, 'பாரதம் வீரர் விவேகானந்தர், கவிஞர் பாரதி, பாரதிதாசன், வள்ளுவர் போன்றவர்களையும், உலக ஜோதி திரு. ஜவஹர்லால் நேரு போன்ற அரசியல் தலைவர்களையும் உலகுக்கு அளித்திருக்கின்றது' என்றார்.

மற்றும் திரு. அப்பாஸ், திரு. ஆறுமுகம், திரு. தாமரைச்செல்வன், திரு. தங்கவேலு, திரு. முத்துராமன் ஆகியோரும் பேசினார்கள். தலைவர் திரு. த. மணி முடிவுரையின் போது, மொழிகளில் 'அ' எவ்வாறு முதலிடத்தை வகிக்கின்றதோ, [illegible] எல்லா உயிர்களும் ஆண்டவன் என்ற ஒரு குடையின் கீழ் இயங்குகிறதென்றார்.

முற்காலத்தில் கற்பு பெண்களின் ஆபரணம் என்றும், அந்தத்தமிழ்நாட்டுப் பெண்கள் தங்கள் கணவனையே கண்கண்ட தெய்வமாகத் தொழுதார்கள் என்றும்கூறினார். ஆகவே வள்ளுவருக்கு விழா கொண்டாடுவது மிகவும் குறிப்பிடத்தக்கதென்றார்.

கடைசியாக மன்ற உப-செயலாளர் திரு. இராமன் நன்றியுரை கூறினார். இலங்கை ம. பொ. சி. மன்றத்தின் சார்பில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதாவது தன்னலம் கருதாது, பிறர் நலம் கருதி இவ்வுலக வாழ்வைவிட்டு உயிர் நீத்த தியாகி ஜவஹர்லால் நேரு அவர்களின் நினைவுச் சின்னமாக ஒரு சிலையை கொழும்பு செட்டித்தெரு சந்தியில் நிறுவுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

—

### மூதூர் முதல்வரின் கிராம விஜயம்

மூதூர் முதல்வர் ஜனாப். எம. ஈ. எச். முஹம்மதலி, கடந்த மூன்று தினங்களாக ஈச்சலம்பத்தை, கருக்காமுனை, மாவடிச்சேனை, தோப்பூர், பெருவெளி,மல்லிகைத்தீவு, மூதூர், தெஹிவத்தை, பாலத்தோப்பூர் ஆகிய கிராமங்களுக்கு விஜயஞ்செய்து மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் குறைகளை அறிந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பும்கொண்டு, குறைகளை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

மூதூரில் ஆலிம் சேனை-வண்ணான்சேனை கிராமமுன்னேற்றச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்திலும், அக்கரைச்சேனை மீன் பிடிச் சங்கக் கூட்டத்திலும் பங்குபற்றினார்.

இறுதியில் மூதூர் அக்கரைச்சேனை மீன்பிடிச் சங்கத்தினர் ஜனாப். முஹம்மதலிக்கு இராப்போசன விருந்தும் அளித்தனர்.

—

### திருகோணமலை சிரேஷ்ட மாணவர் சங்கம்

#### சித்திரப்போட்டி

சென்ற வியாழக்கிழமை 11-6-64 மாலை 6 30 மணியளவில் திருகோணமலை சிரேஷ்ட மாணவர் சங்கத் தலைவர் உயர் திரு. சிவலிங்சம் பி. ஏ., தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பாரதப்பிரதமர் நேரு அவர்களின் மரணம் குறித்து இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.மாணவர் சங்கத்தின் சார்பில் ஜூன் மாதம் ஓர் சித்திரப் போட்டி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டியில் இலங்கையடங்கிலும் உள்ள எல்லா மாணவர்களும் பங்குபற்றலாம். பங்குபற்றுவோர் 10 சத முத்திரையுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மாணவ சங்கத்தின் இவ்வருட அங்கத்தவர்களாகப் பின் வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்:-

போஷகர்: திரு. சி. நவரெட்ணராஜா, தலைவர்: திரு. எஸ் சிவலிங்கம் பி. ஏ., உபதலைவர்: திரு.ஆர். ஜெயராஜா, செயலாளர்: திரு. என். மகேந்திரன், உப-செயலாளர்: திரு. க. தர்மலிங்கம், பொருளாளர்: திரு. கு. துரைராஜா, உப-பொருளாளர்: திரு. கே. விநாயகமூர்த்தி.

சங்க அங்கத்தவர்கள்:- செல்வர்கள்: ஆர். தம்பிராஜா, ஆர். ராஜ்மோகன், கே. சண்முகதாசன், வி.எஸ். ராஜா, ம. சிவபாலன்.

போட்டியில் பங்குபற்றுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
'சித்திரப் போட்டி'
சிரேஷ்ட மாணவர் சங்கம்,
29, ஔவையார் வீதி,
திருகோணமலை.

—

### சிற்பக் கலைஞர் மறைவுக்கு அனுதாபம்

திருநெல்வேலியில்ஞாயிற்றுக்கிழமை (7-6-64) அன்று சிவபதமடைந்த சிற்பக் கலைஞர் விஸ்வப்பிரம்மஸ்ரீ வி. ஆறுமுகம் அவர்களின் குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்து, நல்லூரிலுள்ள அகில இலங்கைப் பொது ஜனசேவைச் சங்கம் ஒரு தீர்மானத்தை அனுப்பி வைத்துள்ளது.

—

### வவுனியாவில் கலை விழா

வவுனியா மாவட்ட பிரதேச கலா மன்றத்தினர் அளிக்கும் கலை விழாவும், கைப்பணிப் பொருட்காட்சியும் ஆனி மாதம் 26,27,28ம் திகதிகளில் வவுனியா நகர சபை முன்றலில் நடைபெறும். முள்ளியவளை இயல் இசை கலா மன்றத்தார் தயாரித்து அளிக்கும் நாட்டுக் கூத்து, நாடகம், நடனம் போன்ற நிகழ்ச்சிகளும், திறமை வாய்ந்த, கலைஞர்களின், நாதஸ்வர, மேள வாத்தியக் கச்சேரிகளும், பல்கலைக் கழகத்தாரின் 'நொண்டி' நாடகமும், கண்டி நடனமும் நடாத்தப்படும்.

இன்னும் கரகம், காவடி, நாட்டுப் பாடல், நாட்டுக் கூத்து ஆகிய நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

எம் நாட்டின் கைத்தொழில் அபிவிருத்தியைக் காட்டும் நெசவுப் பொருட்கள், மட்பாண்டப் பொருட்கள், பனை தென்னை உற்பத்திப் பொருட்களும் காட்சிக்கு வைக்கப்படும்.


## 'சுதந்திரன்'
### புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப் பட்டிருக்கிறது.

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கொலை......!


## பயங்கரப் படுகொலை....!

**யார் கொலையாளி.......?**

வழக்கை விசாரித்த நீதிபதியே குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறார்!
குற்றஞ் சாட்டுபவர் நீதிபதியின் மருமகன்!

சிக்கல் நிறைந்த மர்மச் சித்திரம்!

பி. ஆர். சோப்ரா அளிக்கும்

# கானூன் (இந்தி)

அசோக்குமார், ராஜேந்திரகுமார், மஹ்மூத், நந்தா, சஷிகலா
முதலியோர் நடித்தது.

(மருதானை) **சென்ட்ரல்** திரையில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

---

3வது ஜனரஞ்சக வாரம்!

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டக்களப்பு)
நெல்சன் (திருகோணமலை) ரீகல் (நீர்கொழும்பு)

கல்யாண் குமார்—தேவிகா
சந்திரபாபு - ராஜஸ்ரீ - புஷ்பலதா
மனோகர் - பி. எஸ். சரோஜா
எஸ். வி. சுப்பையா
மற்றும் பலர் நடித்த



மொடர்ன் தியேட்டர்ஸ்

# யாருக்கு சொந்தம்

---

எமது அடுத்த விருந்து!

எல்பின்ஸ்டன் ரெக்ஸி
மற்றும் 8 திரைகளில்!

எம். ஜி. ஆர், தேவிகா, வீரப்பா
மற்றும் பலர் நடித்த

# ஆனந்த ஜோதி

---

எதிர்பாருங்கள்!

சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
எஸ். வி. ரங்கராவ்-சந்திரபாபு
சாவித்திரி-தேவிகா-வி. கே. ராமசாமி
எம். வி. ராஜம்மா-சந்திரகாந்தா
நடித்த

# பந்தபாசம்

---



கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா [வெள்ளவத்தை]
நவா [கொம்பனிவிதி]
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
ராஜ் [நீர்கொழும்பு]

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, ரங்கராவ், நடித்த

# தெய்வத்தின் தெய்வம்

டைரக்ஷன்: கே. எஸ். கோபாலகிருஷ்ணன்
இசை: ஜி. ராமநாதன்

---

6வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பதுளை)

# நானும் ஒரு பெண்




டைரக்ஷன்: A.C. திருலோகசந்தர் M.A.
வசனம்: ஆரூர்தாஸ்
இசை: R. சுதர்சனம்

MB


இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டாருக்காக அவர்களது அச்சகத்தில் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1964-ம் வருடம் ஜூன் மாதம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org